
ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
ஐப்பசி
2020
274ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
**நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.**

**பொருள் :** தனது வலிமையைக் காட்டுவதற்குக் கோபத்தைக் கருவி என்று கொண்டவன் அவ்வலிமையை இழத்தல் கையை நிலத்தில் அறைந்தவன் துன்பம் அடைதல் தப்பாதது போலாகும். (307)

**இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று.**

**பொருள் :** பல சுடர் உடைய நெருப்பில் தோய்ந்தாற்போன்ற துன்பங்களை இழைத்த ஒருவன் நட்புக்கொள்வானாயினும் அவனிடம் கோபங்கொள்ளாதிருத்தல் நல்லது. (308)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

## ஏதும் இயம்ப மாட்டேன்

### கலிவிருத்தம்



இடையறா அன்பென எடுத்துநான் சொல்லேன்
கொடைகொடு விடுவெனக் கூறவும் மாட்டேன்
மடையரை ஞானியரை மதிக்கவும் மாட்டேன்
இடைமுதல் முடிவென இயம்பவும் மாட்டேன் 04

அஞ்சென ஆறென எட்டென அறியேன்
வஞ்சனை சூதென மனத்தினிற் குறியேன்
நஞ்சிது அமுதென நயக்கவும் மாட்டேன்
வெஞ்சினம் சஞ்சலம் விரும்பவும் மாட்டேன் 05

### அன்பாய் இருப்போம்

அன்பே சிவமென்று கிளியே! ஆன்றோ ருரைத்தார்கள்
ஆனமையால் நாங்கள் கிளியே! அன்பாய் இருப்போமே
இரப்பவர்க் கில்லையென்று கிளியே! எடுத்துநீ சொல்லாதே
ஈவது நன்மையெனக் கிளியே! எடுத்தவ்வை சொன்னாரே
சாவது வந்தாலுங் கிளியே! சத்தியம் மறவாதே
தேவர்கள் வந்தாலுங் கிளியே! சித்தங் கலங்காதே
தாய்சொல்லைத் தட்டாதே கிளியே! தந்தைசொல் மந்திரமே.

உ



ஸ்ரீ செல்வச்சந்நிதி உறையும் வேல்

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசேட தினங்கள் - 2021

**ஜனவரி**

**01.01.2021 மார்கழி 17 வெள்ளி**
மங்கள புத்தாண்டு ஆரம்பம்

**14.01.2021 தை 01 வியாழன்**
தைப்பொங்கல்

**23.01.2021 தை 10 சனி**
**அமரர் தி. மகேஸ்வரனின் ஞாபகார்த்தமாக நடைபெறும்**
கார்த்திகை உற்சவம்

**28.01.2021 தை 15 வியாழன்**
தைப்பூசம்

**பெப்ரவரி**

**19.02.2021 மாசி 07 வெள்ளி**
கார்த்திகை உற்சவம்

**27.02.2021 மாசி 15 சனி**
மாசி மகம்

**மார்ச்**

**11.03.2021 மாசி 27 வியாழன்**
மகாசிவராத்திரி
இரவு விசேட உற்சவமும்
நான்கு சாமப்பூசையும் நடைபெறும்

**22.03.2021 பங்குனி 09 திங்கள்**
**தவத்திரு முருகேசு சுவாமிகள் குருபூசை**
**சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.**

**ஏப்ரல்**

**13.04.2021 பங்குனி 31 செவ்வாய்**
**தவத்திரு முருகேசு சுவாமிகளின் ஞாபகார்த்தமாக நடைபெறும்**
ஆலய கும்பாபிஷேக தினம்

**14.04.2021 சித்திரை 01 புதன்**
தமிழ் இந்துப் புதுவருடம் (பிலவ)

**15.04.2021 சித்திரை 02 வியாழன்**
கார்த்திகை உற்சவம்

**26.04.2021 சித்திரை 13 திங்கள்**
சித்திரா பூரணை

**28.04. 2021 சித்திரை 15 ஞாயிறு**
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமான் கும்பாபிஷேக தினம்

**மே**

**12.05.2021 சித்திரை 28 புதன்**
கார்த்திகை உற்சவம்

**25.05.2021 வைகாசி 11 செவ்வாய்**
வைகாசி விசாகம்

**யூன்**

**08.06.2021 வைகாசி 25 செவ்வாய்**
கார்த்திகை உற்சவம்

**14.06.2021 வைகாசி 31 திங்கள்**
இரவு தீர்த்தமெடுப்பு

**21.06.2021 ஆனி 07 திங்கள்**
இரவு வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்

**ஆலய மகோற்சவ ஆரம்பம்**
**08.08.2021 ஆடி 23 ஞாயிறு**
**இரவு 08 மணிக்கு**
கொடியேற்றம்

**11.08.2021 ஆடி 26 புதன்**
ஆடிப்பூரம்

**17.08.2021 ஆவணி 01 செவ்வாய்**
பூங்காவனம்

**18.08.2021 ஆவணி 02 புதன்**
கைலாய வாகனம்

**20.08 2021 ஆவணி 04 வெள்ளி**
சப்பறம்

**21.08.2021 ஆவணி 05 சனி**
காலை தேர் உற்சவம்

**22.08.2021 ஆவணி 06 ஞாயிறு**
காலை தீர்த்த உற்சவம்
மாலை 05 மணிக்கு மௌனத் திருவிழா

**23.08.2021 ஆவணி 07 திங்கள்**
பூக்காரர் பூஜைத் தினம்



**யூலை**

**15.07.2021 ஆனி 21 திங்கள்**
கார்த்திகை உற்சவம்

**15.07.2021 ஆனி 31 வியாழன்**
ஆனி உத்தரம்

**ஆகஸ்ட்**

**02.08.2021 ஆடி 17 திங்கள்**
கார்த்திகை உற்சவம்

**08.08.2021 ஆடி 23 ஞாயிறு**
ஆடி அமாவாசை

**14.08.2021 ஆடி 29 சனி**
**ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமிகளின்**
**36ஆம் ஆண்டு குருபூசை**
**சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.**

**29.08.2021 ஆவணி 13 ஞாயிறு**
கார்த்திகை உற்சவம்

**30.08.2021 ஆவணி 14 திங்கள்**
குளிர்ச்சி அபிஷேகம்

**செப்ரம்பர்**

**25.09.2021 புரட்டாதி 09 சனி**
கார்த்திகை உற்சவம்

**ஒக்டோபர்**

**07.10.2021 புரட்டாதி 26 வியாழன்**
நவராத்திரி விழா ஆரம்பம்

**14.10.2021 புரட்டாதி 28 வியாழன்**
சரஸ்வதி பூஜை

**15.10.2021 புரட்டாதி 29 வெள்ளி**
விஜயதசமி

**23.10.2021 ஐப்பசி 06 சனி**
கார்த்திகை உற்சவம்

**நவம்பர்**

**04.11.2021 ஐப்பசி 18 வியாழன்**
தீபாவளி

**05.11.2021 ஐப்பசி 19 வெள்ளி**
கந்தசஷ்டி விரதாரம்பம்

**10.11.2021 ஐப்பசி 24 புதன்**
கந்தசஷ்டி விரதம், மாலை சூரசங்காரம்

**11.11.2021 ஐப்பசி 25 வியாழன்**
அதிகாலை பாரணை,
மாலை தெய்வயானை அம்மன் திருக்கல்யாணம்

**19.11.2021 கார்த்திகை 03 வெள்ளி**
திருக்கார்த்திகை உற்சவமும்,
நான்கு சாமப் பூஜைகளும் இடம்பெறும்

**டிசம்பர்**

**09.12.2021 கார்த்திகை 23 வியாழன்**
விநாயகர் சஷ்டி விரதம்

**11.12.2021 கார்த்திகை 25 சனி**
உதயத்தில் திருவெம்பாவை பூஜை ஆரம்பம்

**16.12.2021 மார்கழி 01 வியாழன்**
கார்த்திகை உற்சவம்


**20.12.2021 மார்கழி 06 ஞாயிறு**
திருவாதிரை காலை விசேட உற்சவம்
**திருவாசக விழா**
**சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும்.**

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 274

## 2020 பொருளடக்கம் ஐப்பசி


| | | |
|---|---|---|
| திருமுருக அவதாரம் | திருமதி ந. பரமேஸ்வரி | 01 - 05 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 06 - 08 |
| ஆட்டுக்கடா | ஆ. விநாயகமூர்த்தி | 09 - 10 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 11 - 14 |
| வாழ்வாதாரம் | பு. கதிரித்தம்பி | 15 - 17 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 18 - 19 |
| சிவபெருமானை வழிபாடு... | காரை எம்.பி. அருளானந்தன் | 20 - 21 |
| முறுவலிக்கிறான் | திருமதி சி. யோகேஸ்வரி | 22 - 26 |
| சமகாலச் சைவ... | கு. சோமசுந்தரம் | 27 - 30 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 31 - 32 |
| வன்னி என்னும்... | கு. சிவபாலராஜா | 33 - 35 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தின்... | தொகுப்பு | 36 - 38 |
| திருக்கோணேஸ்வரம் | நா. வசந்தன் | 39 - 41 |
| நாயிலாகியகுலம் | முருகவே பரமநாதன் | 42 - 45 |
| அன்பு என்னும் இன்ப ஊற்று | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 46 - 47 |
| யாழ்ப்பாணம் இனிக்கிறது | கே.எஸ். சிவஞானராஜா | 48 - 50 |
| சைவத்தமிழ் போற்றும்... | மூ. சிவலிங்கம் | 51 - 56 |
| வடிவேலனின் வாகனங்கள் | ஆர்.வீ. கந்தசுவாமி | 57 - 58 |
| அடியவர்களுக்கு அளப்பரிய... | இ. சரவணபவன் | 59 - 62 |
| அருளம்பல சுவாமிகள் | திருமதி சி. துஷ்யந்தி | 63 - 64 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 65 - 68 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 5533, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

திருமூலநாயனார் அருளிய

# ஏங்குறள்

## திருமந்திரப் பாயிரம்

இரத்தின சுருக்கவுரை

### பாயிரம்

### 01. கடவுள் வாழ்த்து

வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
கோனைப் புகழுமின் கூடலு மாமே. 21
பரமன் அருள்பெற பாடிப் பரவுக.

மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே. 22
மனதில் தோன்றி காப்பவன்.

வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
அல்லும் பகலும் அருளுகின் றானே. 23
எல்லாம் வல்லவன் அல்லும் பகலும் அருளுகின்றான்.

போற்றிசைத் தும்புகழ்ந் தும்பணி தன்னடி
மாற்றிநின் றார்வழி, மன்னிநின் றானே. 24
எல்லாம் இறைவனுக்கே.

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
மறப்பிலி மயாய விருத்தமும் ஆமே. 25
பிறவா இறவாதகையோன்.

தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
உடந்திருந் தானடிப் புண்ணிய மாமே. 26
திருவடி பணிந்து நற்பலன் பெறுக.

சந்தி எனத்தக்க தாமரை வாண்முகப்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே. 27
அறிவுக்கு அறிவானவன்.

இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றாலும்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே. 28
வணங்குபவர்களுக்கு வழித்துணை.

காணநில் லாயடி யேற்குற வாருளர்
ஆணிய னாகி அமர்ந்துநின் றானே. 29
உள்ளக் கோயில் உறைவோன்.

வானின் றழைக்கும் மழைபோல் இறைவனுந்
நானின் றழைப்பது ஞானங் கருதியே. 30
மழைபோல் இறையருள் கிட்டும்.

-திரு சி. யமுனாநந்தா-

# சுடர் தரும் தகவல்

ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது நெருங்கி வந்து கைகுலுக்கிய காலம் மாறி, சமூக இடைவெளி பேணி நின்று கைகூப்பி "வணக்கம்" கூறும் புதிய மரபு இப்போ வந்துள்ளது.

இது மற்றவர்களுக்குப் புதியதாக இருக்கலாம். ஆனால் நமது பாரம் பரியத்தில் காலம் காலமாக இருந்துவரும் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களில் இதுவும் ஒன்று.

கரம் உயர்த்திக் கைகூப்பி "வணக்கம்" கூறும் மரபு நமக்கே உரியது.

"வணக்கம்" எனும் வார்த்தை நுனி வாயிலிருந்து வருவதல்ல. ஆழ் மனதில் பிறப்பெடுத்து வாய் வழியாய் புன்சிரிப்போடு இணைந்து வருவதுடன் கைகளும் குவிந்து விட்டால் எதிரே நிற்பவர் மகிழ்ச்சியில் மிதப்பார்.

கோபம் காணுமிடத்து "வணக்கம்" வராது. நேசம் காணும் வாய் வழியாக வரும் "வணக்கம்" செய்கையாக கரம் குவிக்க வைக்கும். அத்துடன் அவர்களிடம் இன்சொல்லும் இணைந்தே இருக்கும்.

நெருங்கிக் கைகொடுக்க முடியாத கொரோனா அச்சம், இன்று கைகுவித்து வரவேற்கும் நமது சமுதாய வழமைக்கு உலகத்தைக் கொண்டுவந்திருக்கிறது.

இன்று மிகப் பெரிய வல்லரசு நாடுகளின் தலைவர்கள் முதல், சாதாரண அரச ஊழியர்வரை அனைவருக்கும் நம் வணக்கம் அவசியமாகிவிட்டது; தவிர்க்க முடியாததாகி விட்டது.

தூய்மையான எண்ணங்களில் இருந்து பிறக்கும் "வணக்கம்" எனும் வாய்ச் சொல்லும் - அதனைத் தொடர்ந்து வரும் கைகூப்புதலும் தொடர்ந்துவரும் செயல்கள் யாவுமே நல்லனவாயும், எல்லோரையும் வாழ்விப்பனவாயும் அமையும்.

கைகூப்பிய வணக்கமும் - வாயில் மலரும் புன்சிரிப்பும் சேர்ந்துகொண்டால் சந்தித்த காரியம் இனிதே நிறைவு பெறுவதை ஐதார்த்தமாக பார்த்து வருகிறோம்.

இந்நிலை என்றும் தொடரவேண்டும். நம் வாழ்வும் சிறப்புற ஏதுவாக அமையும் என்பதும் திண்ணம்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 20. கொலு வகுப்பு

அறுகதி ரவரென அறுமணி மவுலிக
ளடர்ந்து வெயிலே படர்ந்த தொருபால்
அறுமதி யெனவறு திருமுக சததள
அலர்ந்த மலரே மலர்ந்த தொருபால்
மறுவறு கடலென மருவுப னிருவிழி
வழிந்த அருளே பொழிந்த தொருபால்
வனைதரு மகரமு மணியணி பணிகளும்
வயங்கு குழையே தயங்க வொருபால்
இறுகுபொன் மலையொடு மிடறுப னிருபுய
மிசைந்து நெடுவா னசைந்த தொருபால்
எழிலியை யனையப னிருகையி லயின்முத
லிலங்கு படையே! துலங்க வொருபால்
உறுவரை யருவியை நிகர்தரு முரமிசை
யுடன்கொள் புரிநூல் கிடந்த தொருபால்
உருமென விகலிமு னெதிர்பொரு மவுணரு
ளுடைந்த வுடைவாள் சிறந்த தொருபால்;

அநவர தமுமறை முறையிடு பரிபுர
அலங்கு மிருதாள் குலுங்க வொருபால்
அளவறு கலவியின் முழுகிய குறமக
ளமர்ந்து ளொயிலாய் நிமிர்ந்த தொருபால்
வனதரு வினிலுறை சதமக னருண்மகள்
வதிந்து மணமே பொதிந்த தொருபால்
வருமடி யவரிடம் வலியச நதம்வர
வளர்ந்த சபையே கிளர்ந்த தொருபால்
நினைவொடு பணிபவர் வினைதுகள் படவெதிர்
நினைந்து திருநீ றணிந்த தொருபால்
நிறைமல ரொடுநல கலவையு முயர்குரு
நினைந்து தரவே புனைந்த தொருபால்
தினகர னுலவுச நிதியினி லிரவலர்
தெளிந்த தமிழே பொழிந்த தொருபால்
சிலபர கிரியினி லொருசிவன் வடிவொடு
திருந்த முருகோ னிருந்த கொலுவே.

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. சண்முகராஜா
(லண்டன்)

M. சதாசிவமூர்த்தி
(கனடா)

சி. மகேஸ்வரன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், புத்தூர்)

செ. ஞானசபேசன்
(கிராம அலுவலர், ஏழாலை)

சி. உதயகுமார்
(கிராம அலுவலர், கைதடி)

தலைவர்
(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)

தி. இரவீந்திரநாதன்
(அதிபர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்)

திருமதி கமலாம்பிகை ஸ்ரீஸ்கந்தராசா
(சுண்ணாகம்)

ம. குகதாசன்
(வரணி)

க. கோபாலசுந்தரம்
(மாருதி மோட்டோர்ஸ், உடுப்பிட்டி)

உரிமையாளர்
(நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்)

செ. ரவிசாந்
(குப்பிளான்)

நா. செல்வராஜா
(கொக்குவில்)

சி. சேது
(அச்சுவேலி)

S. செல்வராசா (செல்வி)
(சேவிஸ் ஸ்ரேஷன், புலோலி)

மு. அப்புலிங்கம்
(கோண்டாவில் கிழக்கு)

திருமதி ப. சொக்கநாதன்
(கொக்குவில்)

ந. சிவக்குமார்
(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)

திருமதி சசிலேகா ஜெயராஜன்
(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)

ப. தியாகராஜசர்மா
(திருமகள் வாசா, ஆவரங்கால்)

மகாலிங்கம் செல்வமணி
(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)

K. முகுந்தன்
(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)

நா. நாகராசா
(பக்கிஸ்லேன், மானிப்பாய்)

ந. மணிவண்ணன்
(இரும்புமதவடி, வதிரி)

இராதாகிருஷ்ணன் கிரிதரன்
(தம்பலடி, பொலிகண்டி)

ஆ. யோகதாசன்
(பூதவராயர் கோவிலடி, உரும்பராய்)

செ. இராசநாயகம்
(காப்பாளர், இ.போ.ச, அல்வாய்)

K. சீவரெட்ணம்
(கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்)

**கனகன் சின்னத்தம்பி**

(சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி)

**வே. முருகவேள்**

(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

**க. சத்தியதாஸ்**

(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)

**வ. இராசநாயகம்**

(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)

**ரூபினி வசந்தகுமார்**

(யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி)

**விக்னேஸ்வரி கணேசநாதன்**

(நீர்வேலி)

**சி. பத்மராசா**

(நவிண்டில், கரணவாய்)

**T.R. இரத்தினவேல்**

(அரசவீதி, உரும்பராய்)

**A. முரளிகரன்**

(ஊரெழு)

**பா. இந்துராணி**

(மல்ரி ஓயில், இணுவில்)

**சு. சுந்தரலிங்கம்**

(வேவில் லேன், வல்வெட்டி)

**வீ. வடிவேலு**

(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

**Dr தர்மலிங்கம்**

(நீர்வேலி)

**சிவலிங்கம் சுகந்திகா**

(ஆதியாமலை, உடுப்பிட்டி)

**த. கனகம்**

(பன்னாலை, நீர்வேலி வடக்கு)

நவரத்தினம் இந்திரமோகன்
(சண்டிலிப்பாய் மேற்கு)

திருமதி சிவநிதி முருகானந்தன்
(கட்டுடை, மானிப்பாய்)

இராசரத்தினம் வேல்குமார்
(இணுவில்வீதி, மானிப்பாய்)

P. சபாநாதன்
(யாழ்வீதி, மானிப்பாய்)

M. செந்தூரன்
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

க. முருகானந்தம்
(காளிகோவிலடி, மல்லாகம்)

த. சொக்கலிங்கம்
(இணுவில் தென்மேற்கு)

பா. சியாமளநாயகி
(சுண்ணாகம் கிழக்கு)

கிட்டிணன் ஜெயக்குமார்
(சிவன்வீதி, சிறுப்பிட்டி மேற்கு)

கு. ஜெகதீஸ்வரன்
(இராசவீதி, கோப்பாய் வடக்கு)

கி. ஜெயக்குமரபதி
(இடைக்காடு, அச்சுவேலி)

க. துரைராசா
(சுதுமலை தெற்கு)

அருச்சுனன் சுனோஜா
(தும்பளை தெற்கு)

சி. புஸ்பரதி
(கரணவாய் மத்தி)

இ. சிவபாதம்
(நீலமயில் வாசா, அல்வாய்)

# திருமுருக அவதாரம்



– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –



மாணிக்க கங்கைக் கரையினிலே
மகிழ்ந்தினிது அருள் சுரக்கும்
மாணிக்க விநாயகனே மணிவாக்குதவிடுவாய்
மன்னவனாம் முருகனின் அவதார மகிமை சொல்ல

மும்மலமாகிய அசுரர்வசம் சிக்குண்டு தவிக்கும் சுத்தாத்மாவாகிய தேவர்களைச் சிறை மீட்க நிகழ்ந்ததே திருமுருக அவதாரம். இதனை விளக்கிச் சொல்வதே கந்தபுராணம். இக் கந்தபுராணம் நமது சொந்தப் புராணம் என்று அன்று நாவலர் பெருமான் எடுத்தியம் பினார். அவர் வழிவந்த யோகர் சுவாமிகளும் இதையே சொன்னார். சொந்தப் புராணம் என்றால் என்ன? ஒவ்வொரு மனிதனும் தன்னை அறிந்து கொள்ள உதவுவதால் இது சொந்தப் புராணம் எனப்பட்டது.

சிங்கமுகாசுரன், தாரகன், சூரன் ஆகிய அசுரர்களின் தொல்லைகளைத் தாங்க முடியாது தேவர்கள் தவிக்கின்றனர். உலகின் இயல்பு நிலையை மாற்றித் தேவர்கள், முனி வர்கள் மற்றும் நல்லோர்களைச் சிறையிட்டு உலக நிர்வாகத்தைத் தம் வசப்படுத்தித் தம் அதிகாரத்தால் உலக நிம்மதியைக் கெடுத்தவண்ணம் செயல் புரிகின்றனர். பிரம்மா, விஷ்ணு முதலாகிய யாவரும் முயற்சி செய் தும் இவர்களின் கொடுமையை அடக்க முடியவில்லை. செய்வதறியாது திகைத்தனர்.

கருணாமூர்த்தியாகிய சிவபெருமானி டம் வரம் பெற்றவர்களல்லவா இந்த அசுரர் கள். எனவே போக்கிடம் பிறிதொன்றில்லை என முப்புரமெரிசெய்த முக்கண்ணுடை மூர்த்தியை நாடினர். அவரோ நிஷ்டையில் ஆழ்ந்திருக்கின்றார். அவர் முன் செல்வதற்கு யாருக்கும் துணிவு வரவில்லை. அவர் நிஷ்டை யைக் குலைக்க மன்மதனை அனுப்புகின் றனர். மன்மதனும் அஞ்சியவாறே வேறு வழி யின்றிச் செல்கின்றான். அவர் விழித்துப் பார்க் கின்றார். மன்மதன் சாம்பலாகி விடுகின்றான்.

தேவர்கள் வருந்துகின்றனர். மன்மதன் மனைவியோ எம்பெருமானிடம் வந்து கண வனுக்கு உயிரப்பிச்சை தரும்படி அழுது புலம்புகின்றாள். அவரும் கருணை கூர்ந்து மன்மதனுக்கு உயிர்ப்பிச்சையளிக்கின்றார். இதன்பின் சிவன் பார்வதி திருமணம் நிகழ்கின் றது. தேவர்கள் பயம் தெளிந்தவர்களாகிச் சிவபெருமானிடம் சென்று அசுரர்களால் தாம் படுகின்ற துன்பங்களைப் பற்றிக் கூறி விமோ சனம் கேட்டு நிற்கின்றனர். அப்போது எம் பெருமான் அசுரர்களை அழிக்க ஒரு புத்திர னைத் தருவோம் பயமின்றிச் செல்லுங்கள் எனக் கூறி அனுப்புகின்றார். சூரபன்மனுடைய கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. தேவர்கள் மீண்டும் சிவபெருமானிடம் சென்று இறைஞ்சுகின்றனர். சிவனார் தம் நெற்றிக் கண்ணினின்றும் ஆறு பொறிகளைத் தோற்றுவித்து, அதனை வாயு தேவன் கையில் கொடுத்துக் கங்கையில் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி கூறினார். சிறிது தூரம் சென்றதும் வாயுதேவனால் அந்த

*நீ உன் சிறகை விரிக்கும்வரை நீ எட்டும் உயரம் யார் அறிவார்?*

வெப்பத்தைத் தாங்க முடியவில்லை. அதனை அக்கினி தேவனிடம் கொடுத்தான்.

அக்கினி தேவனும் மிகுந்த சிரமத்துடன் அதனைக் கொண்டு சென்று கங்கையில் சேர்த்தான். அந்தக் கனலின் வெம்மை தாங்காது கங்கையும் வற்றவே கங்காதேவி அதனைக் கொண்டுபோய்ச் சரவணப் பொய்கையில் சேர்த்து விட்டார். மிகவும் குளிர்ச்சியான சரவணப் பொய்கையில் மலர்ந்திருந்த ஆறு தாமரை மலர்களிலும் ஆறு பொறிகளும் சென்று ஆறு குழந்தைகளாக மாறின. இந்த ஆறு குழந்தைகளும் ஆறு கார்த்திகைப் பெண்களால் பாலூட்டி வளர்க்கப்பட்டனர். அங்கே பார்வதி தேவியார் வந்து ஆறு குழந்தைகளையும் ஒன்றாக அணைத்துத் தூக்கி முத்தமிட்டார். ஆறு குழந்தைகளும் ஒன்றாக ஆறு திருமுகங்களுடனும் பன்னிரு தோள்களுடனும் திருமுருகன் அங்கே தோன்றினார். தேவர்கள் பூமாரி பொழிந்து வாழ்த்தி மகிழ்ந்தனர்.

இதனைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமானும் தேவர்களின் குறைபோக்கத் திருவுளம் கொண்டார். முருகனைப் பார்த்து நீ தேவ சேனாதிபதியாகச் சென்று சூரனை வென்று தேவர்களின் குறை போக்கி வரவேண்டுமெனக் கூறிச் சூலம், மழு போன்ற ஆயுதங்களையும் கொடுத்து ஆசீர்வதித்தார். அன்னை அருட் சக்தி சொரூபமான வேலாயுதத்தைக் கையில் கொடுத்து ஆசீர்வதித்துத் தேவர்களுடன் அனுப்பிவைக்கின்றார். "பெம்மான் முருகன் பிறவான்" என்பதற்கிணங்க சிவனாரின் அம்சமாக நெற்றிக்கண்ணினின்றும் தோன்றிய முருகப் பெருமான் ஒரு தாய் வயிற்றில் பிறக்கவில்லை. பிறவாதவன் எப்படி இறக்க முடியும்? சிவனின் அம்சமாகிய முருகப்பெருமான் சக்தியின் அம்சமான வேலைக் கையிலேந்தி சிவசக்தி சொருபமாகத் தேவர்களுடன் போருக்குச் செல்கின்றார். இவருக்குத் துணையாக வீரவாகு தேவர் முதலான சிவகணங்களைத் துணையாக அனுப்பிவைக்கின்றார் சிவபெருமான்.

சகல வல்லமையும் பொருந்திய சிவப் பரம்பொருளாகிய எம்பெருமான் தாமே சென்று அசுரர்களை அழித்துத் தேவர்களைச் சிறை மீட்காமல் இதற்காக ஏன் மகனைத் தோற்றுவிக்க வேண்டும்? சூரபத்மனும் சகோதரர்களும் சிவபெருமானை எண்ணிக் கடுந்தவம் செய்து அவரால் அழியா வரம் பெற்றவர்கள். தாம் கொடுத்த வரத்தைத் தாமே அழிப்பது தர்மநீதிக்குப் புறம்பானதும் வாக்குத் தவறுதல் சத்தியத்தை மீறுவதுமாகும் என்பதால் தானே செல்லாமல் தேவர் குறை தீர்க்கத் திருமுருக அவதாரத்தை நிகழ்த்தினார். காசிப முனிவருக்கும் அசுரகுல மங்கையான மாயைக்கும் பிறந்தவர்கள் சூராதி அவுணர்கள். இவர்கள் தைத்திரியர் மரபில் வந்தமையால் சமம், தமம் முதலிய நற்குணப்பண்புகளை விட்டு மாறுபட்ட குணங்களைக் கொண்டவர்களாக விளங்கினர்.

இவர்கள் தம் தாய் தந்தையர்களை வணங்கித் தாம் செய்ய வேண்டியது எது எனக் கேட்டு நின்ற சமயத்தில் தந்தை காசிபர் கூறினார் நீங்கள் மூவரும் சிவனை நோக்கித் தவமிருந்து ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களுக்கும் பதியாகிய சிவனை வழிபட்டால் சகல பேறுகளையும் பெறுவதோடு சாகா வரத்தையும் பெறுவீர்கள் என எடுத்துரைத்தார். மாயையாகிய தாயாரோ இதனைத் தடுத்து உலகியல் இன்பங்களையும் எல்லா உலகங்களையும் ஆளும் வல்லமையையும் பெறும்படி உபதேசித்தார். அசுர குருவாகிய சுக்கிராச்சாரியாரும் இதையே சரியான வழி எனக் கூறி அவர்களை ஆசீர்வதித்தார். தந்தை சொல்லைப் புறக்கணித்த மைந்தர்கள்

*விதைத்துக்கொண்டே இரு. முளைத்தால் மரம், இல்லையேல் உரம்.*

சிவனை நோக்கிக் கடுந்தவம் இருந்து சகல லோகங்களையும் வெல்லும் வல்லமையையும் அழியா வரத்தையும் பெற்றனர். இதனால் தேவர்களைத் துன்புறுத்திச் சிறைப்பிடித்துத் தேவலோக ஆட்சியைக் கைப்பற்றித் தேவர்களை அடிமைகளாக்கித் தகாத வகையில் அவர்களைத் துன்புறுத்தினர். இக்கொடுமையை அழிக்கவே திருமுருக அவதாரம் நிகழ்ந்தது.

முருகப் பெருமான் போர்செய்து தாரகன், சிங்கமுகன், சூரன் ஆகிய மூவரையும் அவர்களது பிள்ளைகளையும் சேனைகளையும் அழித்துத் தேவர்களைச் சிறைமீட்டு அவர்களது இராச்சியத்தையும் அவர்களுக்களித்து இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவைத்தார்.

சூரனை இரு கூறுகளாகப் பிளந்து மயிலாகவும், சேவலாகவும் மாற்றித் தனக்கு வாகனமாகவும் கொடியாகவும் ஆக்கிக் கொண்டார். "சூரன்" என்னும் அகங்காரத்தை அடக்கித் தான் ஆட்கொள்வதே சூரசம்ஹாரத் தத்துவமாகும். இதுவே கந்தபுராணத்தின் சுருக்கமாகும். இப்புராணத்தில் அடங்கியுள்ள தத்துவத்தை நாம் ஆராய்ந்துணர்வதே இப் புராணத்தைப் படிப்பதன் நோக்கமாகும்.

ஆகாயத்திலிருந்து தோன்றிய ஆறு பொறிகளும் வாயுதேவனாலும் அக்கினி தேவனாலும் கொண்டுவரப்பட்டு கங்கையிலும் பின் சரவணப் பொய்கையிலும் சேர்க்கப்பட்டு ஆறு தாமரை மலர்களில் ஆறு குழந்தைகள் ஆகின்றது. நாணற்காட்டில் இக் குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்க்கின்றனர் கார்த்திகைப் பெண்கள். உலகத் தாயான உமாதேவியார் வாரியணைத்தெடுக்க ஒரு குழந்தை ஆகின்றார்.

இது பஞ்ச பூதங்களோடும் தொடர்பு உடையதாகின்றது. ஆகாயம் தோன்றிய இடம், காற்றும் தீயும் இதனைக் கொண்டு சென்று நீராகிய கங்கையிலும் சரவணப் பொய்கையிலும் சேர்த்தது. பின் நாணற் காடாகிய நிலத்தில் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்க்கின்றனர். ஆகவே ஐம்பூதங்களையும் அன்பால் வசப்படுத்தும் ஆற்றல் பெற்றவராகின்றார். அன்னை அன்புடன் அணைத்தெடுத்ததால் ஆறு குழந்தைகளும் ஒன்றாகி ஒரு திருமுருகனாகத் தோன்றினார்.

இறைவன் நெற்றிக் கண்ணாகிய ஞானக் கண்ணினின்றும் தோன்றிய ஆறு பொறிகள் ஆறு அறிவு கொண்ட அணுவின் சக்தி காற்றினாலும் வெப்பத்தாலும் கீழ் நோக்கி வந்து நீரை அடைகின்றது. அதன்பின் பூமியில் தாவரமாகிப் பின் மனித உருவாகின்றது. உலகத்தின் தந்தையாகிய சிவனிடம் இருந்து வந்த அணுசக்தியானது மற்றைய பூதங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு உலகுக்கு அன்னையாகும் உமாதேவியாரால் அணைக்கப்பட்டுக் குழந்தையாகின்றது.

இவ்வாறு நோக்குமிடத்து ஐம்பூதங்களாலான உடம்பிற்குள் இறைவனின் ஞானமாகிய ஆறு அறிவு கொண்ட விந்தின் சக்தி கலந்ததால் உண்டானதே மனிதப்பிறவி. ஆகவே இதை நன்றாகப் புரிந்துகொண்டால் ஒவ்வொரு மனிதனும் முருகனின் அவதாரமே என்பதை அறிந்து கொள்ளலாம் இதனாலேயே "கந்தபுராணம் எங்கள் சொந்தப்புராணம்" என்று கூறப்பட்டதன் தாற்பரியத்தை உணர்ந்து கொள்ளலாம்.

மனிதப் பிறவியோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது பஞ்ச பூதங்களாலான இந்த உடம்பு மும்மலத்தோடு கூடியதாகின்றது. அதுவே ஆணவம், கன்மம், மாயை எனப்படுகின்றது. இம்மும்மலமே சூரன், தாரகன், சிங்கமுகாசுரன் என உருவகப்படுத்தப்படுகின்றது. மகனுக்குத் தந்தை உபதேசம் செய்கின்றார். இறைவனை நோக்கித் தவம் செய்து உலகப் பற்றை நீக்கி முத்தியின்பத்தைப்

*நீ வீணாக்கும் ஒவ்வொரு நொடியும் உன்னை வறுமைக்குள் தள்ளிவிடும்.*

பெறும்படி. ஆனால் தாயார் சொல்கின்றாள் தவத்தின் பயனாக உலகின் எல்லாவிதமான இன்பங்களையும் அநுபவிப்பதோடு உலகம் முழுவதையும் ஆளும் ஆற்றலையும் பெறு வாயாக என்று. ஐந்து புலன்களாலும் அநுப விக்கும் புலனின்பம் ஐந்தறிவு ஜீவனாகிய விலங்கு நிலையாகும். ஆறாம் அறிவாகிய பகுத்தறிவால் நிலையற்ற இன்பத்தை விட்டு நிலையான இன்பமாகிய இறையின்பமாகிய பேரின்பத்தைப் பெறுவதே மனித நோக்கம் ஆகும்.

மும்மலமாகிய இவை முக்குணங்கள் எனப்படும். இதனால் மனிதனிடம் தோன்றும் தீய குணங்கள் ஆறு வகைப்படும் அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பனவாகும். இவை எந்நேரமும் மனத்தைச் சஞ்சலப்படுத்திக் குழப்பி அமைதி யைக் குலைத்துக் கொண்டேயிருக்கும். இதனால் உலகின் அமைதி கெடுவதால் மனித சமூகம் எப்போதும் அச்சத்துடனும் குழப்பத்துடனும் அமைதியின்றி வாழ நேரிடு கின்றது.

நான், எனது, எனக்கு என்ற மும் மலங்களையும் அகற்றும்போதுதான் மனம் அமைதியடைகின்றது. இதனால் உலகம் அமைதி பெறுகின்றது. இதனை உணர்த்து வதே சூரசம்ஹாரமாகும். ஆறு தீய குணங் களையும் வெல்ல அறுமுகனாகிய முருகனின் அருட்கடாட்சத்தைப் பெறவேண்டும்.

மனித உடம்பின் மூலாதாரத்திலிருந்து சுவாதிஷ்டகம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞைவரை ஆறு ஆதாரங்களுள் ளன. மூலாதாரத்தில் உறங்கிக் கிடக்கும் குண்டலினி சக்தியை மேலெழுப்பி ஆறு ஆதாரங்கள் ஊடாக மேல் நோக்கிச் செலுத் தும்போது ஒவ்வோர் ஆதாரத்திலுமுள்ள தாமரைகள் மலர்கின்றன. அங்கே சக்தியின் ஒளிப் பிரவாகம் உண்டாகின்றது. ஆறாவது ஆதாரமாகிய புருவமத்தியில் வந்ததும் மெய்யறிவாகிய ஆனந்தம் உண்டாகின்றது. இந்த ஆறு ஆதாரங்களிலும் ஆறு குழந்தை களாக முருகன் எழுந்தருள்கின்றான். நெற்றிப் புருவ மத்தியில் தோன்றும் ஞானசக்தியே மூன்றாவது கண்ணாகிய ஞானக்கண் இந்த ஞானசக்தியே வேலாகும். இந்த வேல் என்பது நுண்ணறிவாகும். இந்த நுண்ணறிவாகிய வேலால் மும்மலங்களை அழிப்பதே சூரன் போர். ஒவ்வொரு மனிதனும் தன் உட்பகைவர் களை வென்று அமைதி பெறுவதே முருக அவதார நோக்கமாகும். ஆறுமுகம் என்பது ஆறுதலைத் தரும் முகம் என்பதாகும். அகப் போரில் வெற்றி பெற்றுச் சாந்தி பெற்ற மனி தனின் முகம் சாந்த சொரூபமாயிருக்கும். அந்த முகத்தைத் தரிசிப்பவர்களுக்கும் அது ஆறுதலைத் தருவதாக அமையும்.

மனித உடம்பிற்குள் உள்ள ஆறு ஆதாரங்களும் முருகனின் ஆறுபடை வீடு களாகக் கொள்ளப்படுகின்றன. மூலாதாரத்தில் இருந்து குண்டலினி சக்தியை ஏற்ற முயற்சிப் பது ஓங்காரமாகிய ஏறுமயிலேறி விளையாடும் முகமாகும்.

ஓங்காரத்தை மேல் நோக்கி எழ வைத்து மேல் நோக்கி உச்சிக்குச் செல்லு தலே ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம் ஆகும்.

அடியார்கள் வினையாகிய மும் மலத்தை நீக்குவற்கு வந்தது கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமாகும்.

நக்கீரரைச் சிறை மீட்பதற்காக மலையை ஊடுருவிச் செல்ல வேல்வாங்கி நின்றது குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமாகும்.

எப்போதும் நல்லதை நாடாது மாறு பட்டு நிற்கும் மும்மலங்களாகிய சூரரை

*அடுத்தவர்களுக்கு கெடுதல் நினைக்காத எல்லா நேரமும் நல்ல நேரமே.*

வதைத்து வெற்றி கொண்டது மாறுபடு சூரரை வதைத்த முகமாகும்.

அடுத்து ஐம்புல வேடர்களிடமிருந்து ஆத்மாவாகிய வள்ளியை விடுவித்துத் தன்னுடன் சேர்த்துக்கொண்டது வள்ளியை மணம்புணர வந்த முகமாகும்.

இவ்வாறு ஆறுமுகமான பொருளை உணர்த்தி நிற்பதே திருமுருகனின் அருட் கடாட்சமாகும். முருகப்பெருமானின் இவ் அருட்கடாட்சத்தைப் பெற்று மும்மலங்களை வென்று ஞானதீட்சை பெற்றுத் தான் யார் என்பதை உணர்ந்து கொண்ட ஒவ்வொரு மனிதனும் முருகப்பெருமானின் முழு ஆற்றலையும் கொண்ட முழுமனிதனாகின்றான்.

ஆகவே நாம் முழுமனிதர்களாகப் பூரணமானவர்களாக அன்பு நெறி வாழ்வைக் கடைப்பிடித்து ஆனந்தமயமான உலகை மலரச் செய்ய எல்லாம்வல்ல முருகப் பெருமானின் வரலாறாகிய கந்தபுராணத்தைப் பக்தியோடு படித்தும் கேட்டும் உட்பொருளை உணர்ந்தும் உய்வதற்கு எல்லாம் வல்ல முருகப் பெருமான் அருள்புரிவாராக.

எல்லாம் அவன் செயல்

## காட்சி தர வா!

அழகு மிகும் சந்நிதியில்,
ஆற்றங் கரைதன்னில்
ஆலயமே கொண்ட முருகா! - நின்
கழல் போற்றித் துதிக்கின்றோம்!
கருணை கொண்டே எம்மைக்
காத்தருள வாரும் ஐயா!

தேவர்களின் குறை தீர்த்த
தெய்வமே! எங்கள் குறை
தீர்த்திடத் திடங்கொண்டு வா! - கொடும்
பாவங்கள் தமைப் போக்கி
பன்னிரு கைகளினாலே
பரிவோடெமை அணைக்க வா!

தொன்மை மிகும் பதியினிலே
தொழும் அடியார் குறைதீர்க்க
தோகை மயில்மீதேறி வா! - எம்
அல்லல்களைக் களைந்து மிக்க
ஆறுதலைத் தந்திடவே
ஆறுமுகாநீ ஓடி வா!

கல்லோடையில் இருந்து
கருதிடும் தொண்டர்க்குக்
காட்சி தரும் கதிர்வேலவா! - தினம்
எல்லையிலா அன்பாலே
ஏற்றியுமைப் போற்றுகிறோம்!
எம்மீது மனமிரங்கி வா!

அன்னப் பசி போக்கி,
அன்பர்கள் பிணி நீக்கி
ஆண்டருளும் தலைவா நீ வா! - தினம்
கன்னித் தமிழாலே
கவிமாலை புனைந்தேத்த
கண்முன்னே காட்சிதர வா!!

-கி. குலசேகரன்.

(தொடர்ச்சி...

# திருச்சதகம்
## நீத்தல் விண்ணப்பம்
### பிரபஞ்ச வைராக்கியம்
(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
-சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் -
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

117. கடலினுள் நாய்நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண் டாய்விட லில்லடியார்
உடலில மேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
மடலின் மட் டேமணி யேயமு தேயென் மதுவெள்ளமே.

**ப-ரை:**

விடல் இல் அடியார் உடல் இலமே மன்னும்- நின்னைப் பற்றி விடுதல் இல்லாத மெய்யடியாரது உள்ளமாகிய திருக்கோயிலின் கண் எழுந்தருளியிருக்கும், உத்தர கோச மங்கைக்கு அரசே- திருவுத்தர கோச மங்கை என்னும் தலத்துக்கு அரசே, மடலில் மட்டே- பூவின் கணுண்டாகும் தேனே, மணியே- மாணிக்கமணியே, அமுதே- அமுதமே, என் மது வெள்ளமே- எனது கட்களிப் பெருக்கே, கடலினுள் நாய் நக்கி யாங்கு- மிக்க நீரையுடைய கடலினுள்ளா யினும் நாய் நக்கி ஒரு சிறிது நீரைப் பருகுவது போல, கருணை கடலில் உள்ளம் விடல் அரியேனை- நினது அருட்பெருங் கடலின்கண் உள்ளத்தை விட்டு ஒரு சிறிதன்றி ஆரப்பருகுதலில் லாத என்னை, விடுதி கண்டாய்- கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தரகோச மங்கைக்கு அரசே, மடலின் மட்டே, மணியே, அமுதே, என்மதுவெள்ளமே மிக்க நீரையுடைய கடலினுள் நாய் நக்கி ஒரு சிறிது நீரைப் பருகுவதுபோல நினது அருட் பெருக்கின் கண் உள்ளத்தை விட்டு ஒரு சிறிதன்றி ஆரப்பருகுதல் இல்லாத என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

மிக்க நீரையுடைய கடலினுள்ளும் நாய் நக்கிச் சிறிதளவு நீரையே கொள்ளுமாறு போல நினது அருட்பெருங் கடலின்கண் உள்ளத்தை விடுத்து ஒரு சிறிது கொள்வதன்றி நிறையக் கொள்ளுதல் இல்லேனை என்பார், "கடலினுள் நாய் நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம் விடலரியேனை" என்றார். நக்கியது ஆங்கு என்பது நக்கியாங்கு என வந்தது. இறைவன் கருணை கடல் போன்றது என்பது,

"தன் கருணை வெள்ளத்தமுத்தி" அம்மானை 5.
"கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்" அன்னை 2.
"களிவந்த வான் கருணை வெள்ளப்பிரான்" கோத் 16.
"வந்திமை யோர்கள் வணங்கியேத்த மாக்கரு ணைக்கடலாய்" வார்த்தை 5.
"எல்லையில் மாக்கருணைக் கடல்" திருப்படை 4.

*வறுமைக்குப் பிறகு வரும் செல்வமே வாழ்க்கையில் இறுதிவரை நிலைக்கும்.*

என அடிகள் அருளியவாற்றானுமறிக. கருணையைக் கடல் என்றது அதன் மிகுதி பற்றி என்க. விடலரியேனை என்பதில் அருமை இன்மை குறித்து நின்றது. "அருங் கேடனென்பதறிக" குறளிற் காண்க.

விடலில் அடியார் என்பதில் விடுதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. உடல் ஆகு பெயராய் உள்ளத்தை உணர்த்தியது. "எந்தையோ ஈசா உடலிடங் கொண்டாய்" "சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்" (திருவாசகம் கோயில் திருப் 10) நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவர்" (அப்பர்) என வருஉம் அருள்வாக்குகளுங் காண்க. உடலிலம் பண்புத் தொகை.

மடல்- பூவிதழ். மட்டு- தேன். "மட்டுவா யவிழ்ந்த தண்டார்" (சீவக 1145) என்புழிப் போல. பூத்தேன் போல இன்பத்தைச் செய்தலின் "மடலின் மட்டே" என்றார். இறைவன் மாணிக்க மணிபோலும் செம்மை பொருந்திய திருமேனியுடன் ஞானாசாரியனாக எழுந்தருளியமை யின் மணியே என்றார். கழிபெருஞ்சுவையோடு உறுதி பயத்தலுடைமையான் "அமுதே" என்றார். மது கள். அது இங்கே களிப்பை உணர்த்தியது. கள்ளினால் உண்டாகும் களிப்பு உடல் உணர்வுகளை மறக்கச் செய்து முழுவதும் தன்வயப்படுத்துதல் போல, இறைவன் அருளால் உண்டாகும் களிப்பு உடலையும் உலகத்தையும் மறக்கச் செய்து பரவசமடையச் செய்தலின் "மதுவெள்ளமே" என்றார். "எனை நானென்பதறியேன் பகல் இரவாவதுமறியேன்" (உயிருண்ணி 3) என அடிகள் அருளியவாறுங் காண்க.

இதன்கண், கருணைக் கடலினுள்ளம் விடலரியேனை விடுதி கண்டாய் என்பதனால் நினது அருட்பெருங்கடலில் உள்ளம் புக்கழுந்தி நிறைவினைப் பெறத்தக்க தவமில்லா தேனைக் கைவிடாதொழிதல் வேண்டும் என்பது போதருதலின் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுமாறு காண்க. 13.

118\. வெள்ளத்துள் நாவற்றியாங் குன்அருள் பெற்றுத்துன் பத்தினின்றும்
விள்ளக் கிலேனை விடுதிகண் டாய்விரும் பும் அடியார்
உள்ளத்துள் ளாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி யாத களியெனக்கே.

**ப-ரை:**

விரும்பும் அடியார் உள்ளத்து உள்ளாய்- நின்னை விரும்பி அன்பு செய்யும் மெய்யடியாரின் மனத்தின்கண் உள்ளவனே, மன்னும் உத்தர கோசமங்கைக்கு அரசே- நிலைபெற்ற திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, வெள்ளத்துள் நா வற்றியாங்கு- நல்ல நீர்ப் பெருக்கினுள் உள்ளான் ஒருவனுக்கு நா வரண்டு துன்பமுண்டானாற் போல, உன் அருள் பெற்று இன்றும் துன்பத்து விள்ளக்கிலேனை- நின் திருவருளைப் பெற்றும் இப்போதும் பொய்யுலகத் துன்பத்தினின்றும் நீங்குதற்குரிய ஆற்றலில்லாத என்னை, விடுதி கண்டாய்- கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். கள்ளத்துளேற்கு எனக்குகளியாத களி அருளாய்- மாயையின் கரவின்கண் உள்ளேனாகிய எனக்கு அக்கரவினை நீக்கிப் புலன்களால் நுகரப்பெறாத பெருங்களிப்பை எனக்கு அருள் புரிவாயாக.

*எவ்வளவு பெரிய பிரச்சினைக்கும் கையளவு மனத்திடம்தான் தீர்வு.*

அடியார் உள்ளத் துள்ளாய் உத்தர கோசமங்கைக்கரசே, வெள்ளத்துள் இருந்தும் ஒருவனுக்கு நா வரண்டு துன்பமுண்டானாற் போல நின் திருவருளைப் பெற்றும் இப்போதும் பொய்யுலகத் துன்பத்தினின்றும் நீங்கும் ஆற்றலில்லாத என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். கள்ளத்துளேற்கு எனக்குக் களியாதகளி அருளாய் என்பதாம்.

வெள்ளத்துள் நாவற்றியாங்கு என்பதற்கு நல்ல நீரப் பெருக்கினுள்ளான் ஒருவனுக்கு நாவரண்டதுபோல என ஆற்றலாற் சில சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன. வற்றியது ஆங்கு வற்றியாங்கு என விகாரமடைந்தது. உன் அருள் என்றது இறைவன் அடிகளை ஆட்கொண்டருளிய திருவருட்டிறத்தையாகும். பெற்று என்பதில் உம்மை தொக்கது. துன்பத்தினின்றும் என்பதனைத் துன்பத்தின் இன்றும் எனப் பிரித்து இன்றும் துன்பத்தின் விள்ளக்கிலேனை என்பது பொருளாகக் கொள்க. துன்பம் பிராரத்த வினையாலுண்டாகும் துன்பம். நின்னால் ஆட்கொள்ளப்பட்ட பின்னர் இப்போதும் என்றவாறு. கில்- ஆற்றலிடை நிலை. கள்ளத்துளேற்கு எனக்கு என நான்காம் வேற்றுமையை இருமுறை விரித்துக் கூறியது. இறைவன் திருவருளைப் பெறும் ஆர்வ மிகுதியாலாகும். களி- களிப்பு. "விடக் களியா நம் விழுநகரார்க்கும் வியன்முரசே" திருக்கோவை 297 என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. களியாத களி- புலன்களின் வாயிலாக அடையப் பெறாத களிப்பு.

இதன் கண் துன்பத்தினின்றும் விள்ளக்கிலேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பது புலப்படுதல் காண்க. 14.

(தொடரும்...

அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டே இருக்கின்ற மனிதர்களைப் பார்த்து "அவர்கள் எப்பொழுதும் கீரியும் பாம்பும்போல சண்டையிட்டுக்கொண்டே இருப்பார்கள்" என்று நாம் கூறுகிறோமல்லவா. அவர்களுக்குள் ஏதோ விரோதம் இருப்பதனால்தான் சண்டையிடுகிறார்கள் என்று நாம் கருதுவோம். ஆனால் ஞானிகள் கூறும் விளக்கம் வேறு.

அதாவது புலி, சிங்கம் போன்ற மிருகங்கள் மான் மற்றும் மனிதனை அடிக்கிறது என்றால் அவற்றுக்கு அதுதான் உணவு. பாம்பு, தேள் போன்றவை மனிதனைக் கொட்டுகின்றன என்றால் அது தற்பாதுகாப்புக்காக. ஆனால் உணவுக்காகவும் இல்லாமல் தற்பாதுகாப்புக்காகவும் இல்லாமல் சண்டை போட்டுக்கொள்வது கீரியும் பாம்பும்தான். மனிதர்களும் அப்படியே காரணமின்றி ஒருவருக்கொருவர் பகை கொள்கிறார்கள் என்றுதான் ஞானிகள் குறிப்பிடுகிறார்கள்.

எத்தனை முறை துலக்கினாலும் பித்தளையின் குணம் மாறாது. துலக்கியவுடன் தங்கம்போல் பிரகாசிக்கும். நாளடைவில் தன்னிலையை அடைந்துவிடும். அதுபோல வாழ்க்கையில் சிலருக்கு எத்தனை முறை நற்புத்தி புகட்டினாலும் அந்தச் சந்தர்ப்பத்தில் மட்டும் ஏற்றுக்கொள்வார்கள். ஆனாலும் அவர்களின் குணம் ஒருபோதும் மாறுவதில்லை.

*ஏழ்மையிலும் நேர்மை இறைவனுக்குப் பிடித்தமான செயல்.*

# ஆட்டுக்கடா

– திரு ஆ. விநாயகமூர்த்தி அவர்கள் –

நமது வளர்ப்புப் பிராணியான விலங்கினங்களில் ஆடு வளர்ப்பு நல் வருவாயீட்டும் தொழிலாக அமைகிறது. குறுகிய காலத்தில் இனப்பெருக்கம் செய்து விருத்தியாகும். ஆடு வளர்ப்பு, விவசாயத் தொழிலுடன் தொடர்பு உடைய ஓர் அங்கமாகும். ஆட்டின் பால் மருத்துவக் குணம் உடையது. ஊட்டச்சத்து நிறைந்தது. தற்போது அருகிவரும் இத் தொழிலை நாம் விருத்திசெய்து வளமாக வாழமுடியும்.

முருகப்பெருமானின் புராண காவியமான கந்தபுராணத்தில் பல இடங்களில் ஆடு தொடர்புபடுகிறது. நாரத மகா முனிவர் ஒரு முறை வேள்வி செய்தார். அவ்வேள்வி சிவ பெருமானுக்கு விருப்புடன் செய்யப்பட்டது. அவ்வேள்வித் தீயிலிருந்து ஓர் சிவந்த நிறமுடைய பெரிய ஆட்டுக்கடா தோன்றியது. வேள்வியில் கூடியிருந்தவர்கள் ஓடினார்கள். ஆட்டுக்கடா ஓடியவர்களைத் துரத்திக் கொன்றது. நாரத முனிவரும் தேவர்களும் சிவ பெருமானிடம் முறையிடச் செல்லும் வழியில் முருகனைக் கண்டார்கள். முருகனிடம் முறையிட்டார்கள். முருகப் பெருமான் தம்பியாகிய வீரவாகுதேவரை விடுத்து கடாவை அடக்கி, இழுத்துவரச் செய்து வாகனமாக்கினார்.

காசிப முனிவரும் மாயை என்னும் அசுரத் தலைவியும் சூரபதுமனையும் சிங்க முகாசுரனையும், தாரகாசுரனையும் பெற்றபின் ஆட்டு உருவத்தில் சேர்ந்தபோது இளையவளாகிய ஆட்டு முகமுடைய அசமுகி தோன்றினாள். அசமுகி துருவாச முனிவரைச் சேர்ந்து, வில்வலன், வாதாவி என்னும் இரு புதல்வர்களைப் பெற்றெடுத்தனள். வில்வலனும், வாதாவியும் தவஞ் செய்து வரம் பெற்றபின், முனிவர்களைக் கொல்லும் திட்டத்தில், வில்வலன் முனிவர் உருவிலும், தம்பியாகிய வாதாவி ஆடு உருவிலும் இருந்து முனிவர்களை வரவழைத்து, அமுதுண்ணும்படி கூறுவர். வாதாவியாகிய தம்பியைக் கொன்று பலவகைக் கறியாக்கி அமுது படைத்து முனிவர் உண்டபின் வில்வலன் வாதாவியே எழுக என்று கூவுதலும், வாதாவியானவன், வயிற்றிலிருந்து உயிர்பெற்றெழுந்து, முனிவர் உடலைக் கிழித்து வெளிவந்தபின், இறந்த முனிவனின் உடலை இருவரும் உண்பர். இவ்வாறு முனிவர்களைக் கொல்லும் தொழில் புரிந்த இவ்வசுரர்கள் அகத்திய முனிவருக்கும் இவ்வாறு வாதாவியை ஆடாக்கிக் கொன்று அமுது படைத்து, முனிவர் உண்டபின், வழமைபோல வாதாவியே எழுக என்று கூவுதலும், வாதாவி உயிர்பெற்று வயிற்றினுள் இருந்து வெளிவர எண்ணும்போது; பெரு ஞானியான முனிவர், மந்திர ஜெபத்துடன் தனது வயிற்றைத் தடவினார். வாதாவி இறந்தொழிந்தான். இதை உணர்ந்து போரிட வந்த வில்வலனை தர்ப்பைப் புல்லை அஸ்திரமாக்கி ஏவிக் கொன்றார்.

இவ்வாறு புராண காலத்திலிருந்தே பேசப்படும் ஆட்டின் ஊனை நாம் உண்ணலாமா? நமது சமயம் இதற்கு அநுமதிக்குமா?

சைவசமயம் என்பது உயிர்வதையை விலக்குவதாகும்.

விபூதி, உருத்திராக்கம் என்பவை தரித்து, ஆசாரசீலராக வாழவேண்டிய சைவ மதத்தவர்கள், விலங்கின ஊனை உண்ணக் கூடாது. நாம் அசைவ மதத்தினர் அல்ல. அசைவ மதம் என்று ஓர் மதமும் இல்லை. எப்போது நாம் சைவ மதத்திலிருந்து அசைவர்களாக மாறினோம்.

ஒருநாள் சிறியேன் மரக்கறி அங்காடியில் காய்கறி வாங்குவதற்குச் சென்றேன். சந்தையின் ஓரமாக, மீன், இறைச்சி விற்பனைக் கடை இயங்கி வருகிறது. அதன் வாயிலில் இரு ஆட்டுக்கடா கட்டப்பட்டிருந்தது. பெரும் இனமான இவ் வெள்ளாடுகள் அங்குமிங்கும் பார்த்து, ம்மே, ம்மே என்று கத்தியபடி நின்றன. தமது கூட்டத்தைப் பிரிந்து வந்த சோகத்தில் கத்துகிறதா? அல்லது தமது உயிர் எப்போது போகும் என்று தெரியாமற் கத்துகிறதா? என்று சிந்தித்த எனக்கு, அதன் வாழ்நாள் இன்றே முடியப் போகிறது என்ற எண்ணத்துடன் நான் மீளும்போது அதன் கதை முடிவுற்றது.

வளர்த்தவனுக்குப் பணம் தேவைப் பட்டது. வியாபாரியிடம் கையளித்தான். பணத்தைப் பெற்றுக்கொண்டான். வியாபாரி தனக்குரிய இலாபத்தைப் பெற்றுக்கொண்டு கசாப்புக் கடைக்காரனிடம் விட்டுச் சென்றான். கசாப்புக் கடைக்காரன் அவற்றைக் கொன்று கூறுபோட்டு விற்பனை செய்து பணத்தை எண்ணிக்கொள்கிறான். வாடிக்கையாளர்கள் வாங்கிச் சென்று கறியாக்கிச் சுவைத்து இன் புறுகின்றனர். ஆனால் இத்தனைக்கும் இந்த ஆடுகள் செய்த குற்றம்தான் என்ன? ஆட்டுக் கடாவாகப் பிறந்தது அதன் குற்றமா? எதற்கு இத்தண்டனை?

வாயில்லாச் சீவன் என்கிறார்கள். பகுத்தறிவு இருந்திருந்தால் ஆடு கொடியவர்கள் தன்னை விலைபேசி விற்கும்முன் ஓடித்தப்புவோம் என ஓடிச் சென்றிருக்கும். ஆனால் பகுத்தறியமுடியாத ஆட்டுக்கடா எசமானரை நம்பி ஏமாந்து தன் உயிரை இழந்து விட்டது. ஒருவேளை வாதாவி என்னும் சூர பதுமனின் மருமகனைப்போலத் தவஞ் செய்து வரம்பெற்றிருந்தால் உயிர்பெற்று வயிற்றைக் கிழித்து வெளிவந்திருக்கும். அது தவம் செய்யவும் இல்லை. அதன் ஊனைத் தின்பவர்களும் ஒரு முனிவனல்ல. பல மனிதர்கள். அதனால் அது உயிர்பெற்றெழவில்லை. முனிவர் உண்ணலாம் நாம் உண்ணக்கூடாதா? என்று முணுமுணுப்பதுவும் என் காதிற் கேட்கிறது. கொன்றால் பாவம் தின்றால் தீரும் என்று சமாதானம் கூறுவதையும் என் மனம் ஏற்க மறுக்கிறது.

**இருந்து எமையும் நோக்கும் வேல்**

சொல்லொணாத துயர் வந்து தாக்கும் - எமைத்
தொடர்ந்து வரும் வினையாவும் அறுக்கும்
இல்லாத நிலைக்கும் எமை ஆக்கும் - வேல்
இருந்து கொண்டே எம்மையும் நோக்கும்
வல்லாண்மை பேசிட்டாலே வதைக்கும்
வஞ்சகம் பொய் களவை விரட்டும்
கல்லாத மனத்தாரையும் ஏற்கும் - வேல்
கனிவு கொண்டு எவர் துயரும் தீர்க்கும்.

*சின்னப்பு தனபாலசிங்கம்*

*ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.*

# திருவிளையாடற் புராண வசனம்

## (இருபத்தோராவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## கல்லானைக்குக் கரும் பருத்திய படலம்

பின்பு அபிடேக பாண்டியன், தன்னுள்ளத்திலே அன்பும் அச்சமும் பெருக, "நான் பெரியவரை நன்கு மதியாது, எளியவரென அவமதித்து, இங்கே வரும்படி சொல்லியதென்னை? அவருக்கு என்ன குறை? நானே அவரைத் தேடிப்போய்த் தரிசிக்கத் தகும்!" என்று உட்கொண்டான். பாண்டியனுடைய குறிப்பைச் சித்த சுவாமி அறிந்து, அதற்கு முன்னே தமது பொன்விமானத்துக்கு வடமேற்றிசையில் வந்து, எழுந்தருளியிருந்தார்.

அன்று தைச்சங்கிராந்தி புண்ணிய காலமாகப், பாண்டியன் திருக்கோயிலிற் சென்று. சோமசுந்தரக் கடவுளை வணங்கிக் கொண்டு வலம் வரும்பொழுது, அவன் முன்வருங் கஞ்சுகிமாக்கள், யோகபட்டத்தை உடையராய்க், கட்டுவாங்கத்தின்மேலே கையை வைத்துக்கொண்டு, புலித்தோலாசனத்தின்மேல் இருமாந்திருக்கும் சித்த சுவாமியைப் பார்த்து, அவர் சமீபத்தில் வந்து, பிரம்பினாலே நீக்கி, "எழுந்து போ" என்றார்கள். பின்வரும் பாண்டியன் அப்பெரியாரைப் பார்த்து, "உமது நாடி யாது? உமதூரி யாது? உமது பெயரி யாது? உமக்கு யாது வரும்? யாது வேண்டும்? சொல்லும்" என்றான். அதற்குச் சித்த சுவாமி, "அப்பா! நாம் எந்த நாட்டினும் எந்த ஊரினுந் திரிவோம். ஆயினும் இப்போது நாமிருக்குந் தலங் காசுமீர நாட்டிற் காசி நகரம். பிச்சைப் பெருவாழ்வுடையவர்களே நம்மவர்கள். நாடோறும் வித்தை செய்து கொண்டு திரிகின்ற சித்தர் நாம். இங்குள்ள சிவதலங்கள் பலவற்றையும் வணங்க வந்தோம். இந்நகரம் இம்மையிலே சீவன் முத்தியையும் மறுமையிலே பரமுத்தியையுங் கொடுக்கும். இங்குள்ளவர்களுக்கு நமது விளையாட்டைக் காட்டி, அவர்கள் விரும்பும் பல சித்திகளையுங் கொடுப்போம். வேத முதலிய கலைகளெல்லாவற்றிலும் வல்லேம். எல்லாம் வல்ல சித்தர் நாம். பாண்டியனே! உன்னிடத்தே நாம் பெறவேண்டுவதொன்றும் இல்லை" என்று சொல்லி, உண்ணகை செய்தருளினார்.

பாண்டியன், "இவருடைய இறுமாப்பை நான் அளவிட்டறிவேன்" என்றெண்ணி, அதற்கு வேண்டுந் திறத்தை ஆலோசிப்பானாயினான். அப்பொழுது ஒரு வேளாளன் கமுகுபோற் பருத்த ஒரு கரும்பைக் கொண்டு வந்து வணங்கப், பாண்டியன் அதை வாங்கிக் கொண்டு சித்த சுவாமியைப் பார்த்து, "எல்லாம் வல்ல சித்தரென்று உம்மை மதித்த நீர், இந்தக் கரும்பை இந்தக் கல்லானை உண்ணும்படி செய்வீராயின், எல்லாம் வல்லவரும் நீரே; சோமசுந்தரக் கடவுளும் நீரே. நீர் விரும்புவது தருவேன்" என்றான். அதுகேட்ட சித்தசுவாமி திருப்புன்முறுவல் செய்து, "பாண்டியனே! வா! உன்னிடத்தே யாம் பெற வேண்டுவது யாது? உன்னாசை தீரும் வண்ணம் யாமே உனக்கு வேண்டுவனவற்றைத் தருவோம். செல்லாவுலகத்துஞ் சென்று ஒரு வித்தையைக் கற்றவர், பலரும் நன்கு மதிக்கப், பயன் பெறுவர். எல்லாமறிந்த எமக்கு

*பிறரைக் காட்டிலும் அதிகமாக அறிந்துகொள்ள முயலுங்கள்.*

ஒன்றினும் ஆசையில்லை. இந்தக் கல்லானை இந்தக் கரும்பைக் கறித்தலைப் பார்" என்று சொல்லிவிட்டு, அந்தக் கல்லானையின் மீதே சிறிது கடைக்கண் சாத்தியருளினார். உடனே அக்கல்லானை, மூன்று மதமும் பொழிந்து, வாய் திறந்தார்த்துத் துதிக்கையை நீட்டிப், பாண்டியன் கையிலுள்ள கரும்பைப் பறித்துக் கறித்துச், சாறு கடைவாயால் வழியப் பருகித், துதிக்கையை ஆட்டித், தருக்குற்று நின்றது. சித்த சுவாமி மீண்டுங் கடைக்கண் சாத்தியருளக், கல்லானை பாண்டியன் கழுத்திலுள்ள முத்துமாலையை எட்டிப் பறித்தது. அதுகண்ட கஞ்சுகிமாக்கள் கோபித்து யானையைக் கிட்டி, அடிக்கும்படி கோலையோங்க, சித்த சுவாமி கண் சிவந்து யானையைக் கோபித்துப் பார்த்தார். கல்லானை முத்துமாலையை உண்டது. பாண்டியன் கண் சிவந்து, சித்த சுவாமிமீது கோபங்கொண்டான். அவன் ஏவலாளருட் சிலர் கோபித்துச் சித்த சுவாமியை அடிக்க வந்தார்கள். அப்பொழுது சித்த சுவாமி திருப்புன்முறுவல் செய்து, கையமைத்து, "நில்லுங்கள்" என்றார். அவர்கள் அடி பெயர்க்க லாற்றாது பாவைபோல நின்றார்கள். பாண்டியன், அதுகண்டு, கோபமாறி, அன்பும் அற்புதமும் பொங்க, "சுவாமீ! அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்து, சித்த சுவாமியுடைய திருவடியில் வீழ்ந்தான். அன்பிற் கிரங்கும் பரங்கருணைத் தடங்கடலாகிய சித்த சுவாமி, "வேண்டும் வரத்தைக் கேள்" என்று பணித்தருள, பாண்டியன் வணங்கி, "புத்திர பாக்கியந் தந்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தான். சித்த சுவாமி அது கொடுத்துத், தமது திருக்கரத்தை யானையின்மேல் வைத்து அருட்பார்வை செய்தார். உடனே யானை பாண்டியனுக்கு முத்துமாலையைத் துதிக்கை நீட்டிக் கொடுத்தது, பாண்டியன் கை நீட்டி வாங்கினான். வாங்குமுன் சித்த சுவாமி மறைந்தருளினார்; யானை முன்போலாயிற்று.

இவை கண்ட பாண்டியன் அஞ்சி, உயிர்க்குயிராகிய சோமசுந்தரக் கடவுளே இப்படி வந்து திருவிளையாடல் செய்தார் என்று தெளிந்து, திருக்கோயிலிற் சென்று, சிவலிங்கப் பெருமானுடைய சந்நிதியை அடைந்து, "எம்பெருமானே தமியேன் உமது திருவிளையாட்டை அறியா தளந்தேன்" என்று அழுது வணங்கி, அபராதங் கொடுத்துக், கைகுவித்து நின்று, துதிப்பானாயினான்:-

வேதியாய் வேத விளைபொருளாய் வேதத்தின்
நீதியாய் நீதி நெறிகடந்த நீளொளியாய்
ஆதியா யீறாய் நடுவா யவைகழிந்த
சோதியாய் நின்றாயென் சோதனைத்தோ நின்னியல்பே.

நின்னான் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும்
பன்னா ளருச்சித்தும் பாதந் தலைசுமந்தும்
உன்னாமம் வாசித்து முன்னையறி யேனென்று
சொன்னா லடியயேன் சோதனைத்தோ நின்னியல்பே.

பெரியதினும் பெரியதுமாய்ச் சிறியதினுஞ் சிறியதுமாய்
அரியதினு மரியதுமா யெளியதினு மெளியதுமாய்க்
கரியதுமாய்க் காண்பானுங் காட்சியுமா யவைகடந்த
துரியமுமாய் நின்றாயென் சோதனைத்தோ நின்னியல்பே.

*துன்பங்களுக்கு இடையில்தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன.*

இப்படித் துதித்து வணங்கிக்கொண்டு, பாண்டியன் தன் மாளிகைக்குச் சென்று வீற்றிருந்தான். பின்பு விக்கிரம பாண்டியனைப் பெற்றுப், பலகாலம் அரசியற்றி, அவனுக்கு முடி சூட்டித் தன்னரசை அவனிடத்து, ஒப்பித்துவிட்டுச், சிவத்தோடு கலந்தான்.

## (இருபத்திரண்டாவது)
## யானை யெய்த படலம்

விக்கிரம பாண்டியன், திக்குகளினும் பூமியினும் உள்ள அரசர்களாலே திறை யாகத் தரப்படுஞ் செல்வம் நிறைவெய்தக், கலியாகிய பகை ஓட்டெடுப்பச், செங்கோ லோச்சி முறை செய்வானாயினான். பௌத் தம் ஆருகதம் முதலிய புறச் சமயங்களாகிய களைகளைக் களைந்து, வேதத்தாலுஞ் சிவாகமத்தாலும் உணர்த்தப்படுஞ் சைவசமய மாகிய பயிரை வளர்ப்பானாயினான். தன் கீழ் வாழ்வோர் யாவரும் விதி மார்க்கத்தினும் பக்தி மார்க்கத்தினும் வழுவா தொழுகி அவை களாலே பெறற்பாலனவாகிய பயன்களைப் பெற்றுய்யும் பொருட்டு, அவர்களைத் தரும நூல் வழியே நடாத்துவனாயினான். சோம சுந்தரக் கடவுளுடைய விமானத்தருகே வட பக்கத்திலே ஒரு திருக்கோயில் செய்வித்து, அதிலே சித்த சுவாமியுடைய திருவுருவத் தைப் பிரதிட்டை செய்து, அவருக்குத் தொண்டு செய்வானாயினான்.

இப்படியொழுகு நாளிலே, சூரிய குலத்துதித்த சோழராசனொருவன் காஞ்சி நகரத் துள்ளவன் சமணர்கள் போதிக்கும் புறச்சமயமாகிய ஆருகத மதத்திலே நின்று கொண்டு பாண்டியனுக்குப் பகைவனாயினான். அவன், தான் சிவபெருமானுக்கும் மெய்யடி யானாகிய பாண்டியனை எதிர்த்து பொருது, வெல்லுதற்கு இயலாமையால், அவனை வஞ்சனையினாலே கொல்ல நினைத்து அஞ் சனம், கிரவுஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், காஞ்சி, யானைமலை, ஏமகூடம், விந்தம் என்னும் எட்டு மலைகளினுமுள்ள சமண குரவர்கள் எண்ணாயிரவரையும், ஓலை விடுத்துத் தன்னிடத்துக்கு அழைப்பித்து அவர்களை நோக்கி, "நீங்கள் அபிசாரவோமஞ் செய்து பாண்டியனைக் கொன்றீர்களாயின், எனது நாட்டிலே உங்களுக்குப் பாதி தரு வேன். போய்ச் செய்யுங்கள்" என்றான். தவத் தின் மறைந்து கொலையே செய்தொழுகுஞ் சமண குரவர்கள் அதற்குடன்பட்டுப் போய்ப் பாலியாற்றங் கரையிலே மூன்று காதமளவின தாகிய ஒரு வேள்விச்சாலை அமைப்பித்து, ஒரு யோசனை அகலந் தோண்டி, எட்டுக் கோணமுடைய ஓரோமகுண்டஞ் செய்து, நச்சு விறகினாலும், வேப்பெண்ணெயினாலும், நச்சுப் பிராணிகளினது மாமிசத்தினாலும், மிளகுபொடியூறிய எண்ணெயினாலும், அபி சாரவோமஞ் செய்தார்கள். அப்பொழுது அக்குண்டத்தினின்றும் ஒரு பெரிய யானை எழுந்தது. அதைச் சமண குரவர்கள் பார்த்து, "நீ விரைந்து போய்ப் பாண்டியனை மதுரை யோடும் அழித்துவிடக் கடவாய்" என்று சொல்லித் தென் திசைக்குச் செல்ல ஏவி விட்டுத், தாங்களுஞ் சோழனுடைய சேனை களோடு அந்த யானையைச் சூழ்ந்து சென் றார்கள்.

யானை இடிபோலார்த்து, ஏழுகடல் போல் மதம் பொழிந்து, வடவாமுகாக்கினி போலக் கண்ணினின்றும் அக்கினி சிந்தி, இயமனுந் திக்கியானைகளும் அஞ்சி நடு நடுங்கச் சென்று, மதுரையிற் புக்கது. அதைக்

*சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.*

கண்டவர்கள் விரைந்து, ஓடிப்போய், விக்கிரம பாண்டியனுக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். உடனே பாண்டியன் மனங்கலங்கித், திருக் கோயிலை அடைந்து, சோமசுந்தரக் கட வுளை வணங்கி, "எம்பெருமானே! இவ் யானையைக் கொன்று தமியேனைக் காத் தருளும்" என்று பிரார்த்தித்தான். அப்பொழுது ஆகாயத்தினின்றும், பாண்டியனே! நாம் ஒரு வில் வீரனாகி உன் பகைவர்கள் விடுத்த யானையைக் கொல்வோம். அதற்கு முன்னே இந்நகரத்துக்குக் கிழக்குத் திக்கிலே ஒரு அட்டாலை மண்டபஞ் செய்விக்கக் கடவாய்" என்று ஓரசரீரி வாக்கெழுந்தது. பாண்டியன் அதுகேட்டு, மனமகிழ்ந்து, விரைந்து சென்று, பதினாறு தூண்களையுடைய ஓரட்டாலை மண்டபஞ் செய்வித்தான்.

சோமசுந்தரக் கடவுள் இரண்டு திருச் செவிகளினுஞ் சங்கக் குண்டலங்களிட்டுக், குடுமியிலே மயிற்றோகை சூட்டி, அரையிலே செந்நிறக் கச்சை கட்டி, உடைவாள் கட்டித், திருவடிகளிலே செருப்பு மாட்டி, முதுகிலே அம்பறாத்தூணி கட்டிப், புயத்தினிட்ட வில்லி னோடுங் கருநிறமுங் காளைப் பருவமுமுடைய ஒரு வில்வீரராய்த் தோன்றி, அவ்வட்டாலை மண்டபத்தின் மீதேறிப், பாண்டியனுடைய இடுக்கணை நீக்கும் பொருட்டு அவ் யானை யின் வரவை நோக்கிக்கொண்டு நின்றார். ஐந்து கூப்பிடு தூரத்தில் அவ்யானையின் வருதலைக் கண்டு தன் கைவில்லை வளைத்து, நாண் பூட்டித் திருவிரலினாலே தெறித்துப் பேரொலிசெய்து, நாரசிங்காஸ் திரத்தைத் தொடுத்து விட்டார். அது விரைந்து சென்று, அவ்யானையின் மத்தகத்தைக் கிழித் தது; யானை அலறிக்கொண்டு விழுந்திறந் தது. அதுகண்ட விக்கிரம பாண்டியன் மனம் மகிழ்ந்து, யானையோடு வந்த சமணர்களை யுஞ் சேனைகளையுங் கண்டு கோபிக்க, அவன் குறிப்பின்வழி ஒழுகும் காவலர்கள் விரைந்து போய்ச் சமணர்களை முடுக்கிக், கையில் உள்ள தண்டங்களால் அவர்களை அடித்தும், அவர்களுடைய கையிற் கரகங் களைத் தூளாகத் தகர்த்தும், அவர்கள் உடுத்த பாய்களைத் துணிபடக் கிழித்தும், பலரைக் காலவாயில் விடுத்தும், சிலரை மானம் போக்கியும் விட்டார்கள்.

விக்கிரம பாண்டியன் அட்டாலை மண்டபத்திருந்த வில்வீரருடைய திருவடி களைக் கையினாலே பற்றிக்கொண்டு, "எம் பெருமானே! நீர் இங்கே இப்படியே எக் காலமும் எழுந்தருளியிரும்" என்று பிரார்த்தித் தான். சிவபெருமான் அதற்குடன்பட்டருளினார். பாண்டியன் பின்னுஞ் சில வரங்களைப் பெற் றுக்கொண்டு சென்றான். அவன், சோமசுந்தரக் கடவுளை வந்து வழிபட்டுக்கொண்டு வரும் நாளிலே, இராசசேகரன் என்னும் புத்திரனைப் பெற்று, அரசு செய்து கொண்டிருந்தான்.

சிவபெருமான் யானையின்மீது தொடுத்த அஸ்திரம், அங்கே நரசிங்க ரூபமாக எழுந்தருளியிருந்தது. உருத்திர மூர்த்தி யுடைய வீரசத்தியிலே சிலதரித்து இரணி யனுடைய மார்பைக் கிழித்த அந் நரசிங் கத்தை, உரோமச முனிவர் அங்கு வந் தடைந்து, தம் பெயரால் ஒரு தீர்த்தமுண் டாக்கி, வழிபட்டு, வரம் பெற்றார். பிரகலாத னும் அங்கே தவஞ் செய்து, ஈறில்லாத வரத்தையடைந்தான்.

---

*ஒரு சிறந்த மனிதனுக்கு மூன்று அறிகுறிகள் உள்ளன. நல்லொழுக்கத்துடன் இருப்பதால் விசாரமில்லாமல் இருக்கிறான். அறிவோடு இருப்பதால் மனக்கலக்கம் இல்லாமல் இருக்கிறான். தைரியமாக இருப்பதால் பயமின்றி இருக்கிறான். ஒவ்வொரு மனிதரும் இம்மூன்றையும் பெற்றிருப்பது அவசியம்.*

*நேர் வழியில் அடைய முடியாததை ஒருநாளும் குறுக்கு வழியில் அடைந்துவிட முடியாது.*

# வாழ்வாதாரம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

வாழ்வுக்கு ஆதாரமாக உடையவர்கள் மனைவி, பிள்ளைகள், சுற்றம், அயலவர்கள், நல்ல ஒழுக்கமுடைய மனைவி, நல்ல பிள்ளைகள், நல்ல சுற்றம், நல்ல அயலவர்கள் ஒரு மானுடனுக்குக் கிடைக்கப்பெறின் அவன் இப்பூவுலகில் இன்ப வாழ்வை அனுபவித்து தனது வினையை ஒழித்து, மோட்ச வாசலை அடைய வழிபெறுவான். இவையெல்லாம் இறை அருளாற்றான் ஏற்படுகின்றது என்ற உண்மையை உணர்வானாகில் வீடுபேறு நிச்சயம். பிறந்த பலனையும் பெற்றிடுவான் என்பது திண்ணம்.

இறைவனால் உயிரினங்கள் பல்வகைப்பட்ட வகையில் படைக்கப்படுகின்றன. ஒவ்வொரு உயிரினமும் வாழ்வதற்கு இறைவனால் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் படைக்கப்பட்டுள்ளன. உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ப உணவுகளும் இறைவனால் அருளப்படுகின்றன. உயிர்கள் மேற்கொண்ட பற்றினால் பூமியில் இவற்றைப் படைத்திருந்தும், அவற்றை உணராது அறியாது அலைந்து திரியும் உயிரினங்கள் பல. முன்வினைப் பயனால் உண்மைகள் உணரப்படுவதில்லை. திருக்கோவில் சென்று வழிபட்டு வர, மலம் நீங்க உண்மையைக் கண்டறிவான். ஆணவம் மனிதனின் அறிவை உணரவிடாது தடுக்கின்றது. மனித வாழ்வு சிறப்படைய வேண்டுமாயின், மனிதன் தினமும் கோவில் சென்று வழிபட்டு, தான தருமஞ் செய்ய வேண்டும். கோவிலைத் தினமும் வழிபடும்போது, மனம் தூய்மை அடைகின்றது. மனம் தூய்மை அடைந்தால், உள்ளத்தில் ஞானஒளி உண்டாகும். அவன் காண்பதெல்லாம், உண்மைப் பொருளையே காண்பான். அவன் இல்லறத்தில் மகிழ்ச்சி திளைத்திருக்கும். இல்லற வாழ்வுக்குரிய நல்லாள் வருவாள். வள்ளுவன் கூறும் பெண் மனையாளாக வருவாள்.

"தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைசார்ந்த
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

"இல்லதென் இல்லவள் மாண்பானால்
உள்ளதென் இல்லவள் மாணாக்கடை"

இல்லவளின் மாண்பினால், அவ்வீட்டில் இல்லாததொன்றுமில்லை. எனவே இல்லற வாழ்வு நல்லற வாழ்வாக ஓடிக்கொண்டிருக்கும் என்பது திண்ணம்.

இல்வாழ்வாள் இல்லத்தரசியாக இருந்து வீட்டுக்கு வரும் ஏழைகளுக்கும், அடியவர்களுக்கும் இன்னமுது வழங்குவாள். இனிய வார்த்தைகளைப் பேசி மகிழ வைப்பாள். இதை வள்ளுவன்,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

*சந்தேகத்தை எரித்துவிடு, நம்பிக்கையை விதைத்துவிடு, மகிழ்ச்சி தானாகவே மலரும்.*

இல்வாழ்வான் பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூவருக்கும் துணையாக உள்ளான் என்று கூறுகின்றார். இல்லானும் இல்லாளும் இணைந்து, தான தருமஞ்செய்து, வினை நீக்கப்பெற்று, மோட்சத்துக்கு செல்லும் வழியைக் காண்பார்கள். பெற்றோரைப்போல் பிள்ளைகளும் நல் ஒழுக்கமுடையவர்களாகவும், தந்தை தாயைக் கண்கண்ட தெய்வமாக நினைப்பவர்களாகவும் இருப்பார்கள். தாய் தந்தையே உலகமென்று உணரவைத்தவர் பிள்ளை யார் என்ற உண்மையையும் உணர்வார்கள். இதனால் இறை நம்பிக்கையுடைய பிள்ளைகளாக வும், நற்சிந்தனையுடைய பிள்ளைகளாகவும் திகழ்வார்கள். எனவே இல்லம் சுவர்க்கம்போல் ஆகிவிடும்.

மனிதனின் வாழ்வாதாரத்துக்கு கல்வி மிகவும் முக்கியம். இறையருளுடன் கூடிய கல்வியை பிள்ளைகள் கற்க பெற்றோர் வழிசெய்ய வேண்டும். கல்வி இல்லாத மனிதன் அரை மனிதன் எனக் கூறுகின்றனர். எனவே பிள்ளைகள் கல்வியைக் கசடறக் கற்று, அன்னை, பிதா, குரு பேணி நற்சீலராக வாழ வழிகாட்டுபவன் தந்தை என்பது உண்மை. குழந்தைகளுக்கு ஔவையார் அருளிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி பாடல்களையும், திருக்குறள் பாடல்களையும் அறிய வைக்கவேண்டும். வயதுக்கேற்ற பாடல்களை ஔவை அருளியுள்ளார். திருக்குறளில் கடவுள் வணக்கம், முதற்பா இரண்டையாவது தெரிய வைக்கலாம்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

"கற்றதினா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

இதன் பொருள்களையும் ஆசிரியர் பிள்ளைகளுக்கு அறிய வைக்கலாம். மனிதனின் வாழ்வாதாரம் சிறக்க ஔவையின் பாடல்களும், திருக்குறளும் கைகொடுக்கின்றன. "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பார்கள். சிறு குழந்தையில் கற்ற கல்வி மனிதன் வாழ்க்கையில் முதுமைவரை நின்று வழிகாட்டுகின்றது. சிறு குழந்தைகளுக்கு பஞ்சமா பாதகங்கள் மனித வாழ்வை சிதறடிக்கின்ற உண்மையை பெற்றோரும் ஆசிரியரும் சிறு வயதினருக்கு உணர வைக்க வேண்டும்.

வாழ்வாதாரத்திற்கு பணம் மிகவும் முக்கியம் என்று கூறுகின்றார்கள். பணமும் நல்வழியில் தேடவேண்டும். நல்ல வழியில் தேடிய பணத்தை நற்காரியங்களுக்கு செலவு செய்ய வேண்டும். புகழுக்கு விரும்பி, வேடிக்கைக்காக காரியங்கள் செய்கிறார்கள். தற்போது அநேகர் இறந்த தாய் தந்தையருக்கு பிதிர்க்கடன் செய்யாது, மோட்ச அர்ச்சனை என்று கோவில்களில் சென்று அர்ச்சனை டிக்கற் பெற்று, அர்ச்சனை செய்வதை நாகரீகமாக எண்ணுகின்றனர். இறந்த பிதிர்களுக்கு நன்றிக்கடனாக திவசம் செய்து இனத்தவர்களையும் அழைத்து அவர்களுக்கும் உணவு வழங்கி திவசம் செய்யும் வேதியருக்கும் நாம் தானம் கொடுத்து நாம் மனநிறைவு பெறுவது நம் முன்னோருக்குச் செய்யும் கடமையாகும். நம் பெற்றோரை அவர்களது முதுமைப் பருவத்தில் முதியோர் இல்லங்களில் சேர்க்காது நாமே பெற்றோரைப் பேணுவதே நமது வாழ்விற்கு உயர்வு தரும்.

*இருளான வாழ்க்கை என்று கவலை கொள்ளாதே. கனவுகள் முளைப்பது இருளில்தான்.*

மனிதனின் வாழ்வாதாரம் உண்மையாக உயரவேண்டுமாயின் சிறந்த இல்வாழ்க்கை, பெற்றோரைப் பேணுதல், தான தருமஞ் செய்தல் போன்ற விடயங்களில் மனதார ஈடுபட வேண்டும். எல்லாம் தருபவன் இறைவன். அவனின்றி ஒன்றும் அசையா என்ற உண்மையை மனக் கண் நிறுத்தி வாழ வேண்டும். அதுதான் உண்மையான வாழ்வாதாரங்களின் கோட்பாடாகும்.

## அடியவரைத் துன்புறுத்தும் துர்வாசர்

முன்னொரு காலத்தில் அம்பரீசன் என்ற அரசன் ஒரு நாட்டை ஆண்டு வந்தான். திருமாலிடத்தில் பேரன்பு பூண்டிருந்த அவன் அடியாரைப்போலவே வாழ்ந்து வந்தான். இறைவனின் அடியவர்களை வரவேற்று வழிபட்டு வந்தான். அவன் அன்பில் மகிழ்ந்த திருமால் தன் சக்கராயுதத்தை அவனிடம் தந்தார்.

ஏகாதசி விரதமிருந்து இறைவனை வழிபட நினைத்தான் அவன். விரதம் இருக்கத் தொடங்கினான். எந்தக் குறையும் ஏற்படாமல் ஓராண்டு விரதம் இருந்தான். கார்த்திகை மாதம் வந்தது. மூன்று நாட்கள் உண்ணா நோன்பு இருந்த அவன் யமுனையில் நீராடி மதுவனத்தில் இறைவனை உள்ளன்போடு வழிபட்டுக்கொண்டிருந்தான். துவாதசி நாள் வந்தது. அம்பரீசனைத் தேடித் துர்வாச முனிவர் வந்தார். அவரைப் பணிவுடன் வணங்கிய அவன், "தாங்களும் என்னோடு தங்கி பாரணை செய்து என்னைச் சிறப்பிக்க வேண்டும்" என்று வேண்டினான். அதற்கு ஒப்புக்கொண்ட முனிவர் "யமுனையில் நீராடிவிட்டு வருகிறேன். அதன் பிறகு இருவரும் சேர்ந்து பாரணை செய்யலாம்" என்று சொல்லிப் புறப்பட்டார். காத்திருந்தான் அம்பரீசன். முனிவர் வரவில்லை. பாரணை செய்து முடிக்கச் சிறிது நேரமே இருந்தது. "ஐயோ! என்ன செய்வேன்? முனிவர் இல்லாமல் நான் மட்டும் தனியே பாரணையை முடித்தால் முனிவரின் சாபத்திற்கு ஆளாக நேரிடும். பாரணை செய்யாமல் இருந்தால் விரத பங்கம் நேரும்" என்று தவியாய்த் தவித்தான் அவன்.

இறைவனை உள்ளத்தில் நினைத்தபடி அவன் துளசித் தீர்த்தத்தைச் சிறிதளவு அருந்தினான். அதை அருந்துவதால் பாரணை முடித்ததாகவும் ஆகும். முனிவரை விட்டுவிட்டு உணவு உண்டதாகவும் ஆகாது என்று நினைத்தான். கோபத்துடன் உள்ளே நுழைந்த துர்வாசர், "நான் இல்லாமல் நீ எப்படி உணவு உண்ணலாம்?" என்று கோபத்துடன் கேட்டார். "முனிவரே! கோபம் வேண்டாம். என்மீது எந்தத் தவறும் இல்லை" என்று விளக்கம் தந்தான் அவன். கோபம் அடைந்த அவர், "உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று தன் தலையிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கி எறிந்தார். உடனே அந்த முடி பெரிய பூதமாக மாறியது. அம்பரீசனை விழுங்குவதற்காகப் பூதம் அவன் அருகே நெருங்கியது. ஆனால் அவனோ இறைவனை நினைத்தபடி கண்களை மூடிக்கொண்டிருந்தான். பூசையறையில் இருந்த சக்கராயுதம் வெளிப்பட்டு அந்தப் பூதத்தைக் கொன்றது. துர்வாசரை நோக்கி வந்தது. அஞ்சி நடுங்கிய துர்வாசர் சக்கராயுதத்திடம் இருந்து உயிர் பிழைப்பதற்காக பிரமலோகம் சென்றார். பிரமனிடம் தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினார். "சக்கராயுதத்தை தடுக்கும் ஆற்றல் எனக்கு இல்லை" என்றார் பிரமன். கைலாயத்திற்கு ஓடினார் துர்வாசர். பிரமன் சொன்னதுபோலவே சிவபெருமானும் சொன்னார். கடைசியாக வைகுண்டம் சென்று திருமாலிடமே சரண் அடைந்தார்.

அவரைப் பார்த்துத் திருமால், "நான் அடியவர்களுக்கு அடிமை. அவர்களை மீறி என்னால் ஏதும் செய்யமுடியாது. என் அடியவன் ஒருவனுக்கு நீர் துன்பம் தர நினைத்தீர். அவனைக் காப்பாற்ற இந்தச் சக்கராயுதம் வந்துள்ளது. அவனையே சரண் அடைவதைத் தவிர வேறு வழி இல்லை" என்றார். பூவுலகம் ஓடி வந்த துர்வாசர், "அம்பரீசனே! என்னைக் காப்பாற்று" என்று அவனுடைய திருவடிகளில் விழுந்தார். அவரைத் தூக்கிய அம்பரீசன், "பெருந்துறவியே! என்னை வாழ்த்தியருள வேண்டும்" என்று அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினான். சீற்றத்தோடு வந்த சக்கராயுதத்தைப் பார்த்து அவன் தன் இரு கைகளையும் கூப்பி, "என் குலம் தழைக்க இவரைக் காத்து அருள வேண்டும்" என்று வேண்டினான். மகிழ்ந்த சக்கராயுதம் அவனை வலம் வந்துவிட்டுப் பூசையறையில் சென்று அமர்ந்தது.

*நம்பிக்கை இழந்தவன் வெல்வது கடினம். நம்பிக்கையுடன் இருப்பவன் வீழ்வது கடினம்.*

# வழித்துணை 40

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 கருவறையில் குழந்தையது கண்களுக்குத் தெரிவதில்லை
இருந்தாலும் குழந்தையில்லை என்றுயாரும் சொல்வதில்லை
அதுபோல்தான் கடவுளாரும் எம்முள்ளே நிறைந்துள்ளார்
உள்ளார் என்று நம்புவோற்காய் உரியநேரம் அவர்வருவார்.

02 நட்பும் ஒருவகையில் கற்பினை ஒத்ததுதான்
புனிதம் அதிலே புதைந்திருக்க வேண்டும்
புனிதம் இல்லாத நட்பினை நாம் சுமப்பின்
தனிமையைக் கூடஅது இனிமையற்ற தாக்கிவிடும்.

03 மனிதத்தை மனிதம் மதிக்காத வரையிலே
மனிதத்தின் மாண்பைநாம் அனுபவிக்க முடியாது
புனிதராய் வாழவும் இனியோராய் இருக்கவும்
மனிதத்தை மதிக்கின்ற மார்க்கமே வழியாகும்.

04 வேண்டிய உணவதே வந்திங்கு தொங்குதென்று
தூண்டிலில் அகப்பட்டு துடித்திறக்கும் மீன்போல
காண்பதைக் கண்டவுடன் எமக்கென்று ஏற்றிட்டால்
மீளவே முடியாமல் துடித்திறக்க நேர்ந்துவிடும்.

05 நேற்று நடந்ததையும் நாளை நடப்பதையும்
இன்றே எண்ணுகின்ற இயல்பினை உடையோற்கே
என்றும் நடப்பவைகள் நன்றாகும் மற்றோர்க்கு
அன்றவரின் நடைபொறுத்தே நன்மையும் தீமையுமாம்.

06 பெருந்தகை என்றொருவர் பெருமையோடு இருந்திட்டால்
பெருந்தன்மை பெருந்தன்மை யாகவே இருந்திடாது
வருந்துவோர்க்கு மருந்தாகி அருந்தொண்டு ஆற்றினால்தான்
இருந்தவரை அனுபவிப்போர் பெருந்தகைதான் என்றுரைப்பர்.

*மனிதனை மாற்றி அமைக்கும் விதி அவனது ஒழுக்கமே.*

07 லாபம் நமக்கென்றால் பெருங்குற்றம் சிறிதாகும்
பிறர்க்கந்த லாபமெனில் சிறுகுற்றம் பெரிதாகும்
லாபநஷ்டம் பார்த்தெவரும் குற்றத்தை மதிக்காமல்
குற்றத்தால் விழைவது நஷ்டமென்றே கருதிடுவீர்.

08 வேண்டாம் என்று ஒன்றைத் தூக்கிநீர் எறிந்திடாதீர்
அதுவேண்டுகின்ற வேளையிலே தூரத்தே நின்றுவிடும்
தூரத்தே நிற்கின்ற வேண்டியதை வேண்டலிலும்
வேண்டுமென்று கருதியதே வேளையதில் உதவவரும்.

09 உதவிகள் புரிந்தோரை உரியபடி மதித்தல்போல்
உதவிட விரும்பியோரையும் உள்ளத்தால் மதித்திடுவீர்
உதவிகூடச் சிலவேளை விரும்பாமல் செய்திடலாம்
விரும்புதலே உலகத்தில் உதவிடலில் மேலாம்.

10 அறியாமல் செய்திட்ட தவறுக்காய் வருந்தாதீர்
அறிந்துநீர் தவறெதையும் செய்யாமல் தவிர்த்திடுவீர்
அறியாமல் செய்ததற்காய் வருந்தாமல் இருப்பதற்கு
அறிந்து தவறுசெய்யாமல் இருப்பதுவே வழியாகும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*சிக்கனம் என்பது சிறியதொரு வருமானம்.*

# சிவபெருமானை வழிபாடு செய்து வாழ்வாங்கு வாழ உகந்தது மார்கழித் திருவெம்பாவைக் காலம்

*– திரு காரை எம்.பி. அருளானந்தன்* அவர்கள் –

மாதங்களில் சிறந்த மாதமாக மார்கழி மாதம் குறிப்பிடப்படுகின்றது. "மாதங்களில் நான் மார்கழி" எனக் கண்ணன் திருவாய் மலர்ந்துள்ளார். மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறையாமம் ஆகும். மார்கழி மாதத்தில் அதிகாலையில் துயிலெழுந்து ஏனையோரையும் துயிலெழுப்பி கூட்டாகச் சென்று ஆற்றிலும், ஏனைய நீர் நிலைகளிலும் நீராடி நோன்பு நோற்று இறைவனை வழிபாடு செய்து, உய்வு பெறும் வழக்கம் மார்கழி நோன்பு என்றும், பாவை நோன்பு என்றும் புராணங்கள் குறிப்பிடுகின்றன.

## திருவெம்பாவைக் காலம்

மார்கழி மாதம் முழுவதும் இந்த நோன்பை அனுஷ்டிக்க முடியாதவர் மார்கழி மாதத்துப் பூரணைநாளை இறுதியாகக் கொண்டு முதல் பத்து நாட்கள் இதனை அனுஷ்டிப்பர். இந்தப் பத்து நாட்களையும் திருவெம்பாவைக் காலம் என்பர்.

## கன்னிப் பெண்கள் பார்வதிதேவியைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதம்

மார்கழி நோன்பு, பாவை நோன்பு என்பன இந்து மக்களிடையே பல காலமாக இடம்பெற்று வருகின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவை, ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை என்பவற்றிலிருந்தும் இது அறியக் கிடக்கின்றது. நாட்டில் வரட்சி மிகுந்து வளம் குன்றும்போது, மழை வேண்டியும், சிறந்த உத்தம கணவரைப் பெற்றுக்கொள்ள வேண்டியும் கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் பார்வதி தேவியைக் குறித்து மார்கழி நீராடி விரதம் மேற்கொள்வது பண்டைய வழக்கம்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் சிவனைத் தரிசனம் செய்ய வந்தபோது மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் வழக்கப்படி பொழுது புலர்வதற்கு முன்னர் வைகறை யாமத்தில் துயிலெழுந்து வீடு வீடாகச் சென்று தம் தோழியர்களையும் கூவி எழுப்பி, அவர்களையும் அழைத்துக்கொண்டு ஆடியும், பாடியும் ஆற்றுக்குச் சென்று நீராடிவிட்டு பார்வதி தேவியின் பிரதிமையை ஈர மண்ணினால் செய்து வைத்துத் தத்தம் வேண்டுதல்கள் நிறைவேற வழிபாடு செய்யும் பக்திப் பரவசக் காட்சியைக் கண்ணுற்றார் போலும். தாமும் இறைவனைத் துதிக்க விரும்பி, தன்னையும் ஒரு பெண்ணாகப் பாவித்து கண்ணுற்ற நிகழ்ச்சிகளுடன் தன்னையும் இணைத்துக்கொண்டு நாயகன் நாயகி பாவத்தில் பாவைப் பாட்டுக்களைப் பாடித் தன் நிலையை வெளிப்படுத்த எண்ணினார் போலும். இதனாலேயே திருவெம்பாவைப் பாடல்கள் தோன்றின. இவ்வாறு மாணிக்கவாசகரால் திருவண்ணாமலையில்

*ஒருவர் உன்னைத் தாழ்த்திப்பேசும்போது ஊமையாய் இரு.*

அருளப்பட்ட திருவெம்பாவைப் பாடல்கள் இன்றும் சைவ ஆலயங்களில் மார்கழி மாதத்துப் பூர்வபட்ச ஆறாம் நாள் தொடங்கிப் பூரணை ஈறாகவுள்ள பத்து நாட்களிலும் அதிகாலையில் உள்ளம் உருகப் பாடிப் பரவுவதைச் சைவ மக்கள் நியமமாகக் கொண்டு வருகின்றனர்.

## பாரம்பரியமாக பேணி வந்த கலாசார விழுமியங்கள் அருகி வருகின்றன.

திருவெம்பாவைக் காலங்களில் சிவனடியார்கள் பொழுது புலர்வதன்முன் நீராடி இறை சிந்தனையுடன் வீதி வீதியாகச் சென்று திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களை இசைத்து வீடுகளின் வாயில்களில் வெண்சங்கம் முழங்கும் வழக்கம் நமது ஊர்களில் இருந்து வந்துள்ளது.

திருக்கோயில் இல்லாத ஊர், திருவெண்ணீறு வழங்காத ஊர், வெண்சங்கு முழங்காத ஊர் என்பவை ஊர்களல்ல. அவை அடவி காடுகளே என்று ஆன்றோர் கொண்டனர். நமது முன்னோர்கள் இவற்றையெல்லாம் ஊக்குவித்தனர். ஆனால் தற்காலத்தில் இவை அருகி வருவதை விசனத்துடன் குறிப்பிட வேண்டும். இவை எமது பாரம்பரியமாகப் பேணி வந்த விழுமியப் பண்புகள் சார்ந்த கலாசாரமாகும் என்பதை மறந்துவிடலாகாது.

## சிதம்பரத்தில் ஆருத்திரா தரிசனம்

திருவெம்பாவையின் நிறைவு தினமாகிய திருவாதிரைத் திருநாளில் அதிகாலையில் சிதம்பரத்தில் நடேசர் அபிஷேகமும், ஆருத்திரா தரிசனமும் இடம்பெறுகின்றது. ஈழத்துச் சிதம்பரம் எனும் சிறப்புப் பெயர் பெற்ற காரைநகர் சிவன் கோவிலிலும் திருவாதிரைத் தரிசனம் பக்திபூர்வமாக இடம்பெறுவது யாவரும் அறிந்ததே.

## மார்கழியில் திருவெம்பாவை ஓதி நற்பயன் பெறுவோம்

மாணிக்கவாசகரால் அருளப்பட்ட திருவெம்பாவைப் பாடல்கள் பல தத்துவ உட்பொருளை விளக்கி நிற்கின்றது.

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்" எனத் திருவருட் சத்தியை ஏற்றிப் போற்றுவதாக அமைத்துள்ளார். இவ்வாறாக வாழ்வியல் அனுபவங்களை திருவாசகத் தேனாகத் தருகின்றார் மாணிக்கவாசகர். ஆகவே சைவப் பெருமக்களாகிய நாமும் இவ் வையகத்தில் வாழ்வாங்கு வாழ உய்ய வழிகாட்டும் திருவெம்பாவைப் பாடல்களை இந்த மார்கழி மாதத்தில் ஓதி நற்பயன் பெறுவோமாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

*ஏதாவது ஓர் இலட்சியத்தில் நம்பிக்கை வையுங்கள். நாம் அனைவரும் நேர்மையானவர்களாகத் திகழவேண்டும். இலட்சியத்தை நம்மால் பின்பற்ற முடியவில்லை என்றால் நமது பலவீனத்தை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால் இலட்சியத்தை நாம் ஒருபோதும் இழிவுபடுத்தக்கூடாது. இலட்சியத்தைத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டுபோக எவரும் முயற்சி செய்யவும் கூடாது.*

*காயமில்லாமல் கனவுகள் காணலாம். ஆனால் வலி இல்லாமல் வெற்றிகாண முடியாது.*

# முறுவலிக்கிறான்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

பாயின்மீது ஆழ்ந்த உறக்கத்தில் படுத்திருந்த மணிவண்ணனின் முகத்தில் பதிந்திருந்த குழந்தைத் தன்மை அவனையே பார்த்துக்கொண்டிருந்த சரவணதாசரின் உள்ளத்துள் உவகையைப் பரவச் செய்தது. மகிழ்ந்து நெகிழ்ந்த மனதினுள் ஒரு வண்டு புகுந்து துளையிடும் வேதனை தலை காட்டியது. வேதனை எழுந்த பின்னர்தான் அதற்குக் காரணம் தேடியது மனம்.

அந்தப் பச்சிளம் முகத்தைப் பார்த்ததும் வேதனைகள் பறந்தோட வேண்டுமே. இது என்ன மாறாக?

ஓ! அவர் அவனுக்கு நேற்று முன் தினம் சொல்லிய கதையை மறக்க முடியாது மனம் தவிக்கிறதோ?

தவிக்கிறதோ என்று என்ன கேள்வி. நிச்சயமாக தவிக்கிறது. நீண்ட நேரம் சிந்தித்துத்தான் அதை அவர் கூறினார். அவன் வளர்ந்த பின்னர்தான் அறிந்திருந்த விவரத்தைக் கூறலாம் என்றுதான் சரவணதாசர் நினைத்தார். சிறிது காலம் கடத்தினால் அவன் கேட்பதை விட்டுவிடுவான் என எண்ணி எதையெதையோ செய்து மணிவண்ணனின் வினாவிற்கு விடையளிப்பதைத் தவிர்த்தும் வந்தார். அவனோ விடுவதாயில்லை.

மலைமீதுள்ள முருகனுக்கு பரம்பரை பரம்பரையாக அவர்கள்தான் பூசைசெய்து வருகிறார்கள். இப்போது அவர்தான் அதனைச் செய்து வருகிறார். தினமும் அதிகாலையிலும் மாலையிலும் அவருடன் மணிவண்ணன் தவறாது வருவான். முருகன்மீது மிகுந்த பக்தி கொண்டவனாக அவன் இருந்தான். வழிபாடு முடிந்த பின்னர் முருகன் சந்நிதியில் சிறிது நேரம் முருகனையே பார்த்தவாறு அமர்ந்திருப்பான். அவன் மனமொன்றி வழிபடுகிறான் என சரவணதாசர் மகிழ்ந்தார். ஆனால் அவன் அப்படி இருந்து பார்த்த வேளையில் அவனது மனம் சும்மா இருக்கவில்லையே. சிறுவன் ஆனாலும் சிந்தனைகள் எப்படியெல்லாம் போகின்றன! சுமார் இரு வாரங்களுக்கு முன் அவன் கேட்ட கேள்வியை அவனிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அதற்குப் பதிலளிப்பது தான் அவருக்கு திண்டாட்டத்தை ஏற்படுத்தி இருந்தது. ஓரளவு வளர்ந்தபின் இந்த ஆய்வுகளில் அவன் ஈடுபட்டிருக்கலாம் என அவர் கருதினார். அவனது மனம் இப்போதே இந்த விசாரணைகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டது அவருக்கு சற்று ஆச்சரியத்தைத் தந்தது. அவரால் அவனது வினாவிற்குப் பதிலளிப்பதை; தவிர்க்க இயலாதிருந்ததுதான் அவரது சங்கடமாக இருந்தது.

சரவணதாசருக்கு முற்பட்ட சந்ததியினர் பலருக்கு இவ்வாறான ஐயம் தோன்றி அதற்கு விளக்கமும் முன்னோரால் கூறப்பட்டிருந்தது. அவர்களுக்கெல்லாம் சந்தேகம் ஏற்பட்டபோது தத்துவங்களைப் புரிந்துகொள்ளும் வயதை அடைந்திருந்தார்கள். அவர் அந்தக் கதையைக் கேட்டறிந்தபோதும் அவரது அறிவு விருத்தி கண்டிருந்தது.

குன்றின் உச்சியில் அமர்ந்து அவரது குடும்பத்தினருக்கு அருள்பாலித்து வரும் முருகன் ஏனைய கோவில்களில் வீற்றிருக்கும்

குமரனாகக் காட்சி தரவில்லை. அவன் வள்ளி தெய்வானை சமேத கல்யாண கோலத்தில் தான் பெரும்பாலும் கோவில்களில் தரிசனம் தருகிறான். பாலசுப்பிரமணியனாக கோலங் காட்டினாலும் பட்டாடையும் கிரீடமும் பள பளக்கும் அலங்காரமுமாகவே அவனது தோற்றமிருக்கும். இங்குமட்டும் ஒரு நகை இல்லை. கிரீடமில்லை. தலையில் முடி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. தலை முடியே இல்லாது மழுங்க வழித்து பட்டுப் பீதாம்பரம் மட்டுமல்ல பருத்தியாடைகூட இல்லாமல் கௌபீனத்துடன் நிற்கிறான் இந்த முருகன் ஏன் இந்தத் தோற்றம்?

அது பல்லாண்டுகளுக்கு முன் நடந்த வரலாறு. அந்தக் குடும்பத்திற்கு மட்டுமே தெரிந்த கதை.

சரவணதாசரின் தந்தை வழி முன் னோர் ஒருவர்தான் இந்தக் கோவிலைக் கட்டி முருகனை ஸ்தாபித்தவர். அவரது சித்தத்துள் ஓர் ஐயம்!

இறைவன் ஆசாபாசங்களற்றவன். ஒரே யோர் உண்மைப் பொருளாய் விளங்குபவன். பொம்மைகளை வைத்து விளையாடும் பிள்ளை களாக அவனை அலங்கரித்து திருமணம் செய்து வைத்து அழகு பார்த்து மகிழ்வது அவரைப் பொறுத்தவரை ஏற்புடையதல்ல என்றே அவரது மனம் நம்பியது. அவரால் அவற்றை எல்லாம் ஏற்கமுடியவில்லை. அவர்; வணங்கும் இறைவன் அன்பு மயமானவன் ஆசாபாசங்களற்றவன். அவர் தனது மனத்தில் தான் விரும்பிய கோலத்தில் முருகனைக் கண்டு வழிபடலானார். பின்னர் அமைதியாக அமர்ந்திருந்து வழிபடக்கூடிய இடமான மலையுச்சியைத் தேர்ந்தெடுத்து அதில் ஒரு கோவிலை அமைத்தார். தான் மனதிலிருத்தி வழிபடும் துறவி போன்ற வடிவில் முருகனை அக்கோவிலுள் ஸ்தாபித்தார். வணங்குபவர் விரும்பும் வடிவிலே அமர்ந்து அருள் பாலிப் பவன்தானே இறைவன் அவர் விரும்பிய வடி விலே ஆண்டிப் பண்டாரமாக இறைவன் அக் கோவிலில் குடியமர்ந்தான்.

ஏன் இந்தக் கோவிலில் இப்படி முரு கன் இருக்கிறான்? என்ற மணிவண்ணனின் கேள்விக்கு அவனது மூதாதையரின் தத்துவ ரீதியான எண்ணத்தைக் கூறினால் அதை அவனால் விளங்கிக்கொள்ள முடியாது என் பது சரவணதாசரின் கணிப்பு. எனவே பதில் கூறாது தப்பித்துக்கொள்ள முயன்றார். அவ ரது பேரன் அவ்வளவு இலகுவில் ஏமாறுபவன் அல்ல.

நாட்கள் நகரும்போது அவரது மூளை யும் தீவிரமாக வேலைசெய்துகொண்டிருந்தது. வளர்ந்தவர்களே எங்கும் எதிலும் இறைவனைக் காணவியலாது தடுமாறுகிறார்கள். ஒவ்வோர் உருவில் இறைவனைக் கண்டு வாய்த் தர்க் கம் தொடக்கம் பெரும் போர்வரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கையில் இந்தப் பாலகனுக்கு இறைவன் எங்கும் நிறைந்தவன், எல்லாம் அறிந்த ஞான உரு வானவன், அன்பே உருவானவன், அவன் காம குரோதங்களால் பாதிக்கப்படாதவன் என்ற தத்துவத்தை விளக்கினால் அதைப் புரிந்துகொள்வானா? நிச்சயமாக இயலாது என்றே சரவணதாசர் நம்பினார். அப்படி யானால் என்ன செய்வது? அவர் இறுதியாக ஒரு முடிவிற்கு வந்தார். ஏதாவது ஒரு கதை யைத் தற்போதைக்குச் சொல்லி அவனைச் சமாளிப்பது சிறிது காலம் சென்ற பின் முன் னர் நடந்தவற்றை அவனுக்கு விவரிக்கலாம். என்ன சொல்லலாம்?

பல பல கதைகளை ஒன்று மாறி ஒன்றாகப் புனைந்து மனதிற்குள்ளேயே சொல் லிப் பார்த்தார். எதுவும் திருப்தி தராது போய் இறுதியில் ஒன்று தேறியது. ஆனாலும் ஏதோ

*பிறரை நம்பி வாழ்பவருக்கு வறுமை என்றும் இருந்துகொண்டே இருக்கும்.*

இனங்காணமுடியாத குற்ற உணர்வு அவருள் உறுத்திக்கொண்டுமிருந்தது.

நேற்று முன்தினம் கோவிலிலிருந்து திரும்புமிடத்து மணிவண்ணன் மீளவும் தன் ஐயத்தைக் கேட்கமுற்பட்டான்.

நான் கேட்டதுக்கு நீங்கள் பதில் சொல்லேல்லையே தாத்தா?

எதுக்கு பதில் சொல்லேல்லை? இயன்றவரை தப்பிக்கும் முயற்சியைக் கைவிடாதிருக்கும் எண்ணத்துடன் அவன் கேட்டதையே மறந்த பாவனையில் அவர் பதிலுக்கு ஒரு கேள்வி கேட்டார்.

ஏன் எங்கடை கோயில் முருகன் மட்டும் சந்நாசி மாதிரி இருக்கிறார்?

அது ஒரு கதை. என்ன கதை? சொல்லுங்கோ தாத்தா.

நாரத முனிவரைத் தெரியுமோ? ஓ அந்த கலகக்கார முனிவர்தானே? அப்படி யெல்லாம் சொல்லக்கூடாது. நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பார்கள். பேரனைக் கடிந்துகொள்வதுபோல் சரவணதாசரின் குரல் ஒலித்தது. கதையைச் சொல்லுங்கோ தாத்தா. இம்முறையும் கதையைச் சொல்லாமல் விட்டு விடுவாரோ என்ற சந்தேகத்தில் மணிவண்ணன் அவசரப்பட்டான். தாத்தா அவனிடமிருந்து தப்பமுடியாது என்பதைப் புரிந்துகொண்ட வராகக் கதையைக் கூற ஆரம்பித்தார்.

நாரதமுனிவருக்கு ஒரு அருமையான மாம்பழம் கிடைத்தது. அதை என்ன செய்ய லாம் என்று அவர் ஆலோசித்தார்.

மாம்பழம் கிடைத்தால் சாப்பிட வேண்டியதுதானே? அதற்கு ஏனிருந்து யோசித் தவர்? மணிவண்ணனுக்கு ஆரம்பத்திலேயே சந்தேகம் தோன்றிவிட்டது. அச்சந்தேகம் சரவணதாசரைச் சங்கடப்படுத்தியது.

ஏன் கதையை நான் சரியாகப் புனையவில்லையோ? அவன் கேட்பதும் சரிதானே. பழம் கிடைத்தால் சாப்பிடாமல் சிவபிரானிடம் கொண்டுபோய் ஏன் கொடுக்க வேண்டும்? கதையைத் தொடரும்போது இந் தக் கேள்வியையும் கேட்கப் போகிறான். அதையும் தவிர்க்கக்கூடியதாக ஏதாவது சொல்ல வேண்டும். மூளையைச் சிறிது தீட்டிக் கொண்டு சரவணதாசர் தொடர்ந்தார்.

அது கிடைத்தற்கரிய கனி. கற்பகதரு வில் காய்த்துப் பழுத்த பழம். அதனால் சிவபெருமானிடம் கொடுக்கலாம் என முனிவர் தீர்மானித்தார்.

கற்பகதருவின் பழம் சிவபெருமானுக் குக் கிடைக்காதா தாத்தா? மனிதர் யாருக் காவது கொடுக்கலாம் மீண்டும் குறுக்கிட்டான் பேரன்.

எது கிடைத்தாலும் கடவுளுக்குப் படைத்துத்தானே நாங்கள் சாப்பிடுகிறோம். அப்படித்தான் அவரும் நினைத்திருக்க வேண் டும். தாத்தா சமாளித்தார். கைலாசமலைக்குப் போய் சிவபெருமானிடம் பழத்தைக் கையளித் தார் முனிவர். அது என்ன பழம் என விசாரித் தார் சிவபெருமான். கற்பகதருவின் அருமை யான பழம் என்று கூறி அதன் பெருமைகளை எடுத்துரைத்தார் முனிவர். ஒரு பழத்தை எல் லோருக்கும் கொடுக்க முடியாதே. பழத்தை என்ன செய்யலாம்? என்று சிவபிரான் சிந்தித் தார். இந்தப் பழத்தை வைத்துக்கொண்டு சாப்பிட முடியாமல் எல்லோரும் யோசிக்கினம். எல்லாம் இந்த நாரத முனிவராலைதான். மணிவண்ணன் சிறிய கோபத்துடன் கூறினான்.

முதலே நீங்கள் சொல்லீட்டிங்கள் தானே கலகக்கார முனிவர் எண்டு. பிறகு என்ன நடந்தது? சொல்லுங்கோ தாத்தா. நாங்கள் வீட்டில் இப்படி ஏதாவது ஒன்று கிடைத்தால் என்ன செய்யிறனாங்கள்? சின்னப் பிள்ளை எண்டு எனக்குத்தான் தாறனீங்கள். அங்கேயும் அதுதான் நடந்தது. இங்கே

*பேசிய பிறகு வருந்துவதைவிட, பேசுவதற்கு முன் யோசிப்பது நன்று.*

பிள்ளையாரும் முருகனும் சின்னப்பிள்ளைகள் பங்கிட்டு இரண்டு பேருக்கும் கொடுக்கலாம் என்று சிவபிரான் தீர்மானித்தார்.

தனக்கே மாம்பழம் கிடைத்துவிட்டது போன்று மணிவண்ணன் கலகலவெனச் சிரித்தான். தாத்தா அடுத்துக்கூறியது அவனது மகிழ்ச்சியைப் பட்டென்று தணித்தது. சிவபெருமானை அப்படிச் செய்யவிடாது நாரதமுனிவர் தடுத்தார். பழத்தை முழுமையாக ஒருவர்தான் சாப்பிட வேண்டும். இது கற்பகதருவின் பழம் என்பதால் பங்கிடக்கூடாது என்பது முனிவரின் நிபந்தனையாயிருந்தது. சிவபிரான் இரு பிள்ளைகளுக்கும் ஒரு போட்டி வைக்கத் தீர்மானித்தார்.

என்ன போட்டி தாத்தா? மணிவண்ணன் அவசரப்பட்டான்.

இந்த உலகத்தைச் சுற்றிக்கொண்டு வரவேண்டும். சுற்றிவிட்டு முதலிலே வருகிறவருக்கு மாம்பழத்தைக் கொடுப்பது. உலகத்தையா? மணிவண்ணன் திகைப்புடன் கேட்டான்.

ம்! கடவுள் சின்ன இடத்தைச் சுற்றச் சொல்வாரா? உடனேயே முருகன் மயிலில் ஏறி உலகை வலம் வரத் தொடங்கினார்.

பிள்ளையார் எலியிலை ஏறிச் சுற்றத் தொடங்கினார். அந்தக் கற்பனையிலேயே சிரிப்பு பீறிட அவன் சிரித்துக்கொண்டே இருந்தான்.

அப்படி கடவுளை நினைத்துச் சிரிக்கக்கூடாது எனப் பேரனைக் கண்டிக்கும் போதே அந்த அறிஞரின் வாக்கு மனதுள் எழுந்து பேரனை நோக்கி சுட்டுவிரலையும் அவரை நோக்கி மூன்று விரல்களையும் நீட்ட வைத்து தகித்தது. தவறோ சரியோ கதையைத் தொடங்கியாயிற்று. இடையில் விட்டு விட முடியாது. அவர் தொடர்ந்தார். பிள்ளையார் உடனே தந்தையையும் தாயையும் வலம் வந்து வணங்கினார். ஒரு பிள்ளைக்குத் தந்தையும் தாயும்தானே உலகம். நான் உலகைச் சுற்றி வந்துவிட்டேன் என அவர் கூறியபோது சிவபிரானால் அதை மறுக்க முடியவில்லை. தந்தையும் தாயுமே ஒரு பிள்ளைக்கு உலகம் என்ற உயர்ந்த கருத்தை எப்படி மறுப்பது? ஆனபடியால் பழத்தை கணேசனிடமே கொடுத்துவிட்டார்.

இரண்டு தடவைகள் தந்தையும் தாயுந்தான் உலகம் என்று அழுத்திக் கூறியதன் மூலம் பேரனின் மனதில் அக்கருத்தைப் பதிய வைத்துவிட்டேனா என உறுதிசெய்வதற்கு அவனது முகத்தை ஒருமுறை உற்று நோக்கினார் சரவணதாசர். செய்யவியலாது என எடுத்த எடுப்பில் தோன்றுவதை ஒருவன் தன் புத்திக்கூர்மையால் சாதித்து விடலாம் என்பதையும் பேரன் உள்வாங்கிக்கொள்ள வேண்டும் என்பது அவரின் எதிர்பார்ப்பு. அவனது முகத்தில் எதையும் கண்டுகொள்ள முடியவில்லை. கதைகேட்கும் ஆர்வந்தான் அதில் தெரிந்தது. முருகன் பாவம் தாத்தா.

முருகன் வந்து பார்த்தால் பிள்ளையாரிடம் பழம் இருந்தது. அவனுக்கு வந்த கோபத்தில் எல்லாவற்றையும் வெறுத்து மலையின் மேலே போய் இருந்துவிட்டான்.

அதுதான் சரி தாத்தா. கோபத்தோடு பேரன் சொல்லியது அவரைத் திடுக்குற வைத்தது. அதைச் சரி என அந்தக் குழந்தை மனம்...? பெருந்தவறிழைத்த வேதனை அவரை அறியாமலே உள்ளே மோதித் தளும்புகிறது.

மணிவண்ணன் கதையை மறந்திருப்பான். அடுத்த வருடம் நடந்ததைச் சொல்லி விடவேண்டும் என அடிக்கடி தனக்குள் தன் மனதைச் சமாதானப்படுத்திக்கொள்வார் சரவணதாசர். ஆனால் அவரது ஆழ்மனம் அந்தச் சமாதானத்தை ஏற்கவில்லை என்பதே உண்மை.

*எண்ணங்களைத் தூய்மைப்படுத்துங்கள். உலகம் உங்கள் எண்ணங்களை வணங்கும்.*

தனித்திருக்கும்போதும் உறக்கத்தினுட் புகும் போதும் முருகன் அவரிடம் ஓடிவந்துவிடுவான். ஞானப்பிழம்பாய் நின்று முறுவலிப்பான்.

இல்லை. இல்லை. நான் சொன்னது தவறு. நீ ஞானமயமானவன். நீ ஏமாந்தாய் என்று நான் சொன்னது, சொன்னது மட்டு மல்ல அப்படி நினைத்ததே தவறு முருகா. என்னை மன்னித்துவிடு ஐயா.

சரவணதாசர் கதறுவார். கந்தன் மென் முறுவலுடன் நிற்பான். கோபம் எனக்கு ஏற்பட்டால்தானே மன்னிக்க வேண்டும்? இந்த ஆசை கோபம் எல்லாம் என்னை அண்டாது. அவனது முறுவல் அவரைப் பார்த்துக் கூறும். அவர் துடித்துப் போவார். நெஞ்சை அடைக் கும். எழுந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்வார். குளிர் நீரைக் குடித்துவிட்டுப் படுத்துக்கொள்வார்.

மணிவண்ணனுக்கு நடந்த உண்மைச் சம்பவத்தைக் கூறலாம் என்று நினைப்பார். ஆனால் சிறிது காலம் செல்வது நல்லதென மனம் சொல்லும். அதனால் நாட்கள் மெல்ல நகர்ந்தன. அன்றிரவும் அதே காட்சி. முரு கனின் தரிசனம். மனம் பதைக்க நெஞ்சு அடைக்க அவரால் எழுந்திருக்க இயல வில்லை. அவர் எழுந்திருக்கவேயில்லை.

*-நன்றி: தினக்குரல்-*

## கொடுத்துப் பெறு

ஒரு புத்த மடாலயத் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். ஒரு காலத்தில் அவரது மடாலயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கிய ஆலயம். தற்போது மதிப்பு குறைந்து பாதாளத்துக்குப் போய்க்கொண்டிருந்தது அவருக்குத் தெளிவாக விளங்கியது. மடத்தின் உள்ளேயே பிக்குகள் யாரும் ஒருவரை ஒருவர் மதிக்காமல் தன்னிச்சையாக செயற்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

பொறுக்க இயலாமல் ஒருநாள் மடாலயத் தலைவர் தன்னைவிட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னார். அந்தக் குருவும் சற்று நேரம் ஆழ்ந்து யோசித்துவிட்டு பிறகு "உங்கள் மடத்தில் புத்தரே வந்து தங்கியிருக்கிறார். நீங்கள் எவரும் அவரைக் கண்டுகொள்ளவும் இல்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படிச் சிறப்பு செழிக்கும்?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட தலைவர் வியப்பு மாறாமலே மடத்துக்குத் திரும்ப வந்து அங்கே இருந்த புத்த பிக்குகளுக்கு விபரம் சொன்னார். அவர்களுக்கும் ஆச்சரியம். அந்தக் கணத்தில் இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர் கடவுளாக இருக்கக்கூடும் என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும் அன்பாகவும் மிகுந்த மரியாதையுடனும் ஒவ்வொருவரும் அணுகினார்கள். நாளடைவில் மடத்தின் சிறப்பு பல மடங்கு உயர்ந்தது என்பதை சொல்லத் தேவையே இல்லை!

கூடிச் செயற்படும்போது கொடுத்துப் பெறுதல் அவசியமான ஒரு சூட்சுமம் ஆகும்.

*உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.*

# சமகாலச் சைவ சமூகத்தவருக்குச் சைவக் கல்வியின் பொருத்தப்பாடு

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

கல்வியானது தனிமனிதனினதும், சமுதாயத்தினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக அமையவேண்டும். வாழ்க்கைத் தரம் என்பது சமூக - பொருளாதார பலத்தை மட்டும் கொண்டு கணிக்கப்படுவதன்று. பண்புப் பலம், ஒழுக்கப்பலம், ஆன்மிகப்பலம் என்பவற்றையும் இணைத்தே வாழ்க்கைத்தரம் கணிக்கப்படுதல் அவசியமாகும். தற்காலத்தில், கல்விமுறைமை மனிதரின் சமூக- பொருளாதார பலத்தை அதிகரிக்க உதவுகிறது. ஆனால், அவர்களின் பண்பாட்டு, ஒழுக்க, ஆன்மிகத் தேவைகளையும் ஆர்வங்களையும் நிறைவேற்ற வல்லதா, என்றால் இல்லையென்றே கூறவேண்டும்.

கல்வியின் அளவுசார்ந்த வளர்ச்சியுடன் பண்புசார்ந்த வளர்ச்சியும் சம அளவில் ஒருங்கிணைந்து ஏற்படும்போதே, கல்வி முழுமை பெறுகிறது. அவ்வாறு முழுமை பெற்ற கல்வியின் பயனாக அடையப்படும் வாழ்க்கைத் தரத்தின் உயர்வே, முழுமையும் சமநிலையும் கொண்டதாக அமைகின்றது.

கல்விக் கூறுகளின் வகைகளையும்- உலகியல், ஆன்மிகம் - குறிக்கோள்களின் முழுமைகளையும் கருத்திற்கொள்ளாத கல்வியினால் நன்மைகளிலும் தீமைகளே அதிகம் என்பதைச் சமகாலத்தில் நிலவும் சமூகப் பிரச்சினைகள், சூழலியற் பிரச்சினைகள் என்பன கோடிட்டுக் காட்டுகின்றன.

சமூகத்தின் பொதுப் பிரச்சினைகளுக்குக், கல்வியில் உள்ள குறைபாடுகளே அடிமூலம் என்பது உணரப்பட வேண்டியது. இதிலிருந்து பிறக்கும் கருத்து என்னவெனில், கல்வியில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பெற்றால், சமூகப் பிரச்சினைகள் தீர்வதற்கு வழி ஏற்படும் என்பதாகும்.

மனிதர்கள் தற்போது முகங்கொள்ளும் பிரச்சினைகள், விஞ்ஞான தொழில்நுட்ப, தகவல்துறைகளின் ஈடுஇணையற்ற, அதிவேக வளர்ச்சியினாலும், அவ்வளர்ச்சிக்கு இணையாக ஆன்மிக விழுமியங்கள், மனிதப் பண்புகள், ஒழுக்கங்கள், சீலங்கள் என்பன கல்வியால் வளர்க்கப்படாமையினாலும் ஏற்பட்டவை என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், எதிர்காலக் குடிமக்களாகிய, தற்போதைய பிள்ளைகளை, எவ்வாறு நல்லவர்களாக வளர்த்துவிடலாம், அதற்கு எத்தகைய கல்வி இன்று தேவைப்படுகிறது என்பன பற்றிச் சிந்தித்துச் செயற்பட வேண்டிய பொறுப்பும் கடமையும் தற்போதைய வளர்ந்தவர்களுக்கு உண்டு.

கல்வியானது உடல், உள்ளம், உணர்வு, அறிவு, விவேகம், ஆன்மிகம், பண்பாடு, ஒழுக்கம், சமூகம், பொருளாதாரம் ஆகிய அனைத்தினதும் ஒருங்கிணைந்த வளர்ச்சியைச் சமநிலையில் மனிதனில் ஏற்படுத்த வேண்டும். முழுமையான ஆளுமை வளர்ச்சி, முழு மனிதவாக்கம் என்பன அப்பொழுதுதான் எய்தப்படுகிறது.

தற்போதைய பாடசாலைக் கல்வி முறைமை, ஆன்மிகம், பண்பாடு, ஒழுக்கம், உணர்வு என்பவற்றில் மனிதர்களில் வளர்ச்சி பெறுவதற்கு வழிசெய்யவில்லை என்னும்

குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளது. கல்வி மனிதரைச் சமூகமயப்படுத்தலுடன், அவர்களை ஆன்மிக மயப்படுத்தல், பண்பாட்டு மயப்படுத்தல், கலாசார மயப்படுத்தல் என்பவற்றையும் நிகழ்த்துதல் இன்றியமையாததாகும். இங்குதான், சைவத்தமிழ்க் கல்வி மரபு மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டியதன் இன்றியமையாமை மேலெழுகிறது.

இன்றைய இளைஞர் சமுதாயம், சமயக்கல்வியைக் கற்று ஒழுகுவதற்கு வாய்ப்புத் தரப்படாமையினால், வன்முறைகள் மூலமும், எதிர்மறையான வழிகள் ஊடாகவும் தமது உணர்ச்சிகளையும் ஆர்வங்களையும் வெளிப்படுத்த நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மாணவப் பருவத்தினர் சிலரின் அடாத செயல்கள் பற்றிப் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. இளைய பராயத்தினரின் உள்ளங்களில் எதிர்மறைப் பாங்கான உணர்வுகளும், வன்முறை எண்ணங்களும் எழுவதும் அவற்றை உடனடியாகவே செயற்பாடாக்குவதும் தமிழர் சமுதாயத்தில் சர்வசாதாரணமாகி வருகிறது. இளையோரின் உணர்வுகளும் கருத்துக்களும் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு, தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில்- குறிப்பாக இலங்கையில்- தகுந்த சூழ்நிலைகள் உவப்பாக இல்லாமையினாலும் இயல்புக்கு மாறான தடைகள் பல, விதிக்கப்பட்டிருப்பதனாலும் போர் மூட்டங்கள் காரணமாக மன அழுத்தங்கள் வயப்பட்டிருப்பதாலும், அவர்களின் உணர்வுகள் வெளிப்பட்டுப் பிரவாகிக்க ஏற்ற வடிகால்கள் இல்லாமையினாலும், அவை வன்முறைகள், வன்செயல்கள் ஆக வெடிக்கின்றன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மேலே கூறிய உவப்பற்ற சூழல்களில் வாழும் இளையோர் மாத்திரமல்ல, உவப்பான சூழல்களிலும் செல்வச்செழிப்பிலும் வாழ்கின்ற இளையோர்களிலும் பலர் தற்காலத்தில் தம் உணர்வுகளையும், எண்ணங்களையும் இவ்வாறு வன்ம உணர்வுகளாகவும், வக்கிர எண்ணங்களாகவும் மாற்றி வன்செயல்களிலும், பிறழ்வான நடத்தைகளிலும் ஈடுபட்டு வருதலைக் காணக்கூடியதாக உள்ளது. தற்காலத் திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இணைய நிகழ்ச்சிகள் போன்றன எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல அமைகின்றன. இளையோர்களை உய்ய விடுவதில்லை, எனப் பல எதிர்மறைச் சக்திகள் கங்கணம் கட்டிக்கொண்டு இருப்பதையே இன்றைய உலகில் காண்கிறோம். உலகமயமாக்கல், திறந்த பொருளாதாரம், புலம்பெயர்தல் என்பன காரணமாகவும் இளையோரின் கலாசாரம், மனிதப் பண்புகள் சீரழிகின்றன. இந்நிலையில், சமயம்தான் கைகொடுத்து உதவி, நிலைமையைச் சீராக்க வேண்டும். சமயம், இளையோரின் உணர்வுகளையும், கருத்துக்களையும் உடன்பாடான முறையிலும், நன்முறைப்பாங்கிலும், ஆக்கபூர்வமாகவும் வெளிப்படுத்த உதவும் சாதனமாகப் பண்டுதொட்டு இருந்துவருகிறது. சைவநெறி, சைவக் கல்விமூலமே, சைவத்தமிழ் மக்களின் வாழ்க்கையை, மேம்படுத்தி வந்தது; மனித ஒழுக்க, ஆன்மிகப் பண்புகளை வளர்ச்சி பெறச் செய்தது. பிள்ளைகளுக்கு விழுமிய ஆன்மிகக் கல்வியை, அறநெறிக் கல்வியை, ஒழுக்கக் கல்வியை வழங்கி மனிதப் பண்புகள் நிறைந்த மனிதர்களாக, நல்லொழுக்கம் உள்ளவர்களாக வளர்த்துவிடுவதை முதன்மை நோக்கமாகக் கொண்ட சைவக்கல்வியினால் மனிதரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. சமூகத்தின் உறுதிப்பாடும், சாந்தியும் அமைதியும் நிலைநாட்டப்பட்டது. ஆனால் சமயமும், சமயக் கல்வியும் புறக்கணிப்புக்குள்ளான இக்காலத்தில், மனித அழிப்புக்களும், மனித

*நீ பட்ட துன்பத்தைவிட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.*

குலநாசமும் தவிர்க்க முடியாததாகி வருகின்றன.

எனவே, சைவக்கல்வியை மீளவும் மலர்ச்சிபெறச் செய்து, அதன்மூலம் பிள்ளைகளின் உள்ளங்களில் நல்ல எண்ணங்களையும், உணர்வுகளையும் எழச்செய்து, உணர்வில் நல்லுணர்ச்சிகளைத் தூண்டி, நாவில் இன்சொற்களையே உறையச் செய்து, செயலில் நன்னடத்தையைப் பழக்கிவிடுதல் இன்றைய அத்தியாவசிய தேவையாக உள்ளது; அதுவே மிகச் சிறந்த சேவையுமாகும் என்பதைக் காலங்கடந்த இத்தருணத்திலாதல் உணர்ந்துகொண்டு செயற்பட்டால் விமோசனம் உண்டு.

சைவக்கல்வி, தொன்மையும் மாறா அழகுங்கொண்டு, நிரந்தரமானதாகத் திகழ்கிறது. அது மறுமலர்ச்சியின் ஊற்றாகவும் விளங்குகிறது. பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் பொருந்துவனவாய் அமைவது அதன் சிறப்பாகும். பழமை என்பது பிற்போக்கு அன்று; அது பின்னோக்கு ஆகும்.

பின்னோக்கும் முற்போக்கும் இணையக்கூடியன; இணையவும் வேண்டியன. பின்னோக்குதல், புதுமைக்கு அடித்தளமாதல் வேண்டும். சைவக்கல்வி மூலம் இதனை ஏற்படுத்த முடியும்.

## அறநெறிக் கல்வி:

சைவக்கல்வியை முறைசார், முறைசாரா முறைகளில் புகட்டமுடியும். இன்றைய உலக நிலைமையில், முறைசாராக் கல்வியாகச் சைவக்கல்வியை வழங்குவதே உடனடியாகச் செய்யக்கூடிய கைங்கரியமாகும். ஆகவேதான், அறநெறிக் கல்வித் தத்துவம் இன்று மலர்ச்சி பெற்றுள்ளது. சான்றோர் ஆக்குதல்; ஆன்மிகமயப்படுத்தல்; உலகினை ஒன்றாகக் காணும் பெற்றியைப் பெற்றுக் கொடுத்தல்; சைவ ஒழுக்கம், பண்பாடு என்பவற்றைப் பேணச் செய்தல்; தன்னையறிதல்; ஆன்ம ஈடேற்றம் என்பவற்றை கல்வி இலக்குகளாகக் கொண்டுள்ளது. கல்வி, உலகியல் சார்ந்ததாக மட்டும் தற்போது இருக்கின்ற நிலையிலிருந்து மாறி, ஆன்மிகத்தையும் இணைத்துக்கொண்டு, "தூயநற்கல்வி"யாக விளக்கம் பெறுவதற்கு அறநெறிக் கல்வித் தத்துவம் துணையாகின்றது.

## அறநெறிப் பாடசாலைகள்:

இலங்கைப் பாடசாலைகளில் சைவ சமயம் ஒரு பாடமாக, முதலாந்தரம் முதல் பதினோராந்தரம் (பாடசாலை இறுதி வகுப்பு) வரை கற்பிக்கப்படுகின்றது. சமயப் போதனை பரீட்சையை மையமாகக் கொண்டே நடத்தப்படுவதால், மாணவர்கள் பரீட்சைகளில் திறமைச் சித்திகளைப் பெறுகிறார்களேயன்றி, சமய அனுட்டானத்திலும், அறநெறி வாழ்விலும் ஒழுக்கத்திலும் சிரத்தை எடுப்பதாக இல்லை. எனவே, சைவசமய அனுட்டானத்திற்கும் ஒழுக்கநெறிப் பண்பாட்டிற்கும் ஏற்ற அறநெறிக் கல்வியையளிப்பதன் பொருட்டு இலங்கையில் அறநெறிப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. ஞாயிறு தினங்களில் இப்பாடசாலைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

அறநெறிப் பாடசாலைகளில், சைவக் கல்வியை ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையிலான அனைத்துப் பிள்ளைகளும் பெற்றுக்கொள்ள வகைசெய்யப்பட்டுள்ளது. கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது. அத்துடன் சத்துணவுத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சைவ ஆலயங்கள், சைவ மன்றங்கள் என்பன அறநெறிப் பாடசாலைகளை முன்னின்று நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. மாணவ மாணவிகள் சைவப் பண்பாட்டிற்கு ஏற்ற உடைகளை அணிதல், சைவ

*எதிர்க்கத் துணிவில்லாதவன் வெற்றியை எதிர்பார்க்க முடியாது.*

உணவு உண்ணல் என்பன ஊக்குவிக்கப் படுகின்றன. இலங்கையின் இந்துசமய, கலாசார அலுவல்கள் அமைச்சும், திணைக் களமும். அறநெறிப் பாடசாலைகளுக்குப் பாடத்திட்டங்களை அமைத்துக் கொடுத்தும், சமய நூல்களை வழங்கியும், ஆசிரியர்களுக் குப் பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தியும், பண்ணிசை வகுப்புகளை நடத்தியும் ஊக் கமும் ஒத்துழைப்பும் வழங்கி வருகின்றன. மாணவரிடையே பேச்சு, கட்டுரை பண்ணிசைப் போட்டிகளையும் நடத்தி வருகின்றன. அற நெறிப் பாடசாலைகள் யாவும் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 557 பாடசாலைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் திணைக்களக் குறிப்பொன்று கூறுகிறது. கலாசார உத்தியோ கத்தர்கள் இப்பாடசாலைகளைக் கண் காணித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவ் அறநெறிப் பாடசாலை முறை மையைச் சைவத் தமிழ்மக்கள் வாழும் உலகின் பல பாகங்களில் நடைமுறைப் படுத்துவதன்மூலம், அனைத்துச் சைவச்சிறார் களும் சைவத்தை அறியவும் சைவ ஒழுக்கம், பண்பாடு, கலாசாரம் என்பவற்றைப் பேணவும், அநுட்டிக்கவும் வழிபிறக்கும். அறநெறிப் பாட சாலைகள் மூலம் சைவக் கல்வியை மறு மலர்ச்சியடையச் செய்தல் நம் ஒவ்வொரு வரினதும் கடமையும் பொறுப்பும் ஆகும்.

ஆன்மீகம் என்றால் பல மூடநம்பிக்கைகளை உள்ளடக்கியது என்பது பலபேருடைய கருத்து. அது தவறு. ஆன்மீகத்தைத் தவறாகப் புரிந்துகொண்டு நடப்பவர்கள்தான் தவறானவர்கள். இறைவனிடமிருந்து தான் நாம் எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டோம். எனவே அவரிடம் எது இல்லை? நாம் கொடுப்பதற்கு? எல்லாம் உடையவர் அவர் என்று தெரிந்துகொள்வதுதானே ஆன்மீகம். எனவே அவரிடமே எல்லாம் இருக்கும்போது அவருக்கு நாம் தொண்டு செய்யவேண்டுமே தவிர பொன்னும் பொருளும் கொடுப்பதல்ல ஆன்மீகம். தொண்டு செய்வதென்றால் நமது உடம்பினால்தான் செய்ய வேண்டும். அப்படி என்ன செய்ய முடியும்? இறைவனோ எதையும் நம்மிடம் கேட்பதில்லை. ஆனால் அவன் ஒன்றை எதிர்பார்க்கிறான். அதாவது தன் குழந்தைகள் அனைவருக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்பதை மட்டுமே எதிர்பார்க்கிறான். இறைவனது குழந்தைகள் என்றால் இந்தப் பூவுலகில் வாழும் அத்தனைபேரும் குழந்தைகள் என்றுதானே பொருள். எனவே யாருக்கு ஆபத்து வந்தாலும் வேண்டப்பட்டவர், வேண்டப்படாதவர் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் நாம் உதவ வேண்டும். அதைத்தான் இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கிறான். தற்போதெல்லாம் போட்டிக்கு திருமண விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. யார் யாரை எல்லாமோ கூப்பிட்டு வேண்டாம் வேண்டாமென்று கூறுமளவுக்கு விருந்து படைக்கிறோம். வருபவர்களில் 99.9 சதவிகிதமானவர்கள் வசதி படைத்தவர்களே! ஆனால் எத்தனையோ நாடுகளில் ஒரு நேரப் பால்கூட இல்லாமல் எலும்பும் தோலுமாகி குழந்தைகள் இருக்கின்றார்களே! "தெய்வம் மனுஷ்ய ரூபேண" அதாவது 'இறைவன் மானிட உருவினனே" என்ற வாக்கியம் "திக்கற்றவர்களைத் தெய்வமாகக் கருதித் தொண்டு செய்ய வேண்டும்" என்பதற்காகவே கூறப்பட்டது. ஆனால் அதைத் தவறாகப் புரிந்துகொண்ட சில ஆன்மிக வாதிகளால் ஆன்மீகமே மூட நம்பிக்கை என்று கருதும் அளவுக்கு தள்ளப்பட்டுள்ளது.

பிற உயிர்களின் அழுகை ஒலி எப்போது உன் ஆன்மாவுக்குள் இருந்து நீ அழுவதுபோலவே கேட்கிறதோ, அப்போது நீ பக்குவம்பெற்ற ஞானி ஆகிவிட்டாய் என்று அர்த்தம்.

*விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர அழுவதற்கு அல்ல.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| வ. சண்முகநாதன் | நல்லூர் | 3000. 00 |
| சு. சோதிலிங்கம் நினைவாக | அல்லைப்பிட்டி | 5000. 00 |
| க. கணேசகுலசிங்கம் | உரும்பராய் | 3000. 00 |
| வை. செல்வராணி | உரும்பராய் | 3000. 00 |
| S.K. சண்முகசுந்தரம் | மொறட்டுவ | 500. 00 |
| வி. நடராஜா | சரசாலை | 5000. 00 |
| ஆ. ஆதிரன் | கனடா | 2000. 00 |
| இ. வரதீஸ்வரன் மூலம் | | |
| திருமதி குலராணி சிவானந்தன் | கனடா | 5000. 00 |
| திருமதி சபேசன் லதா | கனடா | 7000. 00 |
| திருமதி திவாகரன் யாழினி | கனடா | 7000. 00 |
| திருமதி முத்துராஜா மாலதி | கனடா | 3500. 00 |
| B. கனகசபை குடும்பம் | கனடா | 7000. 00 |
| திரு நற்குணம் குடும்பம் | கனடா | 15000. 00 |
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா கரவெட்டி | (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| திருமதி சுபத்திரா விஜயகுமார் | கோப்பாய் | 10000. 00 |
| முத்தையா ஞானவேல் | சுழிபுரம் | 10000. 00 |
| ஆ. சுந்தரலிங்கம் | U.K. | 10000. 00 |
| செ. இரகுநாதன் குடும்பம் | கனடா | 20000. 00 |
| செ. குபேரநாதன் குடும்பம் | தெல்லிப்பழை | 10000. 00 |
| சி. கந்தவனம், ம. மயூரன் | டென்மார்க் (மல்லாகம்) | 20000. 00 |
| திரு பிரசாத் | கனடா (இடைக்காடு) | 30000. 00 |
| கி. கஜானி | உடுப்பிட்டி தேங்காய், பச்சை அரிசி, | 2000. 00 |
| ரவிமாறன் மேகலா | ஆதிகோவிலடி (U.K) | 6000. 00 |
| வி. கிருஜன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| பொ. உதயகுமார் | கனடா (கைதடி) | 5000. 00 |
| ச. அட்ஷயன் | பிரான்ஸ் | 5000. 00 |

*விலகி நிற்பவன் வெல்வதில்லை. வெல்ல நினைப்பவன் விலகுவதில்லை.*

| | | |
|---|---|---|
| க. நகுலன் | குடத்தனை | 2000. 00 |
| மு. ராசேந்திரம் | இணுவில் | 1மூடை அரிசி |
| திரு செல்வநாதன் குடும்பம் | கரவெட்டி | 1000. 00 |
| சி. நந்தகுமார் | தம்பசிட்டி | 10000. 00 |
| சா. கனகேஸ்வரி | மல்லாகம் | 5000. 00 |
| சி. தீபிகா | கனடா | 5000. 00 |
| வி. சிவசுப்பிரமணியம் நினைவாக | புத்தூர் | சி.அரிசி 10000. 00 |
| அ. கோசலா | அல்வாய் | 1001. 00 |
| ஜெ. தங்கமலர் | பருத்தித்துறை | 2000. 00 |
| அசோதை இதயரூபன் | கொழும்பு | 25000. 00 |
| Dr சிவனேசன் | மலேசியா | 5000. 00 |
| அ. கணேசன் | மலேசியா | 5000. 00 |
| ச. தர்சிக் | கொக்குவில் | 5000. 00 |
| செ. சுபோதினி | ஏழாலை | 500. 00 |
| திரு தங்கசிவம் | யாழ்ப்பாணம் | 25k அரிசி |
| சி. குணேஸ் | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| ந. அருளாளன் | இன்பர்சிட்டி | 2000. 00 |
| வ. துரைராஜா | உரும்பராய் | 1மூடை அரிசி 5000. 00 |
| K. ஆகர்ஷன் | ஆனைப்பந்தி | 5000. 00 |
| யோ. துஸ்யந்தன் | மல்லாகம் | 5000. 00 |
| திருமதி கணநாதன் | குப்பிளான் | 2000. 00 |
| திரு கணபதிப்பிள்ளை | அல்வாய் | 1500. 00 |
| த. மதியழகன் | மூளாய் | 5000. 00 |
| S. ஞானவேல் | கொழும்பு | 5000. 00 |
| R. கணேஸ் | இணுவில் | 8000. 00 |
| R. சாரதா | உடுப்பிட்டி | 1000. 00 |
| திரு பிரசன்னா குடும்பம் | வவுனியா | 5000. 00 |
| ச. ஆனந்தி | புன்னாலைக்கட்டுவன் | 500. 00 |
| திரு பாக்கியகுமார் குடும்பம் | தெல்லிப்பழை | 1000. 00 |
| வி. கணேசலிங்கம் | பன்னாலை | 1000. 00 |
| S. சிவனேசன் | கைதடி | 5000. 00 |
| வி. துஷி, வி. கஜி | சுன்னாகம் | 2000. 00 |
| ல. கிஷாந்தன் | உடப்பு | 500. 00 |
| முகுந்தா ரஞ்சன் | உடப்பு | 300. 00 |
| திரு பரமராஜா குடும்பம் | பிரான்ஸ் | 10000. 00 |
| ந. சுந்தரேஸ்வரன் | காரைநகர் | 1000. 00 |
| S. சோமாஸ்கந்தக்குருக்கள் | சுன்னாகம் | 2000. 00 |

(தொடரும்...

# வன்னி என்னும் தீக்கடவுள்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

அண்டத்தில் வாழும் இறைவன் எமது பிண்டத்திலும் வாழ்கிறான் என்பது திருமூலர் அருளிய கருத்தாகும். வன்னி என்பது நெருப்பினைக் குறிக்கும்.

"வன்னி பெய் அலங்கல் போலாய் வயிறலைத்து இரங்கி எங்கோன்" என்னும் கந்தபுராணம் உற்பத்தி காண்டம் பகுதியில் காணும் கருத்தாவது; "இரதிதேவி தன் கணவர் மன்மதன் என்பவர். சிவபெருமானின் நெற்றிக்கண் திறந்தமை காரணமாக உண்டான தீப்பிழம்பு வீசியதால் எரியுண்டு இறந்து விடவும், இரதிதேவியானவள் நெருப்பில் இடப்பட்ட பூமாலையைப் போலக் கருகினாள்" - என கச்சியப்பர் அருளிய கருத்தானது இங்கு நோக்கத்தக்கது. "வன்னி பெய்"- என்பது "தீக்குள் இடப்பட்ட" என்னும் கருத்தால், வன்னி என்பது நெருப்பு என்னும் கருத்திலமைந்துள்ளது.

"நெருப்பு"- என்பது ஓர் பஞ்சபூத உறுப்பாகவும், தெய்வமாகவும் போற்றப்படல் வேண்டிய ஒன்றே. ஓம குண்டத்தில் வளர்க்கப்பட்ட தீயானது, பாவங்களைப் பொசுக்கி, யாவற்றையும் நீறாக்கி அதன் விமோசனமாய் நாம் நெற்றியில் அணியும் திருநீறு ஆக மாறி, நமக்கு அருள்புரியும் இச்செயலானது, இறை செயலன்றிப் பிறிதில்லை. அன்றியும் நாம் இறந்துவிட்டால் எம் உடல் தீயில் வெந்து சாம்பராகி, அச் சாம்பலே சுடலைப் பொடியாக சிவனை அலங்கரித்தும், பின் எமது கையில் அகப்பட்டும், அதைக் கடலில் கலந்தும் கரைத்துவிட்டுக் கரையேறி, நாம் கவலை மறந்து வாழும் நிலை நோக்கத்தக்கது. இதை திருமூலர் பின்வருமாறு கூறியுள்ளார்.

ஊரெல்லாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார் களே.

-திருமந்திரம் 145.

இத் திருமந்திரத்தின் பின்னிரண்டு வரிகளில் கூறப்பட்டுள்ள கருத்தினை நோக்கினால், அது நமது உடல் எரியூட்டப்படல் வேண்டும். பின்னர் அத் துயரத்தை மறக்க நீரில் மூழ்கி அந்த நினைப்பு ஒழித்தல் வேண்டும் என்பது ஓர் சைவக் கிரியை முறை ஒழுங்கில் கூறப் பட்டுள்ளது. நீரினில் நாம் மூழ்குவதுபோல, நீறாகிய சாம்பரையும் நாம் நீரினில் மூழ்கடித்தல் வேண்டும். அதுவே நினைப்பு ஒழிப்பதன் இறுதிக் கிரியா நிகழ்வாக மேற்கொள்ளப்படுகிறது.

இப் பாரிய பூமியில் மூன்றிலிரண்டு பகுதி சமுத்திரப் பகுதியாகவும், மூன்றிலொரு பகுதி மட்டும் நிலப்பரப்பாகவும் காணப்படுகிறது. அப்படியானால் சமுத்திர நீர் வெகு இலகுவில் நிலப்பகுதியை நோக்கிப் பெருக்கெடுத்து மக்களை அழித்துவிட முடியும். அதனால் பூமியில் வாழும் உயிர்கள் யாவுமே அழிந்துவிடும். எனவே அதைத் தடுப்பதற்காகவே

சமுத்திரத்தின் மத்தியில் "மாவட முகாக்கினி" என்னும் அக்கினி தேவனை நிறுத்தி வைத்து நம்மையெல்லாம் காத்தருள செய்கின்றான், இறைவன் என்பதை நாம் மறத்தல் கூடாது. அண்டத்தில் இச் செயலைப் புரிந்துவரும் சிவபெருமான் எமது பிண்டத்திலும் அக்கினிக் கடவுளை நிறுத்தி வைத்து. நமது தேகத்தைப் பாதுகாத்து வருகின்றான் என்பதை உணர்தல் அவசியம். இன்னொரு இடத்தில் "சடமுகாக்கினி"- என்னும் தீக் கடவுளை, எமது வயிற்றிலுள்ள குடல் பகுதியின் மத்தியில் நிறுத்தி வைத்து, எமது தேகத்தைப் பாதுகாத்து வரும் சிவனை நாம் ஒருபோதும் மறவோம். இதனைத் திருமூலர் பின்வருமாறு அருளியுள்ளார்.

வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின்றானே.

-திருமந்திரம் 57

"தீக் கடவுளாகிய வடவையிடத்து அடங்கி நிற்க"- என்று சமுத்திரநீர் மிகுந்து வராமல் நிற்கச் செய்துள்ளான் இறைவன். அதனால், அவன் அருளை, அந்த அருளாளனை, சிவபெருமானை நுணுகி ஆராய்ந்து உண்மையை உணர்தல் வேண்டும் என்பதே அல்லாமல், அவனை இல்லையென்று கூறுதல் வேண்டாம் என்கிறது இக் கருத்து. அப் பெருமான் அயன், திருமால் முதலிய கடவுளர்க்கும் முதல்வனாக நின்று எப்போதும் உயிர்களுக்கு நலமே புரிந்து வருகின்றான். அவன் அல்லும் பகலும் அருள் புரிந்து வருகின்றான்.

நமது உடலில் அக்கினி கண்டம், சூரிய கண்டம், சந்திர கண்டம் ஆகிய மூன்று கண்டங்கள் உண்டு. அவற்றுள் அக்கினி கண்டம், மூலாதாரம் தொடக்கம், சுவாதிட்டானம் வரையுள்ள உடல் பகுதியில் அமைந்துள்ளது. இப் பகுதியில் அமைந்துள்ள "மூலாதாரம்" தான் உடல் சக்திகளின் பிறப்பிடமாகும். இங்கிருந்து புறப்பட்டு மேலேறிச் செல்லும் அக்கினி சக்தி சுழுமுனை வழியே மேற்சென்று சகஸ்ராதளத்தையடைந்து சிவன் திருவடி சேருமென்பது யோக நெறி முறையாகும். இந்த அக்கினி கண்டத்தில் அமைந்துள்ள தேவனே சடமுகாக்கினி என்பதாகும். இதுவே நம் உடலுக்கு வெப்பத்தைக் கொடுக்கிறது.

"நீரும் நெருப்பும்"- என்பது அண்ணனும் தம்பியும் மாதிரி நிரம்பிய ஒற்றுமை உடையவர்கள். இரண்டும் ஒன்றுக்குள் ஒன்று சங்கமமாகி, எங்கும் நிறைந்து உலகமக்களை வழிநடாத்தும் பஞ்சபூதச் செயல்களாகும். "தண்ணீருக்குள்ளால் நெருப்பை எடுத்துச் செல்ல முடியுமா?- என சவால்விடும் நிலையை நம் மக்கள் மத்தியில் காண்கிறோம். இது "நீருக்குள் நெருப்பு உள்ளது" என்னும் உண்மைத் தன்மையை மறைமுகமாக உணர வைக்கும் வார்த்தைகளாக நம் மக்கள் மத்தியில் நின்று நிலவுகிறது. சமுத்திர நீர் மத்தியில் தீக் கடவுள் வீற்றிருந்து அருள்புரியும் போது "நீருக்குள் நெருப்பு"- என்பது சாத்தியமான செயலாகும். நாம் குளிர்ந்த நீரை அடுப்பிலேற்றிச் சூடாக்கும்போது அதன் சூடு நீருக்குள் மறைந்து குளிர்ந்த நீரைச் சுடுநீர் ஆக்கிவிடும் விந்தைபோல் உள்ள இச் செயலைக் காண்பீர். இச் செயலால் நீரும், நெருப்பும் சுடுநீர் என்னும் ஒரே பொருளானமை

நோக்குக. இனி, எமது உடலை நோக்குவோம். இவ்வுடலானது எப்பொழுதும் சூடாகவே காணப்படுகிறது என்று அது முற்றும் குளிர் கிறதோ அன்றைக்கே நாம் இறந்து விடுவோம். உடலில் அதிகரித்த குளிர்நிலை, அதாவது உடல் வெப்ப அளவு குறையும்போது, உட லிற்குத் தண்ணீர்த்தாகம் ஏற்படும். நாம் உடனே நீர் அருந்துவோம். அதனால், உடலில் வெப்ப சக்தி அதிகரிக்கும். அப்போது உடல் வெப்பம் வழமை நிலைக்குத் திரும்பிவிடும். தண்ணீர்த் தாகமும் தீர்ந்துவிடும். இங்கே, என்ன நடை பெற்றதெனின், நீரில் உள்ள வெப்பம் உட லில் இழக்கப்பட்ட வெப்பத்தை, நீர் பருகிய தன்மூலம் ஈடுசெய்துள்ளோம். குளிர்ந்த நீரில் வெப்பமானது எங்கிருந்து வந்தது என நீங்கள் கருதலாம். அதற்கான பதில்; நீருக்குள் நெருப் பினை இறைவன் வைத்து எமது உடலைப் பாதுகாத்து வருகின்றான்.

சமுத்திர அலைகள் கரையை நோக்கி வந்ததும் தானாகவே அடங்கி விடுகின்றது. மேலும், பூமியை நோக்கி அது வருவதில்லை. நாமும் கடற்கரைக் காட்சிகளைப் பார்த்து அனுபவித்தவாறு சந்தோசத்துடன் அங்கேயே நின்று வேடிக்கை பார்க்கலாம். கடல் அலை களால் எமக்கோர் ஆபத்தும் வரமாட்டாது, என்னும் இறை நம்பிக்கையே எமக்குத் துணை செய்யும். வடமுகாக்கினி தேவன் கடற்கரை யில் நிற்கும் எம்மைக் காப்பாற்றி அருளுவார். அவர் இல்லையேல் நமது நிலை கடற்கரை யில் என்னாகும். அந்த அக்கினி தேவனின் சிறு பகுதிதான் (ஒரு சிறு பகுதி) நாம் பருக எடுக்கும் ஒரு கோப்பை நீரிலும் உள் ளது என்பதை உணரலாம். கடல்வாழ் உயிரினங்களுக்கும் குளிரும் சூடும் (சீதோஷ்ண நிலை) ஒழுங்காக வழங்குபவர் இறைவன் ஒருவனே. அதனால் அவை உயிர் வாழ்கின் றன. இவை அண்டத்தில் நடக்கும் வினோதங் களில் சிலவாகும்.

சுடுநீர் பெருக்கெடுக்கமாட்டாது. அக்கினியால் அது கட்டுப்படுத்தப்படும். நாம் அதிகமாக சுடுநீரினை அருந்தி வருகிறோம். நோய் ஏற்பட்டவிடத்தும் நாம் சுடுநீர் பருகு வோம். ஏனெனில் அது உடலோடு சேரும் சக்தி கொண்டது. நீர் பெருமளவில் பெருக் கெடுத்து வரும்போது அதனைக் கண்டு நாம் அஞ்சுகின்றோம். கடல் அலைகள் பொங்கி எழுந்து கரையை நோக்கிப் பாய்ந்து வந்த போது நாம் பயந்தோடினோம். பாதுகாப்புத் தேடினோம். அவை கடல்கோள்களாகும். ஆனால், அதே கடல் அலைகளை எதிர்த்து பெரும் தீச்சுவாலைகள் எழுந்து தாக்குமாயின், கடல் அலைகளின் வேகம் தணிக்கப்படும். அதனால், பெரும் அழிவு தடுக்கப்பட்டிருக்கும். நீருக்குள் நெருப்பு அணையுமாப்போல், நெருப்புக்குள் நீரும் அடங்கிவிடும். தீ அனர்த் தம் ஒன்று ஏற்பட்டவிடத்து, நீரினைப் பீச்சி அடித்து தீச் சுவாலையைக் கட்டுப்படுத்துகின் றோம். அதுபோல் கடல் அலைகள் பெருகும் போது தீச் சுவாலைகளைப் பாய்ச்சி, கடல் அலைகளைக் கட்டுப்படுத்துமளவுக்கு நமது தொழில்நுட்ப வளர்ச்சி போதாமல் உள்ளது, என்றுதான் கருதல் வேண்டும். இறைவன் ஒன்றுக்குள் ஒன்றானவன் என்பதை விளக்கு வதற்கு இதைவிட வேறு நியாயங்கள் தேவைப்படாது.

---

ஆசைதான் எல்லாத் துன்பத்திற்கும் அடிப்படைக் காரணம். உங்கள் மனதில் ஏற்படும் ஒரு சலனம்தான் ஆசை. உள்ளிருந்து தோன்றும் ஓர் எண்ணம், அல்லது உணர்ச்சியினாலேதான் இச்சலனம் ஏற்பட்டு வாழ்க்கையில் துன்பம் உருவாகிறது. இந்தச் சலனத்தைச் சற்று கூர்ந்து கவனத்தில் கொண்டீர்களானால் தோன்றிய இடம் தெரியாதவாறு அது கலைந்துவிடும்.

*தோல்வியின் அடையாளம் தயக்கம்.*

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வெள்ள நிவாரண உதவி

– தொகுப்பு –

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 555 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட தொண்டைமானாறு கிராமத்தினைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இந்த விநியோகம் இடம்பெற்றது.

இந்த விபரமும், இதற்கு மேலாக இடம்பெற்ற உதவிகள் பற்றிய விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

## 05.12.2020 தொடக்கம் 15.12.2020 வரை

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தொண்டைமானாறு கிராமத்திலுள்ள 555 குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு, தேயிலை முதலான உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. குறித்த தினங்களில் காலை வேளைகளில், குடும்ப அட்டைகளில் உள்ள அங்கத்தவர்களின் தொகைக்கு ஏற்றபடி இதற்கான பதிவுகள் பெறப்பட்டு. மாலை வேளைகளில் கட்டம் கட்டமாக இந்த விநியோகம் இடம்பெற்றது.

*08.12.2020 செவ்வாய்:*

போக்கட்டி - கொடிகாமம் வெள்ளப்பெருக்கினால் பெரிதும் பாதிக்கப்பட்டு இடைத் தங்கல் முகாம்களில் இருந்த 350 பேருக்கான உணவுப் பொதிகள் நேரில் சென்று வழங்கப்பட்டது.

*12.12. 2020 சனி:*

குமிளமுனையில் - கரிய நாகபடுவான் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 45 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் நேரில் சென்று வழங்கப்பட்டது.

*16.12.2020 புதன்:*

முல்லைத்தீவு கல்வி வலயத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் புள்ளி அடிப்படையில் சித்திபெற்ற 14 பாடசாலைகளைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் - பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. 16.12.2020இல் முல்லைத்தீவு கல்வி வலயப் பணிமனையில், வலயக்கல்வி அதிகாரி திருமதி புவனராஜா அவர்கள் தலைமையில் இந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நடைபெற்றது.

சந்நிதியான் ஆச்சிரமத்துடன் இணைந்து, மேற்குறித்த வெள்ள நிவாரண உதவிகளுக்கும், ஏனைய உதவிகளுக்கும் மனமுவந்து உதவி புரிந்தவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

## வெள்ள நிவாரணம்
## உதவி செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| நா. குகன்மூலம் | | |
| திரு பாலசுப்பிரமணியம் குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| நா. குகன்மூலம் | | |
| நா. குகதாசன் | லண்டன் | 10000. 00 |
| பா. யாதவன் | அவுஸ்திரேலியா | 20000. 00 |
| பொன்னையா சுப்பிரமணியம் | வல்வெட்டி (கனடா) | 30000. 00 |
| ஞானசரஸ்வதி சின்னத்தம்பி மூலம் | | |
| சிவானந்தன் சின்னத்தம்பி | காங்கேசந்துறை | 30000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 5000. 00 |
| யோகநாதன் ரோகனா | அவுஸ்திரேலியா | 25000. 00 |
| தர்சினி திருமால் | கனடா | 25000. 00 |
| திருமதி புஷ்பலோஜினி கனகராஜா கொடிகாம வீதி புலோலி | | 50000. 00 |
| திரு கருணேஸ்வரநாதன் மூலம் | | |
| திரு பாஸ்கரன் | சுவிஸ் | 40000. 00 |
| S. பாலசுப்பிரமணியம் | சுவிஸ்லன்ட் | 5மூடை அரிசி |

## மகாபாரதப் போர் உண்மையில் யாருக்கிடையே நடைபெற்றது?

பதினெட்டு நாட்கள் நடைபெற்ற பாரதப்போரில் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 80 வீதமான ஆண்கள் இறந்துவிட்டனர் என்பதை அறிந்த ஒரு மாணவன் பாரதப்போர் நடைபெற்றதாகக் கூறப்படும் குருஷேத்திரத்திற்கு நேரில் சென்று பார்த்தான்.

"கௌரவர்களும் பாண்டவர்களும் போரிட்ட ரத்த பூமியின்மீதுதான் நாம் நிற்கிறோமா? கிருஷ்ண பரமாத்மா இங்கேதான் பார்த்தனுக்கு பார்த்தசாரதியாக தேர் ஓட்டினாரா? பல்வேறு சந்தேகங்கள் அவனுக்குள் எழுந்தன.

அந்த மண்ணையே வெறிச்சென்று பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில், "உன்னால் ஒருபோதும் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது மகனே" என்கிற குரல் கேட்டது. குரல் வந்த திக்கை ஆச்சரியத்துடன் நோக்கினான். புழுதி பறக்கும் மண்ணுக்கிடையே காவி உடை அணிந்த ஒரு உருவம் தென்பட்டது.

"குருஷேத்திர போரைப்பற்றி தெரிந்துகொள்ள நீ இங்கே வந்திருக்கிறாய் என்று தெரியும். ஆனால் அந்தப் போர் உண்மையில் யார் யாருக்கிடையே எதன் பொருட்டு நடைபெற்றது என்று தெரிந்துகொள்ளாமல் நீ அந்தப் போரை அறிந்துகொள்ள முடியாது".

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?" சற்றே குழப்பத்துடன் கேட்டான் அவன். மகாபாரதம் ஒரு இதிகாசம். ஒரு மாபெரும் காவியம். அது உண்மை என்பதைவிட அது ஒரு தத்துவம். அதைத்தான் அனைவரும் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும்" என்று சொல்லி அந்த காவியுடை பெரியவர் அவனைப் பார்த்து மர்மப் புன்னகை ஒன்றை உதிர்த்தார்.

*இனிய முகம் உறவை வளர்க்கும்.*

"அது என்ன தத்துவம் ஐயா? எனக்குக் கொஞ்சம் விளக்குங்களேன்" "நிச்சயம்! அதற்காகத்தானே வந்திருக்கிறேன்".

"பஞ்சபாண்டவர்கள் வேறு யாருமல்ல. கண், காது, மூக்கு, வாய், மெய் ஆகிய நம் ஐம்புலன்கள்தான். கௌரவர்கள் யார் தெரியுமா?" "இந்த ஐம்புலன்களை தினந்தோறும் தாக்கி தங்களுக்கு இரையாக்க முயற்சிக்கும் தீமைகள்தான் கௌரவர்கள்".

"எண்ணிக்கையில் பெரிதான இவர்களை எதிர்த்து உன்னால் (ஐம்புலன்களால்) போரிட முடியுமா?" "முடியும்! எப்போது தெரியுமா?" அவன் மலங்க மலங்க விழித்தான். "கிருஷ்ண பரமாத்மா உன் தேரை செலுத்துவதன்மூலம்" அவன் சற்று பெருமூச்சு விட்டான். பெரியவர் தொடர்ந்தார். "கிருஷ்ணர்தான் உன் மனச்சாட்சி. உன் ஆன்மா. உன் வழிகாட்டி அவர் பொறுப்பில் உன் வாழ்க்கையை நீ ஒப்படைத்தால் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை.

மாணவன் பெரியவர் சொல்வதைக் கேட்டு மெய்மறந்து போனான். ஆனால் வேறொரு சந்தேகமும் அவனுக்குத் தோன்றியது.

"கௌரவர்கள் தீயவர்கள் என்றால் அப்போது பெரியவர்களான துரோணாச்சாரியாரும் பீஷ்மரும் அவர்கள் பக்கம் நின்று அவர்களுக்காக போரிடுகிறார்கள்?"

"வேறொன்றுமில்லை நீ வளர வளர உனக்கு மூத்தவர்கள் குறித்த உன் கண்ணோட்டம் மாறுகிறது. நீ வளரும் காலகட்டங்களில் யாரெல்லாம் குற்றமற்றவர்கள், அப்பழுக்கற்றவர்கள் என்று எண்ணினாயோ அவர்கள் உண்மையில் அப்படி கிடையாது. அவர்களிடமும் தவறுகள் உண்டு என்று உணர்கிறாய். எனவே அவர்கள் உனது நன்மைக்காக இருக்கிறார்களா, அவர்கள் உனக்குத் தேவையா இல்லையா என்று நீதான் தீர்மானிக்க வேண்டும். மேலும் அவர்கள் உன் நன்மைக்காக போராட வேண்டும் என்று நீ ஒரு கட்டத்தில் விரும்புவாய். இதுதான் வாழ்க்கையின் கடினமான பகுதி. கீதையின் பாடமும் இதுதான்"

அவன் உடனே மண்டியிட்டு தரையில் அமர்ந்தான். களைப்பினால் அல்ல. கீதை உணர்த்தும் பாடத்தை ஓரளவு புரிந்ததும் அதன்மீது ஏற்பட்ட பிரமிப்பினால்.

"அப்போது கர்ணன்?" அவன் கேள்வி தொடர்ந்தது. "விஷயத்துக்கு வந்துவிட்டாய் மகனே. உன் ஐம்புலன்களின் சகோதரன் அவன். அவன் பெயர்தான் ஆசை, மோகம். அவன் உன் இந்திரியங்களின் ஒரு பகுதி. உன்னுடன் பிறந்தவன்.

ஆனால், தீமைகளின் பக்கம்தான் எப்போதும் நிற்பான். தான் செய்வது தவறு என்று அவனுக்குத் தெரியும். ஆனாலும் ஏதேனும் சாக்கு போக்கு சொல்வான். உன் விருப்பம்போல. ஆசைபோல".

"நான் சொல்வது உண்மைதானே? தீயவற்றுக்குத் துணைபோகத்தானே மனம் ஆசைப்படுகிறது? அவன் "ஆம்..." என்பதுபோல தலையசைத்தான்.

இப்போது தரையைப் பார்த்தான். அவனுக்கு ஓராயிரம் எண்ணங்கள், சிந்தனைகள் எல்லாவற்றையும் ஒன்றாக்கி தலைநிமிர்ந்து மேலே பார்த்தான். அந்தக் காவிப் பெரியவரைக் காணவில்லை. அவர் புழுதிகள் எழுப்பிய திரையில் மறைந்துவிட்டிருந்தார்.

*(நன்றி: இணையம்)*

*மலையைப் பார்த்து மலைத்துவிடாதே! மலைமீது ஏறினால் அதுவும் உன் காலடியில்.*

# திருக்கோணேஸ்வரம்

– திரு நா. **வசந்தன்** அவர்கள் –

இலங்கையைச் "சிவபூமி" என்று சொன்னார் திருமூலர். தென்னிந்தியாவிலே பல சிவத்தலங்கள் இருப்பினும் சிவபூமி என்று இலங்கையை திருமூலர் குறிப்பிட்டிருப்பது இலங்கை வாழ் இந்துக்களுக்குத் தனிச் சிறப் பாகும். ஈஸ்வரம், ஈச்சரம் என்று குறிப்பிடப்படும் ஆலயங்கள் சிவன் ஆலயங்களாகும். அந்த வகையில் இலங்கையில் பல ஈச்சரங்கள் இருப் பினும் திருமுறைப்பாடலில் இடம்பிடித்த, பாடல்பெற்ற திருத்தலங்களாக விளங்குபவை திருக்கோணேச்சரம், திருக்கேதீஸ்வரம் ஆகும். இலங்கையின் கிழக்கே உலகப் பிரசித்தி பெற்ற இயற்கைத் துறைமுகமாகிய திருகோண மலைத் துறைமுகம் அமைவதற்குச் சாதக மாக உள்ள மலைகள் ஒன்றின் உச்சியில் திருக்கோணேச்சரம் அமைந்துள்ளது.

ஒரு பக்கம் கடலும்,. மற்றைய மூன்று பக்கங்களும் முக்கோண வடிவில் மலை களைக் கொண்டு அமைந்திருப்பதனால் கோண மலை என்றும், திருகோணமலையில் கோணேஸ் வரப் பெருமான் அமர்ந்திருப்பதால் திருக் கோணேஸ்வரம் என்றும் அழைக்கப்படுகின் றது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்துக்களின் திருத்தலமாகிய திருகோணேஸ்வரம் புனித சேத்திரமாக இருந்து வந்ததைப் புராண, இதிகாசங்கள், வரலாறு கள் கூறுகின்றன. எனவே இந்தத் தலத்தில் இயல்பான தெய்வீக விசேடத்தினாலே இந் நகரம் திருகோணமலை என்ற பெயரால் வழங்கி வருகின்றது.

தெட்சிணகைலாயம் என்று திருக் கோணேஸ்வரம் போற்றப்படுகின்றது. குளக் கோட்டு மன்னன் இவ் ஆலயத்திற்குத் திருப் பணிகள் செய்து வந்திருந்தான். அம் மன்னனால் திருப்பணிகள் செய்யப்பட்ட புராதன ஆலயத்தை கி.பி. 1624ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் அழித்துத் தரைமட்டமாக்கி சொத்துக்களையும் கொள்ளையடித்தனர். சுமார் 350 வருடங்களாக திருமுறையில் - மக்கள் இதயங்களில் அமர்ந்திருந்த கோணேஸ்வரப் பெருமானுக்கு சைவப் பெருமக்கள் மீண்டும் புதியதோர் ஆலயத்தை அமைத்தனர்.

மகாமேரு மலையின் சிகரங்களில் ஒன்றாக திருகோணமலை குறிப்பிடப்படுகின் றது என்பதை வரலாற்றுப் புராணங்கள் கூறு கின்றன. இதன் விரிவான வரலாற்றை தெட் சண கைலாய புராணத்தில் அறியலாம். திருக்கோணேஸ்வரம் மிகவும் பழமைவாய்ந்த திருத்தலம் என்பதனை இதிகாசம் புலப்படுத் தும். இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது இராமாயணம். அக்காலத்தில் வாழ்ந்த இலங்கை வேந்தன் இராவணன் சிறந்த சிவபக்தனாகவும், அவன் திருக் கோணேஸ்வரத்தில் தவம் செய்து வழிபட்டு மலையெடுத்த செய்தியினையும் கோணேஸ் வரப் பெருமானிடம் வாளும், வரமும் பெற் றதை புராணங்களும், திருமுறைகளும் கூறு கின்றன.

கோணமலையில் இராவணன் வாளால் வெட்டி மலையெடுத்த இடம் இன்றும் "இராவணன் வெட்டு" என்று கூறப்படுவதையும் அறிகின்றோம். "எடுத்தவன் தருக்கை இழித் தவர் விரலால்" என்று திருகோணமலைப் பதிகம் கூறுவதாலும் "இலங்கை வேந்தன்

*கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.*

எடுத்த அடுக்கல் மேல்" என்றும் "இராவணன் மேலது நீறு" என்றும் திருமுறைகள் பேசு வதாலும் இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட பெருமை உடையது திருக் கோணேஸ்வரம் என்பது புலனாகின்றது.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திரு ஞானசம்பந்தர் இத் தலத்தை "குரை கட லோதம் நித்திலங் கொழிக்கும் கோண மாமலை அமர்ந்தாரே" என்று பாடியுள்ளார். அதாவது முழங்கு கடலின் மேற்குக் கரை யில் நின்று மலையைப் பார்த்தால் ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருப்பதுபோல் தோற்றமளிக்கும். கோட்டை நுழைவாயில் பாதமாகவும், திருக்கோயில் அமைந்திருக்கும் குன்றின் சிகரம் தலையாகவும் காட்சியளிக் கும். ஆலய அமைப்புக்கென்று இருக்கும் சாஸ்திர முறை கோணேஸ்வர மலையில் இயல்பாகவே அமைந்திருப்பது வியக்கத் தக்கது.

சிவத்தலங்கள் சில தானே தோன்று கின்றன. வேறு சில அற்புதச் சம்பவங்களால் தோற்றுவிக்கப்படுகின்றன. திருக்கோணேஸ் வரம் இயல்பாகவே தெய்வீகமாகத் தோன்றிய தலம். இதனை மெஞ்ஞானிகள் அறிவர். போர்த்துக்கீசரின் அடாத செயலால் 350 வருடங்களாக ஆலயம் இல்லாது இருந்த இடத்தில் மீண்டும் ஆலயம் அமைக்க சைவ மக்கள் 1950ஆம் ஆண்டளவில் முற்பட்ட போது புதிதாக நிர்மாணிக்கும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்கு ஓர் இலிங்கத்தைப் பெற காசிக்குச் சென்றபோது கங்காதேவி யால் இயற்கையாக உருவாக்கப்பட்ட பாண லிங்கம் கிடைத்தது ஓர் அற்புதமாகும். மேலும் கோணேச்சரப் பெருமானுக்கு ஆலயம் அமைக்க சைவ மக்கள் ஆலோசனைக் கூட் டம் நடத்தியபோது, திருகோணமலை நகர சபையால் வீடமைப்புத் திட்டம் ஒன்றுக்காக ஏகாம்பரம் வீதியில் கிணறு வெட்டினார்கள். அப்போது மூன்றடி ஆழத்திலே நிலத்தடியில் இருந்து மாதுமையம்பாள் சமேத கோணேச் சரப் பெருமானும், சந்திரசேகர, பார்வதி திரி பங்க வடிவ திருவுருவங்களும் வெளிப்பட்டன. இதுவும் ஓர் அற்புதமாகும்.

எனவே, தெய்வீகம் இயல்பாகவே ஊற்றெடுத்து பிரவாகித்துக் கொண்டிருக்கும் இந்த ஷேத்திரத்தில் ரிஷிகளும் யோகிகளும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தமது தவபலத்தை இந்தத் தலத்தில் நிறைத்து வைத்துள்ளார்கள். எனவே இது தானே தோன் றிய சிவத்தலமாகும். இவ் ஆலயத்திலே 1963 ஆம் ஆண்டளவில் முதலாவது கும்பாபிஷேக திருப்பணிகள் நிறைவேறின. அதன் பின்னர் 18 வருடங்களின் பின்னர் 1981ஆம் ஆண்டில் இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆகம சாத்திர முறைப்படி அமைக் கப்பட்ட அழகிய தூபிகளைக் கொண்ட ஆல யத்தின் கருவறையில் காசியில் இருந்து கொண்டுவரப்பட்ட பாண இலிங்கமும், அழ கிய கோபுரத்தை உடைய அம்பாள் கோயில் கருவறையில் மாதுமையம்பாள் சிலா விக்கிர கமும் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கின்றன. ஸ்நபன மண்டபத்தில் சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமானும், வசந்த மண்டபத்தில் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியரும், சந்திரசேகரர், சோமாஸ்கந்த மூர்த்திகளும் எழுந்தருளி மூர்த்திகளாக ஸ்தாபிக்கப் பட்டுள்ளனர்.

பிள்ளையார், சுப்பிரமணியர், நவக் கிரகங்கள், சூரியன், சந்திரன், நாகதம்பிரான், வைரவர் சண்டேஸ்வரருக்கு தனித் தனிக் கோயில்களும் அமைக்கப்பட்டுள்ளன. இராஜ கோபுரம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. யாக சாலை, பாகசாலை யாவும் முறைப்படி அமைக் கப்பட்ட அற்புத கோயிலை கோணேசர் மலை

*புத்தகங்களைவிட அனுபவமே அதிக சாதனை புரிகிறது.*

தாங்கி தவம் செய்துகொண்டிருக்கின்றது. சமுத்திராதேவியானவள் கோணமலையைச் சுற்றிவளைத்து நின்று தனது அலைகளாகிய கரங்களால் ஆனந்தமாகச் சீராட்டிக் கொண டிருக்கின்றாள். இப்படியான இயற்கை அழகு தவழும் ஒரு அற்புதமான தலத்தை வேறு எங்கேயும் பார்க்க முடியாது.

இங்கு கிரியை முறைகள் ஆகம முறைப்படி சிறப்பாக நடைபெறுகின்றது. தின மும் ஆறுகாலப் பூசை நடைபெறுகின்றது. பங்குனி உத்தரத்தன்று கொடியேறி 18 நாட் கள் மகோற்சவம் நடைபெறுகின்றது. பாபநாச தீர்த்தம் ஆலயத்தில் இருந்து சற்றுத் தொலை வில் இருக்கின்றது. மலையில் இருந்து கீழே இறங்கிச் சென்று தீர்த்தமாட வேண்டும். தீர்த் தோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. இந்துக்களுக்குரிய சகல வழிபாட்டுப் பூசை களும் இங்கு நடைபெற்று வருகின்றன.

சிவராத்திரி சிறப்பாக நடைபெறுகின் றது. சிவராத்திரிக்கு முந்திய 15 நாட்களும் சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகங்கள் நடைபெற்று, சிவராத்திரி விழா மிகச் சிறப் பாக அனுஷ்டிக்கப்படுகின்றது. மாதுமையம் பாளுக்குத் தனி மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. ஆடிப்பூரத்தைத் தீர்த்தமாகக் கொண்டு அதற்கு முந்திய 10 நாட்களும் உற்சவம் நடைபெற்று வருகின்றது. நவராத் திரியில் ஸ்ரீ சக்கர பூஜையும், திருவெம் பாவைக் காலத்தில் ஆதிரையானுக்குப் பெரு விழாவும் நடைபெறுகின்றது.

இவ்வாலயம் பற்றி தட்சிண கைலாய புராணம், திருகோணாசல புராணம், கோணே ஸர் கல்வெட்டு, திருக்கோணேஸ்வர வைப வம், திருமுறைகள், திருப்புகழ் என்பன புகழ்ந்து கூறியுள்ளன. "தெக்காரும் மகோணத் தானே" என்று நாவுக்கரசரும், "மகோணத் தானே" என்று சுந்தரரும், "ஆழி புடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் மன்னு திரு கோணமலை மகிழ்ந்த செங்கண் மழ விடை யார்" என்று சேக்கிழாரும், "திருகோணமலை தலை தாரு கோபுரம்" என அருணகிரிநாதரும் கோணேஸ்வரத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர். சாதி, மத பேதமற்று யாவரும் வந்து வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறும் புனித கோணேஸ் வரம். "நினைத்த காரியம் அனுகூலமே தரும்" என்று அருணகிரிநாதர் கூறியதுபோல பெரு மானாகிய மாதுமையம்மாள் சமேத கோணே ஸர் பெருமானால் சிறப்புற்று விளங்குகின்றது.

---

சிலர் தம்மிடமுள்ள வசதிகளையும் செல்வத்தையும் மறைத்து வைத்துக் கொண்டு எப்போதும் அழுமூஞ்சியாகவே இருப்பார்கள். தம்மிடம் உள்ளவற்றைப் பிறர் கண்டுகொண்டால் திருஷ்டி ஏற்பட்டுவிடும் என்பதற்காக கருமியாக வாழ்க்கையைக் கழிப்பார்கள். இவர்கள் ஒரு ரகம். வேறு சிலர் தங்களிடம் பத்து ரூபாய் இருந்தாலும் அதைப் பிறர் பார்க்கும்படி வைத்துப் பகட்டாக வாழ்வார்கள். இவர்கள் இன்னொரு ரகம். முதலாமவர் தன்னை ஏய்ப்பவர். இரண்டாமவர் பிறரை ஏய்ப்பவர். இருவருமே இறைவனை ஏய்ப்பவர்கள். என்றைக்கும் உண்மை உண்மைதான். பொய் பொய்தான். மெய்யைப் பொய்யாகவோ, பொய்யை மெய்யாகவோ நிரந்தரமாக மாற்றிவிட முடியாது. எவ்வளவுதான் நீங்கள் முயன்றாலும் "தன்னிலை" என்பது என்றோ வெளிப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஆகவே எப்போதும் மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் நடப்பவர்கள் எந்தக் குறைபாடும் இல்லாமல் நலமாக வாழ்வார்கள்.

*கோபத்திற்குக் கொடுக்கும் மரியாதையை யாரும் புன்னகைக்குக் கொடுப்பதில்லை.*

# நாயினாகிய கலம்

– முருகவே பரமநாதன் அவர்கள் –

விலங்குகள் ஐயறிவுடையன. மனிதம் ஆறறிவு உடையது. இதைப் பல்லாற்றானும் வளர்த்தாற் பத்தறிவை எய்தலாமெனத் திருமூலர் சுட்டிக்காட்டும் (பாடல் எண் 741) மனிதன் ஒன்றையிழப்பானாயின் விலங்கோடு வைத்துக் கணிக்கப்படுகிறான். (குறட்பா 410) சில படிப்பு வாசனையற்றவரை மரத்தோடு ஒப்பிடுவர். நாய் நன்றியுள்ள பிராணி. பசு சாதுவான பிராணியென்று சான்றிதழ் உண்டு. இரண்டும் வீட்டுப் பிராணிகள். மாடு எனின் செல்வம் என்றும் பொருள். பாரதி பாப்பாப் பாட்டிலே நாயையும் பசுவையும் குழந்தைகட்கு அறிமுகம் செய்துள்ளார்.

"பாலைப் பொழிந்து தரும், பாப்பா - அந்தப்
பசுமிகு நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான் அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா!"
-பாப்பாப்பாட்டு 4.

இந்தப் பாரதிக்குப் பல்லாண்டுகள் முன்னரே நாய்பற்றிப் பலர் எடுத்தாண்டுள்ளனர். தேவார திருவாசக காலத்திலிருந்து திருப்புகழ் வரை நாய் இடம்பெற்றுள்ளது. இன்று மேலை நாடுகளில் பல்லின நாய்கள் இனக்கலப்பால் உருவாகியுள்ளன. ஒரு செல்லப்பிராணி மட்டுமன்றி, கண்பார்வை இல்லார்க்கு உறுதுணையாய் இருந்து வழிகாட்டும் பெருமைக்குரியது இப்பிராணி. பொலிஸ் நாய்கள் நிறையத் துப்புத்துலக்குகின்றன. நாய் போன்றவர்களோடு சிநேகம் செய் என்னும் நாலடியார் அது எசமானிடம் அடியை வேண்டிக்கொண்டும் நன்றி பாராட்டும். நாயிலே குறைபாடுகளும் உண்டு. மெச்சும் பக்குவங்களுமுண்டு.

நாய் எசமானிடம் விசுவாசம் உள்ளது.
எந்தக் கோலத்தில் வீட்டுக்காரர் இருப்பினும் இனங்காணும்
வீட்டைக் காவல் செய்யும், வீட்டுக்குட் புகாது.
நன்றியுள்ள மிருகமது.
கள்ளர் வந்தாற் குரைத்துக் காட்டும்.
பாம்பு போன்ற பிராணி வரின் இனங்காட்டும்.
பணிவுடையது, சுவாசப்பக்கமறிந்து படுக்கும்.
மோப்ப சக்தியுள்ளது, வேட்டையாடும்.

இந்த நாயை மணிமொழியார் சுமார் முப்பத்துநான்கு இடங்களில் எடுத்தாண்டுள்ளார். தன்னை ஒப்பீடு செய்து தன்நைச்சிய பாவத்தை வெளிப்படுத்துவார். இவர்போல எவரும் எடுத்தாளவில்லை எனலாம். பட்டினத்துச்சுவாமிகளும் பலபட நாயை வர்ணிக்கிறார். அங்காடி நாய், ஊர் நாய் என்றெல்லாம் பேசுகிறார். பலவீட்டு நாய், கறிக்கடை நாய்

எம் நாவிற்றவழும் வழக்கு. அங்காடி நாய்போல் அலைந்தேன் சிலகாலம். நாய்க்கொரு சூழலும் அதற்கோர் மருத்துவம் நாட்டிலுண்டோ, நாய்க்குண்டு தெண்டு (எச்சில் இலை) என்றெல்லாம் பாடினார். சொறி நாய், குட்டை நாய்க்கு இப்போ மருந்துண்டு. நாய் பற்றிப் பார்த்த பல்லோருள்ளும் ஆளுடையடிகள் முன்னிற்கிறார். நாய் வளர்ப்போனிடம் சிலவேளை நன்றியை மறப்பது போன்று நாமும் எமையாளுடை இறைவனை மறந்து வாழுகின்றோம் அல்லவா! பலவீட்டு நாய்போல. ஊர் நாய் போல, அங்காடி நாய்போல மாறிவிடுகிறோம். உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்கிறோம். உண்ணும்போதே தீமை நினைக்கிறோம். சிவனே எங்கள் முழுமுதற் கடவுள் என்பதை மறந்து பிற தெய்வ வணக்கங்களையும், பரசமயக் கோட்பாடுகளையும் ஏற்று வாழ்கிறோம்.

சைவம் நமது சமயம்; தெய்வம் சிவன் என்பதை மறந்து ஊர்நாய் போல், அங்காடி நாய்போல் அலைகிறோம். மனித குலத்தில் நாம் பிறந்து மனிதம் பேண மறக்கின்றோம். நம் மூதாதையர் நீதிவழி தம்மை இட்டுச் சென்றனர். மணிமொழியார் சிவனையே முழுமுதற் பொருளாகப் பாடி எம்மை அவ்வழி நடக்க ஆற்றுப்படுத்துகையில் நாயை எடுத்தாண்டு தானும் கடைத்தேறி, எம்மையும் கடைத்தேற வைக்கின்றார். நாயையும் தாயையும் ஒப்பிட்டு நல்வழிகாட்டுகிறார். சுவாமிகளின் அருளிச் செயல்தனைப் பற்றிச் சிந்திப்போம்.

ஓய்வு இல்லாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த்தாள் தந்து
நாயில் ஆகிய குலத்தினும் கடைப்படும்
என்னை நன்னெறி காட்டித்
தாயில் ஆகிய இன்னருள் புரிந்து
என்தலைவனை நனி காணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை
உருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே.

-திருச்சதகம்39.

*கருத்து:*

அழிவில்லாதவனவாய், உவமிக்கப்படும் பொருள் யாவற்றையும் கடந்தனவாய், உள்ள ஒளிமிக்க திருவடித் தாமரைகளைக் காட்டியருளி, நாயென்னும் படைப்பு வகையிலும் கீழ்ப்பட்ட எனக்கு நல்ல முத்திநெறியைக் காண்பித்துத், தாயிடமுண்டாகிய, கருணையை ஒத்த இனிய பேரருள் புரிந்த எனது நாதனை (தலைவனை) நன்கு காணப்பெற்றேன். (அவன் பிரிவினை உணராமல் நெருப்பில் வீழ்ந்திறக்க மாட்டேன், கடினமான மலையில் நின்று உருண்டு உயிர்விடேன். ஆழமான கடலில் விழுந்து பாய்வேனோ) அதுவுஞ் செய்யேன் என்றவாறு.

ஓய்வு- ஒழிவு, உவமன்- உவமை, குலம்- படைப்புச்சிறப்பால் வந்த இனம், படைப்புச் சிறப்பு- நாய். நாய் விசுவாசம் உள்ளது. அது இல்லையேயென்று குறிப்பார் நாயினாகிய குலம் என்றார். எனவே நாயினும் கடைப்பட்ட என்றார். திருப்பெருந்துறையில் ஆட்கொண்டபோது கண்ட எம்பிரான் விட்டுப்போனதை எண்ணி எண்ணி நைந்து பாடிய பாடல் இது. நனி- என்ற உரிச்சொல்லை வைத்து நனிதானேன் என்றார். உ+ம்: நனி நன்று (நனிமிகவும்)

*சரியான வாய்ப்பு வந்தால் தெளிவாக சிந்தித்துச் செயலாற்றுங்கள்.*

இப்பாடலிலே இறைவன் பெருமை பேசும் சுவாமிகள் தன்னை மிகவும் தாழ்த்த நாயை எடுத்து ஆண்டுள்ளார். மனித குலம். தாய்க்குலம் என்று பேசுகிறோமே. சாதிகுலப் பிறப்பென்னும் சுழிப்பட்டு என மணிமொழியாகும். கோத்திரமும் குலமும் பேசும் சழக்கர்களென அப்பரும் பேசுவதை கவனிப்போம். தாய்போற் கருணையான கண்கண்ட தெய்வம் எங்குமே இல்லை என்பார். தாயில் ஆகிய என வியந்து பாடுகின்றார் நாயின் தாழ்வும் தாயின் உயர்வும் ஒப்புநோக்கற்பாலது.

தாய்+இல்- தாயில் நான்காம் வேற்றுமை உருபு இல். தாயில் சிறந்தொரு கோயிலும் இல்லையென்பது ஔவை வாக்கு. பால்நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப் பரிந்து எனப் பிடித்தபத்திலே (9) சுவாமிகள் பாடியமையையும் நாம் ஒப்புநோக்கிச் சுவாமிகளின் பாவனை களான நாய், தாய் பற்றிச் சிந்திப்போம். சுவாமிகள் நாய்சிவிகை ஏற்றுவித்து, நாய்க்குத் தவிசிட்டு, நாய் மேற்தவிசிட்டு என்ற பாவனைகள் எவ்வளவு தன்னிழப்பு நிறைந்தவை. திருவாசகம் சொல்லும் இப் பாவனைகள் ஆழமானவை. எம்மை ஆழங்காற்பட வைத்து அழ வைப்பன. நாம் மனித்தப் பிறவி எடுத்தும் ஆத்ம விடுதலைக்கு வித்திடவில்லை. பெற்றதாயினும் ஆயின செய்யும் மந்திரம் ஓம் நமோ நாராயணா என திருமங்கையாழ்வார் அருளினார்.

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந் தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணா வென்னும் நாமம்.

-பெரிய திருமொழி 1.9.

வளர்ப்புத் தாய், செவிலித்தாய், சிற்றன்னை எனப் பல தாயார் இருப்பினும் பெற்ற தாயே இரத்தத் தொடர்பு உள்ளவள். பெற்ற தம் பிள்ளைக்குணங்களை பெற்றவளே அன்றி மற்றவரறியார் எனவே பெற்ற தாய் என்றார் ஆழ்வார். இந்த அன்னை தயை மேலானது. இவரே நாயின் நலம் பாராட்டிப் பாசுரஞ் செய்துள்ளார்.

தாயே தந்தை யென்னும்
தாரமேகிளை மக்க ளென்றும்
நோயே பட்டொழிந்தேன்
நுனைக் காண்ப தோராசையினால்
வேயேய் பூம்பொழில் சூழ்
விரையார்திரு வேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன்
நல்கியா ளென்னைக் கொண்டருளே.

-பெரிய திருமொழி 1:9.1.

வாதவூரடிகள் இருமடியாகச் சொல்லித் தன் கீழ்மையைப் பாசுரமாகப் பைந்தமிழிற் பாடியிருக்கிறார்.

நாயிற் கடையாம் நாயேனை நயந்துநீயே ஆட் கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட்டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான் என்னதோ இங்கு அதிகாரம்
காயத்திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.
-குழைத்தபத்து 8.

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே.
-சிவபுராணம் 60-61.

தெய்வமே சமையம். சமையமே தெய்வம்
எல்லாம் சிவமயமே.

ஒரு ஆலயத்தின் பக்கத்திலே பழக்கடை வைத்து வாழ்ந்துகொண்டிருந்தார் ஒரு பக்தர். தினமும் அங்கே வரும் ஒரு ஏழைச் சிறுவன் அவருக்குத் தெரியாமல் இரண்டு பழங்களைத் திருடிச் செல்வது வழக்கம். திருடிய பழங்களில் ஒன்றை கோவில் வாசலில் இருக்கும் ஒரு வறியவருக்குக் கொடுத்து மற்றதைத் தானும் உண்டு தனது பசியைத் தீர்த்துக்கொள்வான். ஒரு நாள் அவன் பழங்களைத் திருடும்போது கடைக்காரரிடம் வகையாக மாட்டிக்கொண்டான். பையனிடம் வினவியபோது தான் இரண்டு பழங்கள்தான் திருடுவதாகவும் அதில் ஒன்றை கோவிலிலிருக்கும் வறிய வருக்கும் கொடுப்பதாகவும் கூறினான். பழங்களைத் திருடியவனோ ஒரு சிறுவன் என்று நினைத்து அந்தச் சிறுவனைத் தண்டிப்பதில் கடைக்காரருக்கு அவ்வளவு விருப்பமில்லை. எனினும் அவனைத் தண்டிக்காமல் விடுவது அவனது வாழ்க்கைக்கு நல்லதல்ல என்று முடிவு செய்தார். அதன்படி "கோவிலை நூறுமுறை சுற்றி வருவதுதான் உனக்குத் தண்டனை" என்று கூறினார். பையனும் சுற்றிவர ஆரம்பித்தான். அவன் சுற்றி வருவதைக் கடைக்காரர் கண்காணித்துக்கொண்டு இருந்தபோது ஒரு சுற்றில் அந்தச் சிறுவன் தெரிந்தால் மறுசுற்றில் சிறுவனுக்குப் பதிலாக பகவான் கிருஸ்ணர் தெரிவார். கடைக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை.

அன்றிரவு கடைக்காரர் கனவில் தோன்றிய பகவான் "அந்தச் சிறுவன் தினமும் உனது கடையில் திருடிய இரண்டு பழங்களில் ஒன்றை எனக்கல்லவா தந்து விடுகிறான். அதுதான் நீ கொடுத்த தண்டனையில் பாதிப்பங்கு எனக்கும் உண்டென்று ஐம்பது சுற்றுக்கள் நானும் சுற்றினேன்" என்றார்.

எப்பொழுதும் எந்த நேரத்திலும் ஏழைகளை அரவணைத்து வாழ்பவரையே இறைவனும் அரவணைக்க விரும்புவான்.

திருடுவதற்கு கடவுளும் உடந்தையா? என்று கருதாமல், "கள்வனும் நானே, அவனைப் பிடிக்கும் பொலீசும் நானே, தீர்ப்பு வழங்கும் நீதிபதியும் நானே" என்று இறைவன் கூறுவதாக இராமகிருஸ்ணர் கூறியதை நினைவில் கொள்க.

*பகிர்ந்த துன்பம் பாதியாகிறது. பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகிறது.*

# அன்பு என்னும் இன்ப உணர்வு

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

அன்பு என்று சொல்லும்போதே அது மனதிற்கு இதமாக இருக்கும். யாரோ எம்மை மயில் இறகுகொண்டு வருடுவது போல் இருக்கும். தென்றல் எம்மைத் தழுவுவது போலிருக்கும்.

இந்த அன்பு சந்தர்ப்பங்களுக்கேற்ப பல நாமங்களைப் பெறும். தெய்வத்திடம் நாம் காட்டும் அன்பு பக்தியாகும். எமது குழந்தைகளிடம் நாம் காட்டும் அன்பு பாசம் ஆகும். நண்பனிடம் காட்டும் அன்பு தோழமை ஆகும். ஏழைகளிடம் நாம் காட்டும் அன்பு இரக்கமாகும். ஈசன் உயிர்களிடத்தில் வைக்கும் அன்பு அருள் எனப்படும். இந்த வகையில் அன்பு ஒரு நீர் ஊற்று. அதனை நாம் எல்லோருக்கும் பகிர்ந்தளித்தாக வேண்டும். அள்ளி அள்ளி வழங்க வேண்டும். உள்ளத்தை வளமாக ஆக்குவது அன்பு.

வள்ளுவர் பெருமான் அன்பைப்பற்றி நிரம்பச் சொல்லி வைத்துள்ளார்.

1. அன்பின் வழியது உயிர் நிலை என்றார்.
2. அன்பில்லாதவன், அவன் மனிதனே அல்ல. அவன் என்பு தோல் போர்த்த உடம்பு என்கின்றார்.
3. இறைவனது அருள் ஈன்ற குழந்தைதான் அன்பு என்பார்.

உயிருக்கும் உடலுக்கும் எத்தகைய ஈடுபாடு நெருக்கம் உண்டோ அத்தகைய நெருக்கம் வாழ்க்கைக்கும் அன்புக்கும் உண்டு. அன்பு காணா உயிர், நீர் காணாப் பயிர் போல் வாடிவிடும்.

அன்புக்கும் உயிருக்கும், உடம்புக்கும், இறைவனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அது எப்படி என்று பார்ப்போம்.

அன்பில்லாத உயிர் வாடி வதங்கிவிடும். அதற்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பென்பது கிடையாது. உயிர் இல்லாத உடம்பு பிணமாகிவிடும். இறைவனே அன்பின் வடிவம்தான். அவன் வேண்டுவது மெய்யன்பு.

சுயநலத்திற்கும் அன்பிற்கும் வெகுதூரம். பெரிய இடைவெளி உண்டு. இதனை வள்ளுவர் மிக அழகாகக் கூறியுள்ளார்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

அகத்திலே அன்பில்லாதவன் சகலதும் தனக்குத்தான் வேண்டும் எனக் கருதுவான். பட்டம், பதவி, புகழ், போகம் எல்லாமே தனக்கு என்பான் அவன்.

அன்பும் கருணையும், அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள். அன்பு உள்ள இடத்திலேதான் கருணை இருக்கும். கருணை உள்ள இடத்திலேதான் இரக்கம் இருக்கும். உதாரணத்துக்கு சிபிச்சக்கரவர்த்தியை, பாரி வள்ளலை எடுத்துக்கொள்ளுங்கள். சிபிச்சக்கர வர்த்தி ஒருமுறை ஒரு வேடனைச் சந்திக்கின்றார். அவன் ஒரு அழகிய புறாவை கூண்டில்

*ஆர்வமில்லாதவன் பெரிய காரியங்களை சாதிக்கமுடியாது.*

அடைத்துச் செல்வதைக் காண்கின்றார். அந்தப் புறாமேல் இரக்கம் கொண்ட சிபி அந்தப் புறாவை பறக்க விடும்படி கேட்கின்றார். அவன் என்ன தொகை பணம் கேட்டாலும் தான் தருவதாகக் கூறுகின்றார். ஆனால் வேடனோ பணம் காசு வேண்டாம். அப் புறாவின் எடைக்கு எடை அரசனது உடலிலிருந்து தசை தந்தால் தான் புறாவுக்கு விடுதலை அளிக்க முடியும் என்கிறான். சிபிச் சக்கரவர்த்தியும் அவ்வாறே செய்து புறாவை விடுவித்தான். இது சிபிச் சக்கரவர்த்தியை பரீட்சிப்பதற்கு இறைவன் செய்த ஒரு திருவிளையாடல்.

பாரி வள்ளல் தனது தேரில் பவனி வந்து கொண்டிருக்கின்றார். வழியிலே முல்லைக் கொடி ஒன்று படரக் கொழு கொம்பு இல்லாமல், தரையெல்லாம் படர்ந்து, காலால் உழக்கப்படுவதைக் காண்கின்றார். அதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவரது இரக்க சிந்தனை சிந்திக்கின்றது. அவர் உடனே தனது தேரை ஒரு ஓரத்திலே நிறுத்தி, முல்லைக் கொடியை அதன்மேல் படரவிட்ட பின், தான் நடந்து செல்கின்றார். இது பாரியின் இரக்க சிந்தனையின் செயல். இதனால், முல்லைக்குத் தேர் ஈந்தான் முடி மன்னன் பாரி என்று உலகமே அவரைப் போற்றுகின்றது.

எனவே, அன்பு என்பது தெய்வத்தின் ஒரு வடிவம். அன்பு கண்களுக்குப் புலப்படாது. தெய்வமும் கண்களுக்குப் புலப்படாது. ஆனால் இரண்டும் மனிதனுக்கு மிக அவசியம். அன்பால் எதனையும் வென்று விடலாம்; அத்தனை வசீகரமும் ஈர்ப்பும் கொண்டது அன்பு. இதுவே மெய்யன்பு. இதனையே இறைவனும் எதிர்பார்க்கின்றார். எனவே அன்பு செய்வோம். அகிலத்தை வெல்வோம்! செய்வோமா?

---

மற்றவர்கள் முன்னிலையில் புகழுக்காக நாம் செய்யும் செயல்கள் தர்மம் ஆகிவிடாது. யார் கண்காணிப்பும் இல்லாதபோதும் நமது மனமே நமக்கு சாட்சி என்று கருதிக்கொண்டு செயற்பட வேண்டும். மோட்டார் வாகனத் தரிப்பிடங்கள் நிரம்பியிருக்கும் இடங்களில், சற்றுத் தொலைவில் போய் நமது வாகனத்தை நிறுத்திவிட்டு வருவதற்கு சோம்பலுற்று, மாற்றுத் திறனாளிகளுக்குரிய வாகனத் தரிப்பிடங்களை நமதாக்கிக் கொள்வதுகூடப் பாவமான செயலாகும். யாரும் காணவில்லை என்று நினைத்து அத்தரிப்பிடத்தில் நமது வாகனத்தை நாம் நிறுத்திவிட்டுப் போனபின் நடப்பதற்குச் சிரமமான ஒருவர் அங்கே தனது வாகனத்தை நிறுத்தமுடியாமல் தவித்து நிற்பாராகில் அதனால் கிடைக்கின்ற பாவம் நம்மை சும்மா விட்டுவிடாது. காரணம் ஊனமுற்றவர்களுக்கு நாம் இழைக்கும் அநீதி நமது ஏழு தலைமுறைகளைச் சூழ்ந்துகொள்ளும் என்கிறது தர்ம சாஸ்திரம். அரசாங்க போக்குவரத்துச் சாதனங்களில் பயணிக்கும்போதும் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அப்படியானவர்கள் பயணிக்காதிருந்தாலும் வயதில் முதிர்ந்தவர்களுக்கு அந்த இருக்கைகளை கொடுத்து உதவ வேண்டுமே தவிர கண்டும் காணாத மாதிரி திரும்பி உட்கார்ந்துகொள்ளக் கூடாது.

சிறு வயதில் நாம் எதற்காக எல்லாம் அழுதோம் என்பதை இப்போ நினைத்துப் பார்த்தால் நமக்கே சிரிப்பாக இருக்கும். அப்போ நாம் ஏளனமாகச் சிரித்த விடயங்களை இப்போ நினைத்தால் கண்ணீர் பெருகும். இவ்வாறு அழுததை நினைத்தால் சிரிப்பும், சிரித்ததை நினைத்தால் அழுகையும் வந்தால் அதுவே நமது முதிர்ச்சியின் அடையாளம். இந்த விபத்து இனிமேல் நடக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

*ஒரு அறிவாளி தனக்குள்ளே எல்லாவற்றையும் எதிர்பார்க்கிறான்.*

# யாழ்ப்பாணம் இனிக்கிறது

– திரு **கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

யாழ்ப்பாணம் தேனால் நனைகிறது. அதைப் பருகிடப் பருகிட இன்பமும் அளவுகடந்து பிரவாகிக்கிறது. தேனினை மாந்தியவர்கள் ஊனினை உருக்கி உள்ளொளியில் மயங்கிக் கிடக்கின்றார்கள். ஆராத இன்பமோடு, தீராத பக்தியோடு, நீராயுருக்கி என் ஆருயிராய் நின்ற தலைவனைப் பார்த்தும் கேட்டும் உணர்ந்தும் பாடியும் இரசிக்கும்படியாக அடைந்த பேறினை எப்படிச் சொல்வேன்? பழைய ஊழ்வினைகள் பாறும்படியாக, சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எமையாண்ட அத்தனை மெய்யுருகிப் பாடுகின்ற அடியார் கூட்டம், தேன் சொட்டுமாறு வாயெல் லாம் திருவாசகம் கனிந்து குழைந்து ஊற்றெடுக்கிறது.

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் உட்பட யாழ் மாவட்டத்தில் அருள் சுரக்கும் ஆலயங்கள் பலவற்றிலும் மார்கழி மாதப் பிறப்பில் இருந்து தைப்பொங்கல் வரைக்குமான ஒரு மாதகாலம் தேன் கலந்த திருவாசகம் இனிக்கும்படியாக ஓதப்பட்டு வருகிறது. மொத்தமாக 51 பதிகங்கள், பாடல்கள் 658உம் கிட்டத்தட்ட இருநூறு ஆலயங்களில் பண்ணோடு ஓதப் பட்டு வருகிறது. மாணிக்கவாசக சுவாமிகள் எம்பெருமானாகிய சிவபெருமானை நினைந்து நெக்குருகும்படியாக நைந்து நைந்து பாடியருளிய பொக்கிஷமே திருவாசகமாகும். இது பூவுலக மாந்தர்க்குக் கிடைத்த ஒரு அருமருந்தாகும்.

சிவபுராணத்தில் ஆரம்பித்து, அச்சோப்பதிகத்தில் நிறைவடைகிறது. சிவபுராணத்தில் மொத்தமாக 95 வரிகள். ஓராதார் உள்ளத்துள் ஒளித்து விளையாடும்படியாகவும், உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்று, பொய் ஆயினவெல்லாம் போயகல வந்தருளி, மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடராய், அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவாய், தாயிற் சிறந்த தயாவான தத்துவனாய், ஈர்த்து எம்மை ஆட்கொண்ட எந்தை பெருமானாய் அல்லல் பிறவி அறுப்பவனாய் அச்சோப் பதிகம் ஈறாக, திருவாசகம் ஆலயங்கள் தோறும் இனிக்க இனிக்கப் பாடப்பட்டு வருகிறது.

"தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம் கோன்
திருவாசகம் எனுந் தேன்"

"கற்பாந்த காலம் கடவாக் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்து எனக்குச் சேர்ந்ததே - அப்பன்
உருவாசகம் கொண்டு உரைத்த தமிழ் மாலைத்
திருவாசகம் என்னும் தேன்!"

சாத்திரத்திற்கு திருமூலரின் திருமந்திரம்,
தோத்திரத்திற்கு மணிவாசகரின் திருவாசகம்.

*தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவையே வெற்றிக்கு அடிப்படை.*

மோகன இராகத்தில் திருவாசகம் ஓதுவது சம்பிரதாயமாகும். அவ்வாறு ஓதப்படும்போது சிவபெருமான் மட்டுமல்ல, அன்பர்கள், அடியார்கள், கேட்பவர்கள், கற்றோர்கள், கல்லாதவர், சிறுவர்கள், முதியோர்கள், நோயாளிகள் என எல்லோர்க்கும் தேனெனச் சுவைசொட்டுமாறு இனிக்கும். இவைமட்டுமா? 16,450 சொற்களும் ஓதும்போது வாயிலிருந்து இசையோடு உதிர்ந்து மண்ணிலும் கண்ணிலும் விண்ணிலும் பரவும்போது யாழ்ப்பாணம் முழுவதுமாக இனிக்கிறது.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான்எனது என்று அவர் அவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். சிவம் எங்கும் வியாபித்து இனிக்கும் தன்மையதாகும். இந்தச் சிவமானது சீவனோடு இரண்டறக் கலந்துள்ளது. இதன் பேறாகச் சீவன் சிவமாகும் தெளிவு திருவாசகம் பாடுந்தோறும் கிடைக்கப்பெறும். இது உணரப்படும்போது சிவம் பேரானந்தமாய் எங்கும் ஜொலிக்கும். சிவமயமான அலைகள் ஓசை ஒலிகளாக எங்கும் பிரகாசிக்க மண்ணும் இனிக்கும். மனிதனும் இனிப்பான்.

"தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ?
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலியீர்!
தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தாற்போல
ஊனுக்குள் ஈசன் ஒளிந்து நின்றானே!"

குழைத்த பத்தில் அருமையும் அற்புதமாகவும் ஒரு பாடல் இனிக்கிறது. மணிவாசகர் எம்மை அழைத்துச் செல்கின்றார்.

"வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்தன் விருப்பு அன்றே!"

புற்றில் வாள் அரவும் அஞ்சேன், பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன், மற்றும் ஓர் தெய்வம் தன்னை உண்டு என நினைந்து எம்பெருமாற்கு அற்றில்லாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே! அன்பு இலாதவரைக் கண்டால் நாம் அஞ்சுமாறே! சேவடி பரவி வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே! தாள தாமரைகள் ஏத்தி தடமலர் புனைந்து நையும் ஆள் அலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே! முன்னவன் பாதம் ஏத்தி அகம் நெகாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே! விண்ணவர் நண்ணமாட்டா செறிதரு கழல்கள் ஏத்தி சிறந்து இனிது இருக்கமாட்டா அறிவு இலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே! இவ்வாறு இறைவனிடத்தே அன்பும் ஈடுபாடும் இலாதவரைக் காணவே அஞ்சும் வகையில் அச்சப்பத்தில் எம்மைப் பதப்படுத்துகின்றார்.

*பசி, உழைப்பு, வியர்வை இவை மூன்றும் பிணிபோக்கும் மருந்துகள்.*

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறியறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார்?
யாழ்ப்பாணம் இனிக்கிறது. நாடு இனிக்குமா?
திருவாசகம் பாடப்பாட இனிக்கும்.

---

## குறள் சமுத்திரத்தில் இருந்து ஒரு துளி!
## அறம்பற்றி குறள் கூறுவதென்ன?

பத்துப் பத்து குறள்கள்மூலம் வாழ்வியற் கருத்துக்களை வகுத்துக்கூறி தமிழுக்கு அணிசேர்த்து திருக்குறளைத் தந்தவர் திருவள்ளுவராவார். அவர் அறம்பற்றி என்ன, எப்படிச் சொல்கிறார் என்பதை சிறிது நோக்குவோம்.

சாதாரணமாக அறம் என்றால் "தருமம்" செய்வதோடு நிறைவுபெற்றுவிடும் என்பது எம்மில் பலருடைய எண்ணங்கள். அறத்தினுள் "தருமமும்" அடங்கியுள்ளதென்பது உண்மை. ஆனால் தருமம் மட்டும்தான் அறமாகாது என்பதை குறள்களைப் படிக்கும்போதுதான் தெரிந்துகொள்ள நேரிடும். அறமே இறைவன் என "அறவாழி அந்தணன்" என குறள் 08இல் குறிப்பிடுகின்றார். அறத்தை வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் செய்யவேண்டும் என 33இல் சொல்கிறார். அறத்தைவிட பெரும் செல்வமும் இல்லை என 32இல் கூறுவதோடு உயிருக்கு உற்ற துணை அறம் என 36இலும் அறமற்ற செயல்களைச் செய்யக்கூடாதென 157இலும் கூறுகிறார். பொதுவாக உணவில்லாதவனுக்கு உணவும், பொருள் இல்லாதவனுக்குப் பொருளும், ஆடை இல்லாதவனுக்கு ஆடையும் வழங்குவதுதான் அறம் எனக் கொள்வதுண்டு. இவை சார்ந்து "மணிமேகலை" கூறுவதையும் காண்கிறோம்.

"அறம் - எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இது கேள்! மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுள்ளும் அல்லது
கண்டது இல்!"

ஆனால், அறம்பற்றி வள்ளுவர் தரும் விளக்கம் சற்று வித்தியாசமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கிறது. இதனால்த்தான் உலகப் பொதுமறையாக வள்ளுவம் மிளிரக் காரணம் எனலாம். வள்ளுவத்திலே அறம் என்பது, இன்சொல் பேசுதல், அழுக்காறு கொள்ளாதிருத்தல், வெகுளாதிருத்தல், பொய் கூறாமல் இருத்தல், தீயவற்றை நீக்குதல் போன்றவை "அறன்" ஆகும் என்கிறார் வள்ளுவர்.

பிறர் நாணத்தக்க பழிச்செயல்களை செய்யாது வாழ்பவனை அவன் அறவழியில் வாழ்கிறான் என்கிறார். தலைவன் தலைவியை விட்டு பொருள் தேடுவதற்கு பிரிகிறான். இல்லறத்தை நல்லறமாக்கவே செல்கிறான் என சங்கப்பாடல் ஒன்று கூறுகிறது. ஆனால் வள்ளுவர் நல்லறம் காண்பதற்கு பொருள் முக்கியமில்லை எனக் கூறுகிறார். "பேரறம்" மட்டுமே போதுமென்கிறார். அது என்ன பேரறம்? மனதில் மாசு இன்றி தூய்மையாக இருத்தல் வேண்டும். அதுவே அறமாகும் என்கிறார். ஒவ்வொருவரும் "மனத்தூய்மை"யுடன் வாழ்ந்தால் பகை, பூசல், பிற பிணக்குகள் எதுவுமே ஏற்படாது. இவற்றிற்கு மனிதன் கைதி ஆகாமல் மனத்தூய்மையுடன் வாழ்வதே மிகப்பெரிய அறமாகும் என்பதை இலகு தன்மையாக கூறுகிறார் வள்ளுவர்.

எனவே, பொருளுடையார் மட்டும்தான் அறம் செய்ய முடியும் என்ற அச்சம் தேவையில்லை. கையில் ஒரு சதமும் இன்றி அறம் செய்ய முடியும் என்ற புரட்சிகர கருத்தை திருவள்ளுவரைத் தவிர எவரால் கூறமுடியும்?

"மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" (குறள் 34)

வாழ்க வள்ளுவம்.

-கனகசபை தேவகடாட்சம்

முதுமையின் சுருக்கம் முகத்தில், முயலாமையின் சுருக்கம் அகத்தில்.

# சைவத்தமிழ் போற்றும் சான்றோர் வரிசையில்
# ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை
## (07.03.1860 - 1944)

– திரு மூ சிவலிங்கம் அவர்கள் –

இலங்கையின் வடபால் இயல்பான செம்மண்ணும் வற்றாத நன்னீர் ஊற்றும் வளப்படுத்த இயற்கை அன்னையின் எழு கோலம் பூண்ட திருவூர் வசாவிளான் என்னும் புனித பூமியாகும். இப்பிரதேசம் செய்த தவப் பயனாக இதன் கிழக்கே செல்வச்சந்நிதி முருகனும் மேற்கே மாவிட்டபுரக் கந்தனும் அருளமுதூட்டினர். இயற்கை வளங்களை ஆதாரமாகக் கொண்ட இவ்வூர் மக்கள் தமது வாழ்வாதாரப் பணியாக விவசாயத்தை மேற் கொண்டனர்.

வைரம் பற்றிய செம்மண்ணின் சிறப் பால் பயிர் வளம் சிறக்க மண்ணின் வாசனை யால் தமது உடல் உழைப்பின் பயனாகச் சிறப்பான சத்துணவுப் பயிர் விளைவித்துத் தமது உடலையும் வலுவூட்டினர். இதனால் யாவரும் கடின உழைப்பால் முறுக்கேறிய தேக அமைப்புடன் சூழவுள்ள ஆலயங்களிற் குடி கொண்ட இறையருளால் நெஞ்சில் வஞ்ச மில்லாது இறைசிந்தனையை வளர்த்து வந்தனர். இப்புனிதபூமியில் பல சீர்களினாலும் சிறப்படைந்து தமிழ் மண்ணின் பெருமையை உலகறியச் செய்யும் உத்தமனை அறிமுகஞ் செய்யும் இறையருட் சோதனையும் அமைந்தது.

வசாவிளானைப் பூர்வீக வதிவிடமாகக் கொண்ட விவசாயியான கந்தப்பிள்ளை என் பவர் இல்லறம் நாடி வள்ளியம்மை என்ப வரைத் துணைவியாக ஏற்று சொல்லறம் பேணி நல்லறம் காத்தனர். இருவரும் முருக பக்தர்கள். இவர்களின் இனிய வாழ்வில் சற் புத்திரரொருவர் 07.03.1860இல் அவதரித்தார். முருகனருளால் பிறந்த புதல்வனுக்கு வேலுப் பிள்ளை என நாமஞ்சூட்டி அன்புடன் பேணி வளர்த்தனர். இயல்பான மண்வாசனை பெற்றோர் ஊட்டிய சத்துணவுடன் கூடிய அரவணைப்பு, இறையருட்சித்தம் யாவும் உந்தியதால் வேலுப் பிள்ளை துள்ளு நடைபோட்டு ஏட்டுக் கல்வியை நாடினர்.

அக்காலத்தில் பாடசாலைகள் இல் லாத காலம். பெற்றோர் தம் பிள்ளைகளைத் தமது ஓய்வு நேரத்தில் "அ"கரத்தில் தொடங்கி இறைசிந்தனை, நற்பண்பு, நீதிநெறி, வாழ்வாதாரப் பயிற்சி ஆகியவற்றைப் புகட்டி வந்தனர். வேலுப்பிள்ளை சிறப்பான பணி ஆற்றவென்றே அவதரித்ததால் இறையருளின் சிறந்த மதிநுட்பத்தையும் கல்வி ஆர்வத்தை யும் பெற்றோரிடம் ஆரம்பித்தபோதே தேடிக் கொண்டார். தமது மகனின் ஆர்வத்தை வலு வூட்டவெண்ணிய பெற்றோர் மகனை நல் ஆசிரியர்களைத் தேடி அவர்களிடம் கற்க வைத்தனர். அண்மையில் பாடசாலைகள் இல் லாதபோதும் கல்வி கற்கவேண்டிய தேவையை இறையருள் தூண்டியதால் சற்றுத் தொலை விலுள்ள ஆசிரியர்களிடம் வேலுப்பிள்ளை நடந்து சென்றே விருப்புடன் கற்று வந்தார். தமது கல்வித் தேவைக்கேற்ப புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த கதிர்காம ஐயரிடம் சிறந்த சமயபக்தி மூலம் மேம்பட்டுச் சமயக் கல்வியுடன் செந்தமிழ் கற்கவும் தொடங் கினார். இதனையடுத்து ஆவரங்காலைச்

*மற்றவர்களுடைய தவறுகள் நமக்கு நல்ல பாடங்கள்.*

சேர்ந்த பெரும்புலவர் நவசிவாயம் மற்றும் சிறந்த கல்விமான் நெவின்சன் சிதம்பரப்பிள்ளையிடமும் ஆவலுடன் கற்று வந்தார்.

### ஆசுகவி

வேலுப்பிள்ளையின் மதிநுட்பமான அபாரசக்தியை இறையருள் தூண்டியதால் ஆசிரியர் ஒருமுறை கூறுவதையே ஏற்று யாவற்றையும் நன்கு கிரகித்தார். இதனால் வேலுப்பிள்ளை சமயநெறி, செந்தமிழின் செழுமை, கவிபாடும் புலமை, தக்க சமயத்தில் சமயோசிதமாகப் பேசும் பேச்சுவன்மை, எப்பொருள் கேட்டாலும் கேட்டவுடன் பாடும் ஆற்றல் மிக்கவராகக் காணப்பட்டார். நல்லாசிரியர்கள் மற்றும் கல்விமான்கள் யாவரும் வேலுப்பிள்ளையின் கல்வியறிவு சமயோசிதபுத்தி, கவிபாடும் வன்மையைப் பாராட்டினர். இதனால் சிறுவயதிலேயே இவர் "ஆசுகவி" என அழைக்கப்பட்டார். வேலுப்பிள்ளையின் நுண்ணறிவும் பேச்சுவன்மையும் இவரை அலங்கரிக்கத் திடகாத்திரமான உடலமைப்பு, கல்வியறிவுக்கேற்ற அஞ்சா நெஞ்சுடைய புத்திக்கூர்மை யாவும் இறையருளால் வழங்கப்பெற்ற நன்கொடையாகவே யாவரும் வியந்தனர்.

### கல்லடி வேலுப்பிள்ளை

இவர் வாழ்ந்த மனையின் முன்னால் ஒரு பெரிய பாறாங்கல் இயல்பாகவே அமைந்திருந்தது. இவரின் திறமை யாவராலும் போற்றப்பட்டது. இவரின் கல்விச் சிறப்பால் கவி புனைதல், கட்டுரைகள் பல எழுதுதல் பொலிவுற்றன. தமது திறமைக்கு மேலாக யாரேனும் தவறிழைத்தால் தமது மதிநுட்பத்தால் சொல்லாலும், எழுத்தாலும் கண்டனங்கள் தெரிவித்தார். இதனால் பலரின் வெறுப்பிற்கும் ஆளானதுடன் நீதிமன்றங்களை நாடவும் நேர்ந்தது. நீதிக்கு மாறான கண்டனங்களுக்காக அபராதம் செலுத்தவும், சிறை செல்லவும் நேர்ந்தது. சிறையிலிருந்து மீண்டு வந்ததும் தமது மாற்றுக் கருத்துடையோரை தமது சாதுரியத்தால் தம்மைவிட விஞ்சாது பார்த்துக் கொண்டார்.

சிறந்த விவசாயி, நுண்ணறிவாளர், கட்டுரையாளர், சிறந்த பேச்சாளர், எடுத்தவுடன் கவிபாடும் திறமைசாலி. இவரிடம் பலரும் பலசமயம் வந்து சேருவர். இதனால் எவரும் தம்மை இலகுவில் கண்டறியும்படி தமது வீட்டினருகே இருந்த கல்லை நினைவூட்டுவார். இதனால் யாவரும் இவரைக் "கல்லடி வேலுப்பிள்ளை" என அழைத்தனர். இருநூறாண்டுகள் கடந்தும் கல்லடி வேலுப்பிள்ளை என்ற பெயர் நிலை கொண்டுள்ளது. இவரின் வீட்டில் பிற்காலத்தில் வாழ்ந்த இவரின் மகன் சுப்பிரமணியம் என்பவர் "கல்லடி மணியம்" என அழைக்கப்பட்டார். இவை யாவும் இறைவனால் வழங்கப்பட்ட பெருமையாக உணரலாம்.

### இல்லறச் சிறப்பு

குலமரபு, கல்விச்சிறப்பு, பணிச்சிறப்பு யாவற்றாலும் உயர்வடைந்த வேலுப்பிள்ளை தமது திருமணப் பருவத்தில் உரும்பிராயைச் சேர்ந்த ஆச்சிக்குட்டி என்பவருடன் இல்லறத்தில் இணைந்தார். இவர்களின் இனிய இல்லற வாழ்வு நீடிக்கவில்லை. இறையருட்சித்தப்படி ஆச்சிக்குட்டி இறைபதமடைந்தார். காலங்கள் செல்லவும் பெரியோர்கள் உறவினர்களின் வேண்டுதலையடுத்து வேலுப்பிள்ளைக்கும் ஆச்சிக்குட்டியின் இளைய சகோதரி ஆச்சி முத்துவுக்கும் மறுமணம் நடைபெற்றது.

*ஒரு மனிதனின் பத்து விரல்களே அவனது சிறந்த நண்பர்கள்.*

இவர்களின் இல்லறவாழ்வு சிறப்படைந்தது. நான்கு புத்திரர்களும் பெற்றோரின் அரவணைப்புடனும் கல்வி புகட்டலுடன் பலவாறு சிறப்படைந்து தந்தையின் ஆற்றல்மிகு பணிகளை மேற்கொண்டு அவரின் சிறப்பை உயர்வடையச் செய்தனர்.

**மூத்தமகன் வே.சுப்பிரமணியம்**

தந்தையின் குலத்தொழிலான விவசாயத்தை மேற்கொண்டு இதே வீட்டில் வசித்தார். தந்தை வழிப்படி விவசாயப் பணிக்கு மேலாகத் தமது கற்ற கல்வியின் பேறாக சமய சமூகப்பணிகளை மேற்கொண்டார். உடலால், நிதி நிலைமையால் நலிவுற்றோரைச் சிரத்தையுடன் நோக்கி மேம்படுத்தினார். தாம் சார்ந்த இடங்களில் ஏற்படும் சமய சமூகப்பணிகளில் முன்னின்று தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். இதே வீட்டில் வசித்ததால் யாவரும் இவரைக் "கல்லடி மணியம்" என அழைத்தனர்.

**இரண்டாவது மகன் க.வே.நடராசா**

தந்தையின் பேச்சாற்றலை நன்கறிந்தவர். கல்விக் காலத்தில் சிறந்த பேச்சாளராகவே வியக்கப்பட்டார். இதனால் இவர் சட்டக்கல்லூரியிற் கற்கும் வாய்ப்பை தந்தை ஏற்பாடு செய்தார். தந்தையின் புகழை நிலைநாட்டுவது போல பார்போற்றும் சட்டத்தரணியானார். இவர் பலரின் வேண்டுதலால் மலையகஞ்சென்று பண்டாரவளையில் சட்டத்தரணியாகப் பிரகாசித்தார். பண்டாரவளையில் சிறப்பான (சட்டத்துறை) பணியால் யாவராலும் கவரப்பட்டார். நீடிய காலச் சேவையும் மக்களின் பேரன்பும் அப்பகுதி மக்களின் வேண்டுதலும் கைகூட 1948 இல் இலங்கையின் முதன் முதல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பண்டாரவளைத் தொகுதியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரின் பணியால் யாவரும் பெருமையடைந்தனர். வசாவிளான் மண்ணிற்கும் அரிய பெருமை கிடைத்தது.

**மூன்றாவது மகன்**

க.வே.சாரங்கபாணி இவர் தந்தையின் வழிவந்த கல்வியால் எழுத்துப்பணியை நாடினார். "தாயகம்", "சத்தியேஸ்வரி" என்னும் இரு நூல்களை எழுதி வெளியிட்டார். பேனா முனையில் உள்ளூர் மற்றும் இந்தியாவில் பல சிறந்த நண்பர்களுடன் உறவாடினார். இவர்களுள் பாரத நாட்டு முன்னாள் முதலமைச்சர் பண்டிட் ஜவகர்லால்நேரு மிகவும் குறிப்பிடத்தக்கவர். இவர்களிடையே வளர்ந்த நட்பு நீடிய காலம் கடிதத் தொடர்பானது. சாரங்கபாணி எழுத்துத் துறையில் நன்கு பிரகாசித்தார். தமது உடல்நலம் பாராது எழுத்துத்துறையில் தடம் பதித்ததால் காசநோய் இவரை இரையாக்கியது. தமது நடுத்தரவயதில் இவரின் இழப்பு யாவருக்கும் பேரிழப்பானது. கடைசி மகனான இரத்தினசபாபதி என்பர் பெற்றோரின் செல்லப் பிள்ளையாக வளர்ந்ததால் "நயினார்" என அழைக்கப்பட்டார். இப்பெயர் இவரின் மறுபெயராக நிலைகொண்டது. இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்து விளங்கினார். இதனால் இருமொழிகளிலும் சிறந்த பேச்சாளரானார். தந்தையின் சிறப்பை இவர் பேச்சுவன்மையால் உறுதிப்படுத்தினார். இருமொழித் திறமை இவருக்கு இலங்கை இராணுவத்தில் "லெப்ரினன்ற்" பதவியைப் பெற வைத்தது. குறிப்பிட்ட காலப்பணியுடன் ஓய்வு பெற்றார். தந்தையின்

மரபால் எழுத்துத்துறையிலும் பிரகாசித்தார். பின்னர் வடமாகாணத்தின் பால் விநியோக மேற் பார்வையாளராகவும் பணியாற்றினார்.

கல்லடி வேலுப்பிள்ளை தமது பெருமுயற்சியால் ஆசுகவி எனவும் மற்றும் விவசாயம் பேச்சுவன்மை, வாதிடுதல், எழுத்துத்துறை, இருமொழிப் பயிற்சி சமய சமூகப் பணியில் உயர்ந்த நிலையை நான்கு சற்புத்திரரும் தமக்கிடையே தேர்ந்தெடுத்துப் பணிச்சிறப்பால் தந்தைக்கும் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்தனர்.

## சுதேச நாட்டியம் என்னும் பத்திரிகையின் உதயம்

எழுத்தாற்றல் மிக்க ஆசுகவி தமிழ் மக்களின் பிரசுரங்களுக்கும் தமிழை நன்கு பிரகாசிக்க வைக்கும் தேவை கருதியும் அச்சுப்பதிவிற்கென அச்சுயந்திரசாலையொன்றை நிறுவ முன்வந்தார். இத்தேவையை யாவரும் அறியும் வண்ணம் தமக்கு ஆதரவான கல்வி மான்கள், தனவந்தர்களிடம் ஆலோசித்தார். இவரின் தூயபணியை மெச்சிய யாவரும் உதவ முன்வந்தனர். அவர்களின் உதவியுடன் சென்னைக்குச் சென்று புதியதோர் அச்சு இயந்திரத்தைத் தருவித்து தம் மண்ணில் நிறுவினார். பல பெரியார்களின் தகவல்களுடன் தாமே நிர்வகித்து "சுதேசநாட்டியம்" என்னும் புதினப்பத்திரிகையைத் தமது நாற்பத்தியிரண்டாம் வயதில் (1902) வெளியிட்டார். இப்பத்திரிகையில் ஆசுகவியின் வீரக் குரலும் தமிழின் வளமும் மண்ணின் வனப்பும் ஒலித்தன. இப்பத்திரிகை எம்மண்ணில் மட்டுமன்றி இந்தியா மலாயா ஆகிய நாடுகளிலும் விற்பனையாகியது. மேலும் இப் பத்திரிகையின் தரம் யாவராலும் போற்றப்பெற்றது.

## கண்டனமும் தண்டனையும்

மலாயா நாட்டிலுள்ள சிலர் ஒழுங்காக பணம் அனுப்பாததால் அதனைப் பெற்றுவர மலாயாவுக்குச் சென்றார். சிங்கப்பூரில் வசித்த செட்டி ஒருவர் பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை பெறுவதன் பேரில் ஆசுகவி அவ்விடம் வந்திருப்பதை அறிந்து அவருக்கு ஏமாற்றந்தர முன்வந்தார். ஒரு விளம்பரத்தை எழுதித் தமது வீட்டு வேலையாளிடம் கொடுத்து யாராவது வந்தால் தான் இல்லையென்றும் எழுதியவற்றைக் காண்பிக்கும் படியும் கூறிச் சென்றார். ஆசுகவி அச்செட்டியின் வீடு சென்றதும் வேலையாள் விளம்பரத்கைக் காண்பித்தான். விளம் பரத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"காசு தண்டலுக்காய் யாழ்ப்பாணத்திலிருந்து வருபவரானாலுஞ் சரி, வந்து உளளூரில் வசிக்கிரவரானாலுஞ் சரி நம்ம கிரகத்தினுட் பிரவேசிக்கக் கூடாது. அதன் கீழ் தாயுமான சுவாமியின் பாடலொன்றும் இருந்தது. அதனை வாசித்த புலவருக்குக் கடும் கோபம் மேலிட்டது. உடனே அவ்விளம்பரத்தின் பிற்பகுதியில் தாமொரு வாசகத்தை எழுதினார். அதிற் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"தண்டியுண்ணுஞ் செட்டியிடம்
தண்டுபவர் இங்கிருந்தால்
மட்டி யாவரென்றே
மதிப்பேன் பராபரமே"

இப்பாடலைப் பார்த்ததும் விசனமுற்ற செட்டி நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார். வழக்கை விசாரித்த நீதிபதி புலவரின் திறமையை மெச்சி இதனைப் பாரதூரமாக எண்ணக்கூடாது ஆனால் செட்டியின் அனுமதி இன்றி அவரின் விளம்பரப் பலகையில் எழுதிய சிறு தவறுக்காக 25 வெள்ளி அபராதஞ் செலுத்தும்படி தீர்ப்பளித்தார். இத் தீர்ப்பில் அபராதம் விதித்தமையை அவ்வூர் பத்திரிகைகள் கண்டித்தன.

ஆசுகவியின் கண்டனங்கள் தவறு இழைப்போர்மீது தொடர்ந்து வெளிவந்தன. அதனைத் தாங்கமுடியாத பலர் நீதிமன்றங்களை நாடினர். அடிக்கடி வழக்குகளுக்காக நீதிமன்றத்தை நாடும் ஆசுகவியை ஒரு சமயம் நீதிபதியொருவர் இந்த நீதிமன்றத்தில் உனது தலைக்கறுப்புக் காணக்கூடாதென எச்சரித்தார். ஆசுகவியின் செயல் மறு முறையும் நீதிமன்றால் அழைப்பாணையை ஏற்க வைத்தது. நீதிபதியின் முன்னைய எச்சரிக்கைக்கு மாறாக தமது தலையை ஒரு குண்டானால் மூடியவண்ணம் சென்றார். நீதிபதி அவரை விசாரணை செய்தபோது தமது முன்னைய எச்சரிக்கைக்காக இவ்வாறு செய்ததாக ஒப்புவித்தார். நீதிமன்றத்தை அவமதித்த தண்டனைக்காளானார்.

அக்காலத்தில் போதிய தகைமை இல்லாமல் கவிபாடுபவர்களின் சிறுமையை எண்ணிக் "கொட்டாவி விட்ட தெல்லாம் தமிழ்க் கவிதைகளாச்சே" என்ற கருத்தில் போலியாகக் கவிபாடுவோரை நோக்கி ஆசுகவி பாடிய பாடலொன்றை அறிவோம்.

"முன்னே ஒரு கவிக்கு முன்னூறும் நானூறும்
பொன்னே கொடுப்பர் புலவருக்கு - இந்நாளில்
வாசிக்க அறியாத வம்பர்தலையிட்டு
காசுக்கு நூறுகவி" என்று பாடினார்.

இதே போலப் பல ஆணித்தரமான சமயோசித கண்டனங்கள் பாடல்கள் ஆசுகவியால் தேவைக்கேற்பப் பாடப்பட்டன.

வேலுப்பிள்ளை அவர்கள் கல்வியறிவால் இயற்றமிழில் நன்கு பிரகாசித்து கவிதைகள் கண்டனங்களை வெளியிட்டவர். "சுதேச நாட்டியம்" என்னும் பத்திரிகை வெளியிட்டும் இயற்றமிழால் சிறந்து விளங்கியதுடன் சமயப்பற்றும் மிகுந்து தமது புகுந்த இடமான உரும்பிராயிலமைந்த கருணாகரப்பிள்ளையார் மீது பக்தி மிகுதியால் பாடல்கள் பாடியவர்.

ஆசுகவி சமயம் மற்றும் தமிழ் அறிவுடையோருடன் கூடிய நட்புறவு வைத்திருந்தார். ஒரு சமயம் (நூறு வருடங்களுக்கு முன்) இணுவில் மேற்கில் வசித்த சி.மு.கணபதிப்பிள்ளையை நாடியபோது இணுவில் மருத்துவமனையில் மகப்பேறு காரணமாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல பெண்கள் கூடுதலாக வந்து பிரசவித்தனர். இதனைக் கண்ணுற்ற ஆசுகவி "அன்று பன்றிக்குட்டி போல் பதினாறு பிள்ளைகளைப் பெற்றனர். வருத்தமில்லை ஆஸ்பத்திரிக்குப் போனதில்லை. இன்று பார் இணுவிலிலே பெண்கள் தொகை எண்ணவும் முடியுதில்லை" எனக் கூறித்தமது எண்ணக்கருவைத் தெரிவித்தார்.

## மதிப்புரைகள்

ஆசுகவி இணுவில் சி.மு.கணபதிப்பிள்ளை என்பவர் தமது குல தெய்வமான இணுவில் கந்தப் பெருமான் மீது பாடிய "பக்தி அருட் கீர்த்தனை" என்னும் பனுவற் தொகுதிக்கு மதிப்புரை எழுதினார். மதிப்புரையின் சிறப்பையும் நோக்குவோம்.

"திரு மருவும் இணுவைநகர்ச்
சுப்பிரமணியச்செவ்வேள் மீது
அருள்மருவு கீர்த்தனத்தை வரைந்
தளித்தான் அழகார் அவ்வூர்
பொருள் மருவு வேளாளர் குலக்
கணபதிப்பிள்ளை பெயர் பெற்றியோன்"

மேற்கூறிய மதிப்புரை கணபதிப்பிள்ளையின் பாடலின் சுவைக்கு மிகுந்த அலங்காரமாக அமைந்தது. இதுபோன்ற பல்வேறு நூல்கள் பாடல்களுக்கு ஆசுகவி அணிந்துரை, மதிப்புரை போன்ற பலவற்றிற்காக கவிதை வடிவிலேயே தமது திறமையை வெளிப்படுத்தினார்.

**நிறைவாக**

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவதரித்ததால் சைவமும் தமிழும் சிறப்படைந்தன. இவரால் வசாவிளான் திருவூரே பெருமை பெற்றது. நல்லாசிரியரிடம் நற்கல்வி கற்று தாம் வாழ்ந்த காலத்துப் பெரியார்களான ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை போன்றோரின் அடியொற்றி நூல்கள், கவிதைகள் ஆக்கவும், பேச்சாற்றல், சைவநெறி தமிழ் மரபில் தவறிழைப்போரைக் கவிபாடுவதில் உரியமுறைப்படி பாடாதோரை எழுத்தாலும் சொல்லாலும் கண்டனஞ் செய்வதில் கைதேர்ந்தவர். தமது திறமையால் அஞ்சா நெஞ்சுடன் நினைத்ததை முடிக்கும் வல்லமை பெற்றவர். தமது சிந்தனையில் தோன்றிய படி அச்சுயந்திரம் நிறுவி "சுதேச நாட்டியம்" என்னும் புதினப்பத்திரிகையை நாற்பது வருடகாலம் தொடர்ந்து வெளியிட்டவர். இவரால் எழுதி வெளியிடப்பட்ட யாழ்ப்பாணச் சரித்திரங்கள் அடங்கிய "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" என்னும் நூல் நற்பயனையும் சிறப்பையும் தேடித்தந்தன. இவரின் சற்புத்திரர்கள் நால்வரும் இவரின் சிறப்பை மேம்படுத்திய அறிஞர்களாகக் கணிக்கப் பெற்றனர். 1860இல் அவதரித்துத் தமது எண்பத்திநாலாம் வயதில் (1944) மறுமை எய்தினார். இவரின் புகழ் இன்றுவரை பிரகாசிக்கிறது.

## துயர் பகிர்கின்றோம்

*சந்நிதியான் ஆச்சிரம செயற்பாட்டுக்கு தன்னாலான வகையில் பல வழிகளிலும் உதவிபுரிந்த சட்டத்தரணி திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் அவர்களது கணவர் ச. உருத்திரேஸ்வரன் இறைபதம் அடைந்த செய்தியினையிட்டு மனம் வருந்துகின்றோம். அவரது ஆத்மா சாந்தி அடைய சந்நிதி வேற்பெருமானை வேண்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*~சந்நிதியான் ஆச்சிரமம்~*

*தன்னம்பிக்கையை இழந்தவன் எல்லாமே இழந்துவிடுவான்.*

# வடிவேலனின் வாகனங்கள்

– **ஆர்.வீ. கந்தசுவாமி** அவர்கள் –

முருகனின் வாகனம் எது? நாம் எல்லோரும் மயில் என்று கூறுவோம். ஆனால் முருகன் யானை, ஆடு என்று வேறு வாகனங்களைப் பயன்படுத்திய பின்னர்தான் சூரசங்காரம் நிகழ்த்தி மயிலை வாகனமாக்கினார்.

முதலில் யானை வாகனத்தைப் பற்றிப் பார்ப்போம். யானைக்கும் முருகனுக்கும் பல்வேறு வகைகளில் சம்பந்தம் உண்டு. முதலாவது, ஆறுமுகனின் அண்ணன் ஆனைமுகன் என்பதுதான். வேலவனுக்கு வேழமுகன் தன் வாகனமான யானையையும் கொடுத்தார். இதுவே முருகனின் முதல் வாகனம். இதில் ஏறிச் சென்றே சிங்கமுகனை சம்ஹாரம் செய்தார் சரவணன்.

சூரனை அழித்த பின்பு முருகனுக்குத் தன் மகள் தேவயானையை மணம் முடித்துக் கொடுத்த தேவேந்திரன், தனது வாகனமான ஐராவதத்தினையும் பரிசாக அளித்தான். இது இரண்டாவது வாகனமாகும்.

வடிவேலன் வாகனமாக இருந்த யானையின் பெயர் பிணிமுகம் என்றும், இது திருமாலால் அளிக்கப்பட்டது எனவும் கூறுவர். தாருகனை வதம் செய்ய முருகன் ஏறிச்சென்ற யானை இது என்று கூறப்படுவதும் உண்டு. வடிவேலன் வள்ளியை மணம்புரிந்திடக் காரணம் அண்ணன் கணபதி எடுத்த கஜ வடிவமேயாகும்.

ஆறுமுகனின் அடுத்த வாகனம் ஆடு. பொதுவாக அக்கினி பகவானின் வாகனம் ஆடு என்றே சொல்லப்படுகின்றது. ஆனால் முருகன் அக்கினியில் தோன்றியவன் என்பதாலும், செவ்வேள் குமரன் அக்கினி வடிவானவன் என்பதாலும், ஆடு முருகனின் வாகனமாகச் சொல்லப்படுகின்றது. முனிவர் ஒருவர் தேவர்களை அழிக்க நடத்திய யாகத்தில் தோன்றிய ஆடு முருகனால் அடக்கப்பட்டு வாகனமானது.

சூரபத்மனின் தங்கையும் ஆட்டுத் தலையினை உடையவளுமான அஜமுகி, தேவர்கள் முனிவர்கள் மனிதர்கள் என யாவரையும் கொடுமைப்படுத்தினாள். இந்திராணியையும் சிறைப்பிடிக்கத் திட்டமிட்டாள். அவளது கரத்தினை வீரமாகாளர் வெட்டினார். ஆனாலும் அவளது கொட்டம் அடங்கவில்லை. சூரபத்மன் முருகனிடம் பகைகொள்ளவும் இவளே காரணம். சூரனை வென்ற வீரனாக முருகன் திகழ்ந்ததால் ஆட்டுத் தலையுடைய அஜமுகியின் ஆட்டமும் அடங்கியது. அதனைக் குறிப்பிடும் விதமாகவும் ஆடு வாகனம் திகழ்கின்றது.

குமரனின் குதிரை வாகனம் பற்றிய கதை இது. அருணகிரிநாதரின் கந்தர் அநுபூதியில் சொல்லப்பட்ட கதை.

“ஆடும் பரி வேல் அணிசேவல் என பாடும் பணியே பணியா” என்று முருகனின் வாகனம் ஆடும், குதிரையும் என்கிறார் அருணகிரிநாதர். இந்தக் கேள்விக்கு விடை பாடலின் பொருளில் மறைந்து கிடக்கின்றது. பரி என்றால் குதிரை ஆடும் பரி என்றால் குதிரை எங்கேயாவது ஆடுமா? அருணகிரிநாதர் ஆடும் பரி என்று சொன்னது குதிரைபோல் வேகமாய்ச் செல்லக்கூடியதும் அழகு மிளிர ஆடக் கூடியதுமான மயிலைத்தான். மயில் தோகை விரித்தாடும்போது ஓங்கார பிரணவத்தின்

*சேமிப்பு இல்லாத குடும்பம் கூரை இல்லாத வீட்டிற்குச் சமம்.*

வடிவமாகத் தோன்றும். பிரணவத்தின் பொருளாக அதன் உள்ளே திகழ்பவன் முருகன். இதனையே மயில் வாகனம் உணர்த்துகின்றது. எத்தனை வாகனங்கள் இருந்தாலும் முருகனின் முக்கியமான வாகனம் மயிலாகும்.

அதற்குக் காரணம் அன்பு, பகைவன் ஆனாலும் சூரபத்மன்மீது பரிவுகாட்டி அவனது இரு கூறு உடலை மயிலாகவும் சேவல் ஆகவும் ஏற்றார் முருகப் பெருமான். அந்தப் பண்பிலே மயில் வாகனம் சிறப்பாகக் கூறப்படுகின்றது என்பார்கள்.

இதன் உட்கருத்து என்ன தெரியுமா? சேவல், நாதமாகிய ஒலியின் வடிவம். மயில் ஒளியாகிய விந்து வடிவம். சூரபத்மன் ஆணவ இருளின் வடிவம். ஆறுமுகன் தன்னை அண்டியோரின் மனதில் இருந்து ஆணவ இருளை அழித்து அங்கே ஒளியாகவும், இயக்கத்தின் ஒலியாகவும் நிறைந்து இருப்பான் என்பதுதான்.

இவ்விதம் பக்தர்தம் இதயமாகிய குகையில் வசிப்பவன் என்பதால்தான் அவனுக்குக் குகன் என்னும் பெயர் வந்தது.

அடியவர்தம் மனதில் நாதவிந்து ரூபனாக இருப்பான் ஆறுமுகன் என்பதை உணர்த்தத்தான் சேவலும் மயிலும் சேயோனின் பொதுவான அடையாளமாகத் திகழ்கின்றன.

நாதவிந்து கலாதி நமோ நமோ! என்று அவன் பாதம் பணிவோம். நம் மனதிலும் உறைந்து அருள் புரிவான் மயில் வாகனன்.

"கடவுள் எல்லோரையும் ஒரே மாதிரித்தான் படைத்திருக்கிறார் என்றால், மனிதர்கள் மட்டும் எப்படி சிலர் நல்லவர்களாகவும் சிலர் கெட்டவர்களாகவும் வாழ்கிறார்கள் சுவாமி" என்ற சீடனின் கேள்விக்கு "நல்லது, கெட்டது யாவும் மனிதனின் கர்ம வினைப்படி நிர்ணயம் செய்யப்படுவது. கடவுளின் அருள் எப்போதுமே பாரபட்சமற்றதுதான். ஆனால் மனிதர்கள்தான் அவரவர் மனப்பக்குவப்படியும் தங்கள் வசதிப்படியும் ஏற்று அனுபவிக்கிறார்கள்" என்று குருவானவர் பதிலளித்தார். சீடனுக்கோ தெளிவு கிட்டவில்லை. உடனே குருவும் அவனை ஒரு தோட்டத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே வாழை, மா, பலா போன்ற இனிய கனிகளைத் தரக்கூடிய மரங்களும், இறைவனுக்குச் சூட்டக்கூடிய மலர்களைத் தரக்கூடிய மலர்ச்செடிகளும், நஞ்சுத்தன்மை நிறைந்த காய்களைத் தரக்கூடிய பூமத்தை மரமும், வேலிப் பகுதியில் ஏராளமான முட்செடிகளுமாகக் காட்சியளித்தன. குருவானவரும் சீடனைப் பார்த்து "இங்கே பார்த்தாயா, இங்கு காணப்படும் அத்தனை மரம், கொடி, செடிகளுக்கும் பூமி எல்லா வளங்களையும் எந்த பாரபட்சமும் இல்லாமல் வழங்குகிறது. வாழை, மா, பலாவுக்கு இனிப்பான வளங்களும், பூமத்தைக்கு நஞ்சு நிறைந்த வளங்களும் என்று பூமி வழங்கவில்லை. ஆனால் பூமிக்கு மேலே இருக்கின்ற தாவரங்கள்தான் அவைகளின் இயல்புக்கு ஏற்ப வளர்கின்றன. மனிதர்களும் அப்படித்தான். அவரவர் இயல்புகளில் மாறுபட்டு நல்லவராகவும் கெட்டவராகவும் வாழ்கின்றார்கள். இறைவன் பூமித்தாய் போன்றவர்" என்றார் குரு. சீடனும் புரிந்துகொண்டான்.

அருளையும் அமைதியையும் இறைவன் அனைவருக்கும் சமமாகவே தருகிறார். மனிதருக்குள் பிளவையும், பகையையும் மனிதனே உருவாக்குகிறான்.

*சேமிக்கக் கற்றுக்கொள் சிக்கனம் தானாக அமையும்.*

# அடியவர்களுக்கு அளப்பரிய சேவையாற்றும் சந்நிதியான் ஆச்சிரமம்

– திரு இ. சரவணபவன் அவர்கள் –

அடியவர்களுக்கு நித்தமும் அன்னம் வழங்கி ஆன்மீகப்பணி, அறப்பணி, சமூகப் பணி, மருத்துவப்பணி, கலைப்பணி, கல்விப்பணி என அனைத்துச் சேவைகளையும் வழங்கி அளப்பரிய தொண்டுகளை ஆற்றிவருகின்றது சந்நிதியான் ஆச்சிரமம்.



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலுக்கு முன்பாக அமைதியே உருவாகக் காட்சியளிக்கிறது இவ் ஆச்சிரமம். முன்புறமாக அமைக்கப்பட்டிருக்கும் சிறிய கட்டடமொன்றின் முன் வாயிலில் எதிரெதிராக இரண்டு வாங்குகள் வைக்கப்பட்டு நடுவில் ஒரு மேசையும் உள்ளது. வாங்கு ஒன்றில் இவ் ஆச்சிரமத்தை நடத்திவரும் மோகனதாஸ் சுவாமிகள் வீற்றிருப்பார். அவரைச் சந்திக்க வருபவர்கள் அவர்கள் எவராக இருந்தாலும் சரி அவருக்கெதிராக உள்ள வாங்கிலில் அமர்த்திக்கொள்வர். தேவையான விடயங்களை அவரோடு பேசிக் கொள்ளலாம். கதிரைகளை இங்கே காண்பது அரிது. ஆச்சிரமம் அவ்வளவு எளிமை.

*கட்டுப்பாடற்றவன் கௌரவம் இழப்பான்.*

அருகில் பெரிய மண்டபம் ஒன்று உண்டு. நடுவில் முருகன் வள்ளி தெய்வானையோடு வீற்றிருக்கும் சிறிய கோவில், சற்றுத் தள்ளி சமையல் பகுதியும், இரண்டு பக்கமும் அடியவர்கள் அன்னதானம் அருந்தும் மண்டபமும் உள்ளன. கடந்த சில வருடங்களின் முன் இம் மண்டபம் புனரமைக்கப்பட்டது. சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் மாதாந்த சஞ்சிகையாக ஞானச்சுடர் வெளியிடப்படுகின்றது. 1998இல் இது ஆரம்பிக்கப்பட்டது. 1992ஆம் ஆண்டு தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. வருடத்தின் இறுதி வெள்ளிக்கிழமை ஆச்சிரம சுவாமிகள் முருகன் அடியார்களோடு இணைந்து முருகநாம பஜனை செய்வது வழமையாகும்.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் பின்புறமாக உள்ள கட்டடத்தில் இலவச வைத்திய சேவை நடைபெற்று வந்தது. பல நூற்றுக் கணக்கான நோயாளிகள் இம் மருத்துவ சேவைமூலம் பயன்பெற்று வந்தார்கள். ஆனாலும் தற்போதைய கொரோனா தொற்று சூழல் காரணமாக இலவச மருத்துவ சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. நிலைமை சீரானதும் மீண்டும் வைத்திய சேவை ஆரம்பிக்கும்.

நூற்றியிருபத்தைந்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள எழுபத்தைந்து குடும்பங்கள் பணம் மற்றும் உதவிப் பொருட்களைப் பெற்றுக்கொள்கின்றன. குடும்ப அங்கத்தவர்களின் தொகை, கல்வி கற்கும் பிள்ளைகள், மாதாந்த வருமானம் என்பன இதன்போது கவனத்தில் எடுக்கப்படுகின்றன. அநேகமான குடும்பங்களுக்கு அரிசி மற்றும் உலர் உணவுப் பொருட்கள் ஆச்சிரமத்தினால் வழங்கப்படுகின்றன. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான புத்தகப் பைகள், கற்றல் உபகரணங்கள், கழுத்துப்பட்டி, துவிச்சக்கரவண்டிகள், விளையாட்டுப் போட்டிக்கான பரிசுப்பொருட்கள் போன்ற உதவிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இத்துடன் மூக்குக் கண்ணாடிகள், தள்ளு வண்டிகள், மூன்று சில்லு சைக்கிள்கள் என்பனவும் இயலாத நிலையில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. சித்திரைப் புதுவருடம், தீபாவளி போன்ற விசேட தினங்களில் ஏழைகளுக்குப் புத்தாடைகள் வழங்கப்படுவது வழக்கமாக உள்ளது.

செல்வச்சந்நிதி கோவிலில் நிரந்தரமாக சுமார் எழுபத்தைந்து முதியவர்கள், ஆண்களும் பெண்களுமாகத் தங்கியுள்ளார்கள். இவர்கள் அனைவரும் சந்நிதியான் ஆச்சிரமத்திலேயே உணவருந்துகின்றார்கள். மூன்று வேளை உணவு, இரண்டு நேரத் தேநீர் என இவர்களின் பசியைத் தினமும் தீர்ப்பதற்கு சந்நிதியான் ஆச்சிரமம் என்றும் முன்னிலையில் உள்ளது. இங்குள்ள கலையரங்கு மண்டபத்தில் பல கலைநிகழ்வுகள் இடம்பெறுகின்றன. பாடசாலை மாணவ மாணவிகளினால் பல அரிய நாடகங்கள், நடனங்கள், வில்லுப்பாட்டுகள் எனப் பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

1988ஆம் ஆண்டு ஆச்சிரமத்தில் நித்திய அன்னப்பணிக்கு முதல் முதலாக வித்திட்டவர் கைதடியைச் சேர்ந்த அமரர் த. வேலாயுதன் ஆவார். அவரைத் தொடர்ந்து தவத்திரு முருகேசு சுவாமிகளும் பல அன்பர்களை இப் பணியில் இணைத்தார். முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரனும் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு

*அறிவு தலைக்குக் கிரீடம், அடக்கம் காலுக்குச் செருப்பு.*

பல உதவிகளை செய்துள்ளார். சுவாமிகள் அடியவர்களுடன் உரையாடும் முன்பக்கக் கூடத்தின் முன் வாயிலுக்குப் பின்பக்கமாக அதேகட்டடத்தில் ஞானச்சுடர் சஞ்சிகை வெளியிடப்படும் அச்சுக்கூடம் உள்ளது. அதற்குள் சிறிய கணனி அறை ஒன்றும் காணப்படுகின்றது. சுவாமிகளின் மகன் ஒருவர் ஞானச்சுடர் வேலைகளைக் கவனிக்கின்றார். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அறிஞர்கள், சித்தர்கள், சுவாமிகள், கல்விமான்கள், சைவப் பெரியார்கள் எனப் பலரும் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு வந்து அரும்பெரும் சொற்பொழிவுகளை ஆற்றுவது வழமை நிகழ்வாகும். எத்தனை பேர் வந்தாலும் அத்தனை பேர்களுக்கும் அன்னப்பணி ஆற்றுவது சந்நிதியான் ஆச்சிரமத்தின் உயரிய பணியாக உள்ளது. நித்தமும் நூற்றுக் கணக்கானோர் ஆச்சிரமத்தில் தமது பசியைப் போக்கிக் கொள்கின்றனர்.

இதைவிட வெள்ளிக்கிழமைகள் மற்றும் முக்கிய நாட்களில் பல நூறு பேர் அன்னதானத்தில் இணைந்து கொள்கின்றனர். தினமும் இவ்வுயரிய பணியைச் செய்வது என்பது எவராலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத செயல் என்பது வெள்ளிடைமலை. தொடர்ந்து பல வருடங்களாக எந்தவித இடர்பாடுமின்றி அன்னதானப் பணியுடன் ஏனைய பல அறப்பணிகளையும் ஆற்றிவரும் சுவாமிகளின் சேவை வியந்து பாராட்டத்தக்கதாகும்.

சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு உதவி கோரி இதுவரை எவரிடமும் வாய் திறந்து கேட்டதில்லை என சுவாமிகள் குறிப்பிட்டார். இவ்வளவு அளப்பரிய தொண்டினை எப்படிச் செய்கின்றீர்கள் என ஆச்சரியத்துடன் கேட்கும்போது "முருகன் தருகின்றான் மோகனதாஸ் செய்கின்றான்" என சுவாமிகள் அநாயசமாக சொல்லும்போது வியப்பு மேலிடுகின்றது.

செல்வச்சந்நிதி கோவிலில் திருமணங்கள் முடித்துவிட்டு திருமணத்துக்கு வந்தவர்கள் பெரும்பாலும் சந்நிதியான் ஆச்சிரமத்திலேயே உணவருந்துவார்கள். ஐந்தாறு மரக்கறிகள், பாயாசம், வடை என மிகவும் சுவையான கறிகளோடு திருமணச் சாப்பாடு வழங்கப்படுகிறது. செல்வச்சந்நிதி கோவிலில் சில வேளைகளில் குறிப்பிட்ட திருமண நாட்களில் பல திருமணங்கள் நடைபெறுவதும் உண்டு. சந்நிதி கோவிலுக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கும் சம்பந்தம் எதுவுமில்லை. இரண்டுக்கும் வெவ்வேறு நிர்வாகங்களே உள்ளன. சந்நிதியான் ஆச்சிரமத்தின் தொடர் சேவைகளுக்கு சந்நிதி முருகனின் திருவருட் கடாட்சமே காரணம் என சுவாமிகள் தெரிவிக்கிறார். மூன்று நேரப் பூஜைகளையும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுவாமிகளே செய்து வருகின்றார். பூஜைகளுக்குப் பின்னரே உணவருந்தல் இடம்பெறுகின்றது.

சந்நிதி கோவிலிலிருந்து வருடந்தோறும் கதிர்காம யாத்திரை ஆரம்பமாகும் போது சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாயிலில் யாத்திரிகர்களை வரவேற்று அவர்களுக்கான உதவிகளை சுவாமிகள் வழங்கி வருகின்றார். பல அடியார்கள் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு அன்பளிப்புக்களை வழங்குகின்றார்கள். அவர்கள் எவ்வளவு தருகின்றார்கள் என்பதை சுவாமிகள் கண்டுகொள்வதில்லை. அவர் வீற்றிருக்கும் மேசையின் லாச்சிக்குள் அடியவர்கள் விரும்பிய பணத்தைப் போடுவார்கள், சிலர் தங்கள் பெயர் விபரங்களைக் குறித்துக் கொடுப்பர்.

திருமுருக கிருபானந்த வாரியாரின் திருவுருவச் சிலையொன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ஐம்பொன்னினாலான இந்தச் சிலை 21 கிலோ கிராம் நிறையுடையது. கரம்பனைச் சேர்ந்த வரும் லண்டனில் வசித்துவருபவருமான திரு சிவானந்தஜோதி என்பவர் ஆச்சிரமத் திற்கு இச் சிலையினை அன்பளிப்பாக வழங் கினார்.

1940ஆம் ஆண்டு சந்நிதி கோவிலுக்கு அருகாமையில் மயில்வாகனம் சுவாமிகளால் ஆனந்தா ஆச்சிரமம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் இடம்பெற்ற அனர்த்தங்களினால் அவ்வாச்சிரமம் அழிவடைந்ததையடுத்து சந்நிதி யான் ஆச்சிரமம் மோகனதாஸ் சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. அறப்பணிகளில் சிறப்புப் பெற்றது அன்ன தானப் பணியாகும். சந்நிதியானின் சந்நிதானத் தில் தங்கி வாழும் ஏழைகளுக்கு மட்டுமல் லாது நாடிவரும் அடியவர்களுக்கும் தினமும் அன்னமளித்து ஆதரவு நல்குவதுடன் ஏனைய சிறப்பான அறப்பணிகளையும் ஆற்றி சமயத் தொண்டுகளோடு சமய வளர்ச்சிக்கான சேவை களையும் செய்துவரும் மோகனதாஸ் சுவாமி களின் அளப்பரிய பணிகள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதவையாகும். சந்நிதியான் ஆச்சிர மத்தின் தொண்டுகள் தொடர்வதற்கு அடிய வர்களின் பேராதரவு என்றும் துணை நிற்கும்.

இக்காலத்தில் ஒவ்வொருவரும் ஜீவிப்பதே கடும் போராட்டமாக இருப்பதாகவும், வறுமை, பாதுகாப்பின்மை, துன்பங்கள், போட்டிகள் இன்னும் பலவற்றாலும் தாங்கள் பாதிக்கப்படுவதாகவும் அவற்றினின்றும் தாங்கள் விலகி நிற்கமுடியாமல் இருப்பதாகவும் பலர் கவலைப்படுகின்றனர்.

இல்லற வாழ்க்கையில் நாம் பல விசயங்களைச் செய்து முடிக்கவேண்டும் என்பதில் எந்தத் தவறுமில்லை. மனைவி மக்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். பிள்ளைகளின் கல்விக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அவர்களுக்குத் தேவையானவற்றைக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு நோய் துன்பம் வராதபடி காப்பாற்ற வேண்டும். இப்படி முக்கியமான தேவைகளுக்கெல்லாம் நாம் பணமும் சொத்தும் சேர்க்கத்தான் வேண்டும். அதில் தப்பில்லை.

ஆனால் இப்படி நாம் சம்பந்தப்பட்டுள்ள அத்தனை விடயங்களிலும் அளவுகடந்த பற்றுதல் வைத்திருப்பது தான் தவறானதாகும். விருப்பு வெறுப்பற்று அவையெல்லாம் நமது கடமை என்று நினைத்து இவை அனைத்தையும் செய்வோமானால், அதீதமான பற்றுக்களிலிருந்து விலகி வாழலாம். அப்படி வாழும்போது, உடமைகளைத் தேடி அவற்றைக் கையாளுபவராகவும் அதேசமயம் உண்மையில் உலகைத் துறந்தவராகவும் வாழமுடியும்.

எண்ணற்ற மகான்கள் ஆயுள் முழுவதும் இல்லற வாழ்க்கையை நடத்திக் கொண்டே மகோன்னதமான பூரணத்துவத்தை அடைந்திருக்கிறார்கள்.

காவித்துணி துறவு வேண்டாம்! காற்சட்டை டம்பம் வேண்டாம்! பற்றற்ற வாழ்வு தரும் பரமபதம் என்ற நிலை.

*உன் வாழ்க்கையை நீ உண்மையாக நேசி.*

# அருளம்பல சுவாமிகள்

– *திருமதி துஷ்யந்தி சிறீகரன்* அவர்கள் –

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வண்ணார்பண்ணை சிவலிங்கப்புளியடியில் இராமநாதர் சின்னாச்சிப்பிள்ளை என்ற சைவ வேளாள தம்பதியர் வசித்து வந்தனர். இவர்கள் கீரைத்துரைமார் பரம்பரையைச் சார்ந்தவர்கள். இருவரும் சைவ சமயத்தில் நிறைந்த பற்றுள்ளவர்கள். சிவபக்தி நிறைந்த அடியார்களை வரவேற்று அமுது செய்து மகிழ்வார். அவர்கள் இருவருக்கும் கடைசிப் பிள்ளையாக கி.பி 1866ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் அட்சய வருடம் 2ஆம் திகதி அருளம்பலம் பிறந்தார். கல்வியில் மேன்மையுற்று விளங்கிய அருளம்பலம் யாழ்ப்பாணம் அக்கேடமியில் கல்வி கற்று வந்தார். இன்று அவ்விடத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளது. அந்நாளில் வைரமுத்துச் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் இந்தியாவிற்கு யாத்திரை செல்லும் வழக்கம் உடையவர். அவர் கடையிற் சுவாமிகளிடம் உள்ளத்தைப் பறிகொடுத்து யாழ்ப்பாணம் மீண்டார். ஒருநாள் செட்டியார் வீட்டில் ஒரு சுவாமிகள் வந்திருந்தார். அன்றுதான் கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாண மண்ணில் கால் வைத்த முதற் செய்தி. கடையிற் சுவாமி உணவு அருந்தும் வீடுகளில் ஒன்று சின்னாச்சிப் பிள்ளை வீடு. அங்கே அருளம்பலம் 3 வயது பாலகனாய் இருந்தபோது கடையிற் சுவாமிகளால் சோறு ஊட்டி ஆட்கொள்ளப்பட்டார். அருளம்பலம் யாழ்ப்பாணக் கச்சேரியில் பிரதம லிகிதராக மாகாணப் பதிவுப் பகுதியில் உத்தியோகம் பார்த்து வந்தார். இந்தக் காலத்தில் குழந்தைவேல் சுவாமிகளின்பால் ஈர்க்கப்பட்டு வாழ்ந்து வரும்போது உத்தியோக மாற்றம் காரணமாக மட்டக்களப்பு கச்சேரியில் காணிப் பதிவுக்காரராய் அமர்த்தப்பட்டார். இவருக்கு மேலதிகாரியாக சேர்.பொன். அருணாசலம் இருந்தார். அக்காலத்தில் மட்டக்களப்பில் சைவமும் தமிழும் கல்வி நிலையில் குறைவாக இருந்ததைக்கண்டு மட்டக்களப்பில் செல்வந்தராய் இருந்த திரு கே.வி மார்க்கண்டு என்பவரின் உதவியைப் பெற்று பல சைவப் பாடசாலைகளை நிறுவினார். ஒருமுறை குழந்தைவேல் சுவாமிகளும் அருளம்பலமும் நன்னித்தம்பி சுவாமிகளும் அடியார்கள் பலரும் மண்டைதீவு பக்கமிருந்து வந்துகொண்டிருந்தார்கள். அப்போது அருளம்பலத்தின் நண்பர் ஆறுமுகம் புகையிலைச் சிப்பங்களை ஏற்றிக் கொண்டு வந்ததைக் கண்டார்கள். அருளம்பலம் நண்பர் ஆறுமுகத்திடம் கடையிற்சுவாமி ஒடுங்கிக்கொண்டிருப்பதாக கூறினார். உடனே எல்லோரும் சேர்ந்து சென்றார்கள். அங்கே கால்களை மடக்கி இரு கைகளையும் தியானக் கோலவடிவில் மடியில் வைத்தவாறு நிலத்தில் எதுவித ஆதாரம் இன்றி சமாதியாகி இருந்தார். கடையிற் சுவாமிகள் அவரைச் சுற்றி தேஜஸ் மயமான ஒளி இருந்தது. இந்த ஆறுமுகத்தின் தந்தை கதிரவேலுவும் அருளம்பலத்தின் தந்தை இராமநாதரும் நெருங்கிய நண்பர்கள். பிற்காலத்தில் ஆறுமுகம் தனது மூத்தபிள்ளைக்கு அருளம்பலம் என்றே பெயர் இட்டார். இந்த ஆறுமுகம்தான் தனது பிற்காலத்தில் இந்தியாவின் ஸ்ரீ வில்லிபுத்தூரில் சமாதியாகி ஆறுமுகசாமி என்றும் அறியப்பட்டவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆரம்பகால நிர்வாகசபை உறுப்பினராக இருந்துள்ளார். இந்துக்கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தின் அடிக்கல் வைத்தவர்களில் சுவாமிகளும் ஒருவர். 1895ஆம் ஆண்டு இந்த

*உறுதியான உள்ளம் உலகை வெல்லும்.*

நிகழ்வு நடைபெற்றது. சைவபரிபாலன சபையிலும் உறுப்பினராக இருந்துள்ளார். இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் இந்து சாதனம் பத்திரிகைக்காகவும் பெரிதும் உழைத்தார். ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் இவருக்கிருந்த நுண்ணறிவும், விடாமுயற்சியும், சிறந்த தேசாபிமானமும், சமயாபிமானமும் சமூகத்தில் மிக உயர்ந்த இடத்தை இவருக்குப் பெற்றுக்கொடுத்தது. 1915ஆம் ஆண்டு தனது 49ஆம் வயதில் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றார். இவரின் குரு குழந்தைவேல் சுவாமிகளின் பேரில் நிறைய அபிமானம் உடையவர். சுவாமிகளின் பேரில் பாடிய அகராதிச் சரணமாலை இன்றும் கொழும்பு தேசிய நூலகத்தில் உள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அன்ன சத்திர மடம் ஒன்று உள்ளது. இந்த மடம் திரு வைரமுத்து செட்டியார் அவர்களுக்கு உரியது. கடையிற் சுவாமிகளின் உத்தரவில் சிலகாலம் அருளம்பல சுவாமிகள் அதனை நிர்வகித்தார்கள். இன்று அம்மடம் பாழடைந்து கிடக்கின்றது. அந்த வளவினுள் செட்டியாரின் குரு சின்னச்சுவாமிகளின் சமாதி ஆலயம் உள்ளது. அளம்பல சுவாமிகள் மட்டக்களப்பிலும் பல தொண்டுகளை ஆற்றியுள்ளார். அங்கு K.V. மார்க்கண்டு என்னும் செல்வந்தரின் உதவியைப் பெற்று மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் பல்வேறு சைவப் பாடசாலைகளை நிறுவினார். அத்தாத்வைத் அச்சியந்திரசாலை எனும் பெயரில் அச்சுக் கூடம் ஒன்றை நிறுவினார். அங்கு குழந்தைவேல் சுவாமிகள் பேரில் அவர் பாடிய அகராதிச்சரணமாலை என்னும் நூல் 1920இல் அங்குதான் பதிக்கப்பெற்றுள்ளது. குழந்தைவேல் சுவாமிகளின் சமாதி வழிபாடு, குரு பூசைத்தினம் ஆகியவற்றை சிறப்பாக நடத்தி வந்தார். தான் கண்ட கனவின் பிரகாரம் மட்டக்களப்பில் ஆரையம்பதிக்கு வந்து ஊர்ப் பிரமுகர்களை சந்தித்து குறித்த இடத்தை தோண்டிப் பார்த்தபோது ஒரு சித்தரின் சமாதி பிள்ளையார் உருவில் இருந்ததைக் கண்டு பக்தியோடு ஒரு பந்தல் அமைத்து அதில் பூசகராகவும் இருந்துள்ளார். 1916ஆம் ஆண்டு உருவான இந்தக்கோயில் சமாதடிப் பிள்ளையார் கோயில் என இன்றும் உள்ளது. கீரிமலையில் பல சீடர்களுடன் தங்கி இருப்பார். இங்ஙனம் சீவன் முத்தராய் திகழ்ந்த அருளம்பல சுவாமிகள் 1925ஆம் ஆண்டு (குரோதன) ஆனி மாதம் 28ஆம் திகதி அத்த நாளில் காலை 11 மணியளவில் தமது இல்லத்தில் தேகவியோகமானார். அடங்கும்போது அவருக்கு 59 வயது. சுவாமிகளின் தேகம் கீரிமலையில் 29ஆம் திகதி அதற்கென முன் கூட்டியே அமைக்கப்பட்ட ஸ்தானத்தில் சமாதி இருத்தப்பட்டது. இவரின் உருவப்படம் கனடாவின் மொன்றியல் நகரிலும், தென் அமெரிக்காவின் சிலியிலும் இன்றும் உள்ளது. இவரின் சமாதிக் காரியங்களை இவர் சீடர்களான நவாலியூர் இ. வைத்திலிங்கம், கார்த்திகேசர் போன்றோரால் நிறைவேற்றப்பட்டது. ஸ்ரீ. இ. அருளம்பல சுவாமிகள் பேரில் அவரது சீடர் நவாலியூர் இ. வைத்திலிங்கம் அவர்களால் பாடிய பாடலில் ஒரு பந்தியை தருகிறேன்.

**ஆரண மாகம கலைகளு மம்புயனும்**
**நாரண வானவர் நாபரி யானம் பவமொழிதற்**
**காரண மேனிய னாயெழு கண்ணுத லான்கடவுட்**
**பூரண னாமரு ளம்பல வெந்தையைப் போற்றுவமே.**

ஓம் நமச்சிவாய

**குறிப்பு:**

இக்கட்டுரைக்கு பெரிதும் உதவியது எனது தந்தை திரு ஆனந்த நடராசா மித்திர தேவா, சுவாமிகளின் பூட்டன் திரு சிவகுமாரின் துணைவி, திருமதி தேவசேனை, பண்டிதர் மு. கந்தையாவின் ஈழத்து சித்தர்கள் என்ற நூலும், கலாநிதி க. குணராசாவின் யாழ்ப்பாணத்து ஆறுமுகசாமி என்ற நூலும்.

# கதிர்காம யாத்திரை -எனது அனுபவம்- (தொடர்ச்சி...

-செல்வி சி. நிலா அவர்கள்-

வருடா வருடம் கதிர்காம உற்சவ காலங்களில் ஐயாவோடு வருகின்றபொழுது மனதில் எழும் ஆவலைவிட முதன் முதலாக கதிர்காமம் பற்றி ஒன்றும் தெரியாத நிலையில் அவனது வாசலில் வந்து இருந்தபொழுது எனது மனம் அலைபாய்ந்துகொண்டு இருந்தது. அதற்குக் காரணம் ஆலயச் சூழலும் அங்கு இடம்பெற்றுக்கொண்டிருந்த நிகழ்வுகளும் என்றுதான் சொல்ல வேண்டும். எம்மூரில் இருப்பதுபோல் ஆலயம் மிகவும் பெரிதாக இருக்கும் என்ற எண்ணத்திற்கு நேர்மாறாக சிறிதாகவே காட்சியளித்தது. ஆனாலும் கதிர்காமம் என்ற பெயர் எவ்வளவு பிரசித்தம்பெற்று இருந்ததுபோல ஆலயம் சிறிதாக இருந்தாலும் அதன் மகிமை மிகவும் பெரிதாகவே மதிக்கப்பட்டதை அங்கு கூடியிருந்த அடியார்கள் மூலமும் ஆலயச் சூழலும் எனக்கு உணர்த்தின



அங்கே இடம்பெற்ற நிகழ்வுகளை என் மனம் அலசி ஆராய்ந்துகொண்டு இருந்தவேளை முருகனுக்கு பூசை ஆரம்பமாயிற்று. அப் பூசை வழிபாட்டில் ஆலயத்தோடு தொடர்புபட்டவர் களைத் தவிர வேறு ஒருவரும் பங்குபற்ற முடியாதபடி கயிற்றின் வெளியே அமர்ந்திருந்தார் கள். பூசை வழிபாடு முடிந்ததும் நான் முன்பு குறிப்பிட்டபடி முருக யந்திரம் அமைந்த பேழையை பெரிய கம்பளம் ஒன்றால் மூடி பட்டாடைகளாலும் மலர் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட யானையின்மேல் ஏற்றும் பணி ஆரம்பமாயிற்று. பேழையை ஏற்றியபின் ஒரு கப்புறாளை பேழை யைப் பிடித்தபடி யானையின்மேல் வீற்றிருக்க யானை வீதிவலம் வருவதற்கு ஆயத்தமாகியது.

*செய்ய முடிந்தவன் சாதிக்கிறான். செய்யமுடியாதவன் போதிக்கிறான்.*







யானை நகர்ந்து முருகன் வாயிலுக்கு நேர் எதிரில் வந்ததும் நிகழ்வுகள் ஆரம்பம் ஆயிற்று. சுவாமி வீதியுலாவில் இடம்பெறும் நிகழ்வுகளைப் "பெரஹறா" என பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள் அழைக்கின்றனர். ஏனெனில் சுவாமி ஊர்வலத்திற்கு முன்னால் பலவித நிகழ்வுகள் இடம்பெறத் தொடங்கியது. அதன் ஆரம்ப நிகழ்வாக நீண்ட கயிற்றினுள் வெடி மருந்தை வைத்து பின்னியிருப்பார்கள். அக் கயிற்றை சில இளைஞர்கள் சுழற்றும்பொழுது அதற்குள் வைக்கப்பட்டிருக்கும் வெடி வெடித்து ஒலி எழுப்பியபடி இருந்தது. அதைத் தொடர்ந்து தீப்பந்தம் விளையாட்டு இடம்பெற்றது. அதன் பின்னே பாடசாலைகளில் நடைபெறும் பாண்ட் வாத்திய இசையுடன் கூடிய அணிவகுப்பு (பெண்கள்) நடைபெற்றது. உண்மையில் அந் நிகழ்வைப் பார்க்கையில் இவ்வளவு கவர்ச்சிகரமாக இந்நிகழ்வை நடத்தமுடியுமா? என்ற எண்ணம் எனது மனதில் தோன்றியது. ஏனெனில் அந்நிகழ்வில் பங்குபற்றிய பெண் பிள்ளைகளின் உடை அலங்காரம் முதற் கொண்டு அவர்களது செயற்பாடுகள் எம்மைப் பிரமிக்க வைத்தது. அதனைத் தொடர்ந்து காவடி ஆட்டம், கரகாட்டம், மயில் நடனம், அருவி வெட்டு போன்ற பல நிகழ்வுகள் வீதியில் கூடியிருந்த அடியார்கள் பார்க்கும் வண்ணம் இடம்பெற்றது. இரண்டு மூன்று நிகழ்வுகளுக்கிடையில் அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்றும் நிகழ்வின் இசைக்கு ஏற்ற வகையில் தலையை ஆட்டியபடியே சென்றது. ஏறக்குறைய பத்து யானைகள் அளவில் சுவாமியின் வீதியுலாவில் பங்குபற்றுவதைக் காணக் கூடியதாக இருந்தது. இந்நிகழ்வுகளைப் பார்த்த பொழுது பங்குபற்றும் பிள்ளைகளின் உடை அலங்காரம், நிகழ்வுகளுக்கு ஏற்ற வகையில் அவர்கள் செய்யும் பாவனைகள், அதற்கமைவாக பக்க வாத்தியங்கள் மூலம் எழுப்பப்படும் இன்னிசை, இந்நிகழ்வுகளை எல்லாம் வழிப்படுத்தும் ஆசிரியர்கள் சொல்லவே முடியாது.

தேவைப்படுவதைப் பெறுவதற்கு தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டே இருங்கள்.

அவ்வளவு பிரமிப்பு நமக்கு. கிராமியக் கலைகளை எந்தவிதமாகப் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்து அதனை நடைமுறைப்படுத்துவது என்பது மிகக் கடினமானது. ஆனால் இச் செயற்பாட்டினை சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் அநாயசமாக அப் பிள்ளைகள் செய்வது போற்றப்பட வேண்டியதே. எமது மண்ணில் இந் நிகழ்வுகளைக் காண்பதே அருமை.





நிகழ்வுகளைத் தொடர்ந்து ஆலயத்தோடு தொடர்புபட்டவர்கள் வெண்ணிற உடைகளை அணிந்தபடி கைகளில் வேல்களுடன் அணிவகுப்பாகவும் அமைதியாகவும், அதனைத் தொடர்ந்து ஆலய தரிசனத்துக்கு வந்த பிரமுகர்களும், அவர்களுக்கு முன்னே தோளில் கோடரியும், வில் அம்புடன் வேடர் குலத்தினரும் வந்துகொண்டிருந்தனர். இவர்கள் அனைவரும் முன் நகர பேழை தாங்கிய யானையும் நகர ஆரம்பித்தது.





பிறந்துவிட்டோம் என்று வாழாதே. இனி பிறக்கப்போவதில்லை என்று நினைத்து வாழுங்கள்.

முருகன் வாசலை விட்டு நகர்ந்த யானை பிள்ளையார் வாசலுக்குமுன் வந்து நின்றது. உடனே பிள்ளையார் ஆலய பூசகர் உட்பட அவரோடு இணைந்து ஐயாவும் மற்றும் அடியார்களும் சுவாமியின் யானைக்கு அருகே வந்து பூசை வழிபாட்டை மேற்கொண்டார்கள். இச் செயற்பாடு முடிவுற்றதும் சுவாமி வீதி உலா ஆரம்பமாயிற்று. ஐயாவும் அவர்களுடன் இணைந்து கொண்டார். சுவாமிக்குப் பின்னே அடியார்கள் பஜனை நிகழ்வுடன் வந்துகொண்டிருந்தனர். சுவாமி உள்வீதியை விட்டு வெளியே வரும்பொழுது வெளியில் உள்ள மேடையில் ஒரே அடியார் கூட்டம். நடந்துகொண்டிருக்கும் நிகழ்வுகளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்கள். நாமும் ஒரு வழியாக வெளியே வந்து மேடைமேல் ஏறிநின்று நிகழ்வுகளைப் பார்த்தோம். உள்ளே இருந்து பார்த்ததைவிட வெளியில் இருந்து பார்க்கும்போதுதான் நிகழ்வுகளின் சிறப்பு எமக்கு விளங்கியது. உண்மையில் நாம் ஒவ்வொருவரும் பார்க்கவேண்டிய நிகழ்வு. ஒவ்வொரு நிகழ்வுகளிலும் இருபத்தைந்து பிள்ளைகளுக்கு மேல் கலந்து அந் நிகழ்வுக்குரிய பயிற்சி பெற்று சுமார் ஒரு மணித்தியாலத்துக்குமேல் தொடர்ந்து ஆடுவது என்பது இலேசான காரியமல்ல. கதிர்காமக் கந்தனது தலத்தில் சளைக்காது ஆடுவதுடன் முகத்தில் எவ்வித சோர்வும் காணமுடியாதபடி வந்து கொண்டிருந்தது கந்தனது பேரருள் என்றே கூறவேண்டும். நிகழ்வின் நடுப்பகுதியில் வள்ளி அம்மன் ஆலயத்தை யானை அண்மித்து மேடைக்குச் சமீபமாக வந்து நின்றது. உடனடியாக யானை மேலிருந்து பேழையை இறக்கி கம்பளத்தால் மூடி ஆலயத்துக்குள் கொண்டு சென்றார்கள். நிகழ்வு நடைபெற்ற சமயம் சுவாமி வீதி ஊர்வலத்தோடு வந்த வேடுவர்களுக்கு வள்ளி அம்மன் வாசலில் எமது ஐயா அவர்கள் நெற்றியில் திலகமிட்டு பன்னீர் தெளித்து அவர்களை வரவேற்ற நிகழ்வு நாம் எங்கும் காணமுடியாது. ஐயாவுக்கும் கதிர்காம வேலவன் அளித்த கொடை என்றுதான் நினைக்கத் தோன்றியது. அதனைத் தொடர்ந்து எமது குழுவினருக்கும் விபூதிப் பிரசாதம் வழங்கினார். சிறிது நேரத்தில் வள்ளி அம்மன் ஆலயத்தில் இருந்து பேழையைக் கொண்டு வந்து யானை மேல் ஏற்றி வீதிஉலா இடம்பெற்றது. நிகழ்வு முடிந்தகையோடு நாம் எமது விடுதியை அடைந்தோம். நாம் எமது இரவு உணவுச் செயற்பாட்டை முடித்தபின் ஐயா நாமிருக்கும் இடத்திற்கு வந்து, நாம் கதிர்காமத்திற்கு வந்தது பெரிதல்ல. நாளை காலையில் இடம்பெறும் பூசையில் கலந்து கொள்வதுதான் முக்கியம். அந்தப் பூசையின் வழிபாட்டில்தான் எமது மனம் ஒன்றித்து வழிபடலாம். அவ்வளவு புனிதமானது. ஆகையால் நீங்கள் அனைவரும் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து உங்கள் காலைக்கடன்களை முடித்து ஐந்து மணிக்கு நடைபெறும் பூசை வழிபாட்டில் அனைவரும் பங்குபற்ற வேண்டும். யார் வந்தாலும் வராவிட்டாலும் நான் போய்விடுவேன். நான் எக்காலத்தும் வந்தாலும் அப்பூசையைப் பார்க்கத் தவறுவதில்லை என்று கூறியதற்கிணங்க அதிகாலைப் பூசையில் பங்குபற்ற வேண்டும் என்னும் திடத்துடன் அன்றைய பொழுது கழிந்தது. (தொடரும்...



*காயங்களின்றி காலம் எதையும் கற்றுக்கொடுப்பதில்லை.*





எத்தனை கைகள் என்னைத் தள்ளிவிட்டாலும் என் நம்பிக்கை என்னைக் கைவிடாது.





நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார். ஓடுவது முள் அல்ல, உன் வாழ்க்கை.





முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக்கொள். எஜமானாகும் தகுதி தானாகவே வந்துவிடும்





விழுதல் என்பது வேதனை. விழுந்த இடத்தில் மீண்டும் எழுதல் என்பது சாதனை.

# சந்நிதிப் பெருமாளே!

வேலுமயில் பெற்ற நின்புகழ்
ஏலுவரை சுத்த செந்தமிழ்
வேளைதவ றற்ற சந்நிதியில் மொழிவாரை
மேவியவர் பக்தி கண்ட பின்
தேவியரும் பக்கம் வந்திட
மேலுலகில் வைத்து நின்னருள் தருவாயே
நாலுதிசை மெத்தி நின்ற உன்
வானளவு முற்ற நின்கழல்
நானுமறி யத்தந் தென்தனைப் பலநாளும்
நாலுகவி செப்பி நின்றிட
நாககிரி யுற்ற உந்தனின்
நாதநிலை எற்கும் தந்தருள் புரிவாயே
மாலுமயன் மற்ற இந்திரன்
ஆனதெவ ரெய்த்து வந்தனை
மாலையினைச் செப்பி நின்றிட இனிநீவிர்
வானினுல கத்தை இன்றடை
வீரெனவும் வைத்த இன்னருள்
வாயதனை நம்பும் அன்பருக் கழிவேது
பாலுதயிர் மற்றச் செங்கனி
சோலைதனி லுற்ற மங்கல
மாமலரும் பெற்ற தந்தியின் முகவோனும்
பாவதனின் அர்த்தம் என்றுரை
பாரதியும் பக்கம் உன்னிரு
பாவையரும் உற்ற சந்நிதிப் பெருமாளே.

– முருகன் அடியார் –

பதிவு இல: QD/78/NEWS/2020

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

